

# ஞானச்சுடர்

புரட்டாதி

2011



ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குறள்வழி



**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு.**

**பொருள் :** கையிற் பொருள் இருக்கும்போது விருந்தினரைப் பேணாமல் இருப்பதே வறுமையாவது; விருந்தினரைப்– பேணாதிருக்கும் மூடத்தன்மை அறிவில்லாதவர்களிடத்தில் காணப்படும்

(89)

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**

**பொருள் :** அனிச்சம்பூ முகர்ந்து பார்த்தால் வாடும்; விருந்தினரோ, விருந்தளிப்பவரின் முகம் வேறுபட்டுத் தோன்றினால் வாடுவர்.

(90)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### தங்கமே எல்லாஞ் சிவ மயமே

**எட்டாத கொப்புக்கு ஏணிவைத்துப் பூப்பறித்து**
**முட்டாத பூசைசெய்தேன் - தங்கமே**
**முன்னுமில்லைப் பின்னுமில்லை** 01

**அட்டாங்க யோகம்விட்டேன் ஆதாரம் ஆறும்விட்டேன்**
**மட்டாருங் குழலாளே - தங்கமே**
**மருமமெல்லாங் கண்டேனடி** 02

**கட்டாத மனத்தைக்கட்டி காலாலே கனல்வீசி**
**நிட்டையிலே நானிருந்தேன் - தங்கமே**
**நீநானங்கு இல்லையடி** 03

**தட்டா னிடத்துச்சென்று தங்கத்தாலே தாலிசெய்து**
**கட்டாமல் கட்டினேன்டி - தங்கமே**
**காரணத்தைக் கண்டேனடி** 04

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 02 சுடர் - 165

2011 புரட்டாதி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நவராத்திரியும்.... | செல்வி செ. ஜடா | 01- 02 |
| வித்தகா! உன் ஆடல்.... | திருமதி பா. சிவனேஸ்வரி | 03- 05 |
| விரதத்தின் மகிமை | செல்வன் மு. நித்தியானந்தா | 06- 07 |
| திருமந்திரம் கூறும்... | செல்வி த. அம்பாலிகா | 08- 11 |
| சிவயோக சுவாமிகள் | ம. சிவயோகசுந்தரம் | 12- 15 |
| அன்பும் இறைஇயலும் | த. நாகராசா | 16- 17 |
| சொற்றமிழ் பாடுக | ச. லலீசன் | 18- 20 |
| பரிபாடல் பரும்... | சிவ சண்முகவடிவேல் | 21- 22 |
| பிரச்சினைகளை வரவேற்... | ஜக்கி வாசுதேவ் | 23- 24 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 25- 26 |
| சிறுவர் கதைகள் | - | 27- 29 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 30- 31 |
| இந்துக்களின்... | காரை எம்.பி. அருளானந்தன் | 32- 33 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 34- 37 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 38- 39 |
| நித்திய அன்னப்பணி | - | 40- 41 |
| மங்கல விளக்கேற்றல் | இரா. சாந்தன் | 42- 44 |
| கந்தனே கலியுகத்... | கே.வி. குணசேகரம் | 45- 47 |
| தகவற் பக்கம் | வல்வைச் செல்வம் | 48- 50 |
| அகவை எட்டில்... | திருமதி ல. கவிதா | - 51 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 52- 55 |
| சுந்தர மகாலிங்க மலை | இரா. செல்வவடிவேல் | 56- 58 |
| சந்நிதியான் ஆச்சிரமமும்.. | வல்வையூர் அப்பாண்ணா | 59- 66 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வெளியீட்டுரை:-**

ஆவணிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை நீண்டகாலமாகவே ஆச்சிரமத்துடன் நெருங்கிய தொடர்புடையவரும், யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் அதிபருமான இரா. ஸ்ரீநடராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டுரையின்போது ஆற்றங்கரை வேலவனின் அருளாசியோடு, ஆச்சிரமத்தில் நடைபெறுகின்ற சமய, சமூகப் பணிகளையும் அப்பணிகளின் சிறப்புக்களையும் எடுத்துரைத்தார். அத்துடன் இம்மலரில் இடம்பெறும் கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள் யாவும் எளிமையான சொற்பிரயோகங்களையும், நிறைந்த கருத்துக்களையும் கொண்டு பலவித இடர்பாடுகளின் மத்தியிலும் தொடர்ந்து பிரகாசிக்கும் 164ஆவது சுடரினை வெளியிட்டு வைப்பதில் தான் பெருமையடைவதாகவும், ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளுக்கும் சைவ மக்களாகிய நாங்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டும் எனவும் வேண்டி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஆவணிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை பிரபல எழுத்தாளரும், இளைப்பாறிய பிரதி அதிபருமாகிய திரு க. நடேசு (தெணியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள்

அவர் தனது ஆரம்ப உரையில் இவ்வகையான மலர் வெளியீடுகளின்போது தானும் சமீபகாலத்தில் அமரராகிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் கலந்து கொண்ட பலவித நிகழ்வுகளையும் எடுத்துக்கூறியதோடு, திரு சிவத்தம்பிக்கும் செல்வச்சந்நிதி ஆலயத்துக்கும் உள்ள ஈடுபாட்டினையும் விளக்கிக்கூறினார். அத்துடன் ஆனிமாத ஞானச்சுடரிலும் அவரை நினைவு கூர்ந்த பேரவையினருக்கு பாராட்டும் தெரிவித்தார்.

பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலரானது திருக்குறள், நற்சிந்தனை, பொன்மொழிகள், பாடல்கள் எனப் பல ஆக்கங்களையும் உள்ளடக்கி பலதரப்பட்ட வயதினருக்கும் பயன்படக்கூடிய வகையில் நல்ல சமய சமூகக் கருத்துக்களைத் தாங்கி வருகின்றது எனவும், இம்மலர் ஆரம்பித்த காலம் தொடக்கம் இற்றைவரை வருடாவருடம் ஒரு மாத மலரின் மதிப்பீட்டுரையை நிகழ்த்தி வருவதையிட்டு நான் பெருமையடைகின்றேன் என்றும் கூறினார்.

மாதந்தோறும் தொடர்ந்து வெளிவரும் இம்மலரில் உள்ளடக்கிய கட்டுரைகள் ஒவ்வொன்றையும் சபையில் உள்ளவர்களுக்கு விளக்கிக் கூறியதோடு சகல சைவ மக்களும் இஞ்ஞானச்சுடர் மலரினை வாசித்து மேன்மையடைய வேண்டும் எனக்கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

எமது பாரம்பரிய கல்வி முறையில் காணப்பட்ட குருசீட உறவுமுறை மிகவும் போற்றத்தக்கதாக இருந்தது மட்டுமன்றி அன்றாட வாழ்க்கைக்கு ஏற்ற நற்பிரசைகளாக மாணாக்கர்களை பக்குவப்படுத்துவதாகவும் அது அமைந்திருந்தது.

தற்காலக் கல்விக் கொள்கைகளிலும், கல்விச் செயற்பாடுகளிலும் எவ்வளவுதான் முன்னேற்றங்களும், மாற்றங்களும் ஏற்பட்டாலும் அன்றாட வாழ்க்கையில் திருப்தியடையக்கூடியதான முழுமையும், நிறைவும் இல்லையே என்ற ஆதங்கம் கீழைத்தேச நாடுகளில் மட்டுமன்றி, மேலைத்தேச நாடுகளிலும் காணப்படுகின்றது.

இதில் பல்வேறு புறக்காரணிகள் தாக்கம் வகித்தாலும் ஆசிரிய மாணவ உறவுகளில் பேணப்பட வேண்டிய தூய்மையான உறவுமுறை அற்றுப்போனதும், கல்வி என்பது வியாபார நோக்கம் கொண்டதாக மாறி வருவதும் முக்கிய காரணங்களாக நோக்கப்படுகின்றன.

இந்த நிலையில் எமது பாரம்பரிய கல்விமுறையின் சிறப்பை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம் போன்ற எமது பாரம்பரிய கலைகளை கற்கும் பொழுது இன்னும் ஓரளவுக்குத்தன்னும் குருசீட உறவுமுறை பேணப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம்.

குருவிடம் கல்வி கற்கும் பொழுது மட்டுமல்ல கல்வி கற்று உலகம் போற்றும் உயர் நிலைக்கு வந்த பின்பும் குருவினுடைய பாதங்களில் விழுந்து வணங்கும் பண்பை உலக ஆசிரிய தினத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் நாம், ஒருமுறை சிந்தித்துப் பார்பது சிறந்ததல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதியானின் பெருஞ் சிறப்பு

(கட்டளைக் கலித்துறை)



நன்றாக யாவர்சொலும் வார்த்தையைக் கேட்டுடன் நன்மனமே
இன்றும் பிறப்பும் மற்றும் என்றாயினுஞ் செல்வச் சந்நிதிபோய்
குன்றா வனப்புடன் கோல மயில்மேற் குமரனையே
ஒன்றாய்ப் பணிந்துனை யேத்தின்வருந் துன்ப முறுவனவே

அருவினை யகலகி யாடும் முருகனவன் வாவைபத்தில்
பொருளுடன் சந்நிதியில் அடியார் தம்மைப் புரிந்தருள்வான்
இருந்தவா றாதுஞ் ஏனைய நல்லவை எய்தவைப்பான்
சுருக்கமாக வேத சிவாகம் மாதையுஞ் சொல்லு மதையே

திருப்புக ழோடு அன்பர் அருணகிரி தேனாயாத்த
பெரும்புக ழான அலங்கார மற்றும் அநுபூதியும்
ஒருப்படப் பாடியே யேத்தின் முருகன் நம் தெய்வமதின்
விருப்புடன் கேட்டு விரும்பிய யாவும் விரைந்தருள்வே

விரத மிருந்தும் வாவநீ ஆராவமை வேண்டி நின்றும்
சரதமாய்ச் சந்நிதி சார்ந்த முருகன் சரணம் புகின்
கரும் புகா வண்ணம் கருத்துடன் நோக்கி கருணைசெய்வான்
ஒருப்பட நான்கண்ட சந்நிதியான் செயல் ஒன்றல்லவே

சிந்தித்தும் வந்தித்தும் சேயோன் முருகனைச் சந்நிதியில்
முந்தித் தொழுதவன் முன்னைய ஆடலைப் பாடல் தனை
சந்திக்கின் நீரில்லை சன்மம் எடுத்தது வீணாகாதே
புந்திக்கு நன்மருந் தென்றிதனைச் சொன்னேன் புரிந்துய்மினே

முதுபெரும்புலவர்,
கலாபூஷணம், ஆசிரியர் வை.க. சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்பும் பிரதி பெறுவோர் விபரம்

Dr. M. யோகேஸ்வரதேவர்
(நெல்லியடி, கரவெட்டி)

Dr. K.இராதாகிருஷ்ணன்
(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

Dr. G. உதயசீலன்
(சுதுமலை, மானிப்பாய்)

தலைவர்
(தெல்லிப்பளை, ப.நோ.கூ.ச.தலைமையகம்)

இ.சுரேந்திரன்
(கொமர்சியல் வங்கி, சுன்னாகம்)

க. சொர்ணவடிவேல்
(கதிர்காமசிங்கம் அன்சன்ஸ், அளவெட்டி)

வே. தர்மராசா
(பொதுமுகாமையாளர், சுன்னாகம்)

செ. புவனேந்திரராசா
(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

செல்லையா சிவசம்பு
(இளை.அதிபர், வளலாய்)

த. சிவகுருநாதன்
(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

காரை. M.P அருளானந்தம்
(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

இ. சுப்பிரமணியம்
(இளை.கிராமசேவையாளர், ஏழாலை)

ப. நடராசாக்குருக்கள்
(ஆவரங்கால், புத்தூர்)

சீ. முருகவேள்
(கிராமசேவையாளர், இடைக்காடு)

N .குமாரசாமி
(சங்கரத்தை, வட்டுக்கோட்டை )

க. ஸ்ரீஸ்கந்தராசா
(பிரதி அதிபர், அச்சுவேலி மத்திய கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. குமாரதாசன்**
(பொது சுகாதார பரிசோதகர், தும்பளை)
**க. இரத்தினம்**
(இளை. கிராமசேவையாளர், கரணவாய்)
**வ. இராசையா**
(வத்தனை, புலோலி)
**சோ. தனராசா**
(வாணிமஹால், வட்டுக்கோட்டை)
**நாகேந்திரம் கண்ணம்மா**
(மானிப்பாய்)
**வ. கந்தசாமி**
(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)
**சி. சிவச்செல்வம்**
(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)
**கு. மதனமோகன்**
(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)
**சி. பகீரதன்**
(பிள்ளையார் கோயிலடி, கெருடாவில்)
**க. கந்தசாமி**
(வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)
**ஆ. திருநாவுக்கரசு**
(இணுவில் மேற்கு)
**நா. கனகலிங்கம்**
(தபால் வீதி, கொக்குவில்)
**ரஞ்ஞனசாந் ஜஷாந்**
(யாழ்ப்பாணம்)
**க. வக்சலாதேவி**
(பூமகள் வீதி,அரியாலை)
**சு. பேரம்பலம்**
(புன்னாலைகட்டுவன் தெற்கு)
**து. இராசகுலநாயகம்**
(கைதடி)
**A. சிவதாசன்**
(மதவடிலேன், சுதுமலை)
**R. கணேசலிங்கம்**
(உரும்பராய்)
**சு.சண்முகசுந்தரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**க. தெய்வானைப்பிள்ளை**
(V.M. றோட், பருத்தித்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம. நிர்மலதாசன்**
(தில்லையர்கடையடி, கம்பர்மலை)
**நா. ஸ்ரீகணேசன்**
(சங்கானை)
**திருமதி. ப. தேவமனோகரன்**
(கந்தபுஷ்கரணி, நவாலி)
**K. அருண்பிரசாத்**
(வெள்ளவத்தை)
**அ. ஆறுமுகம்**
(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)
**கயிலைநாதன் மங்களகாந்தி**
(வேழலகம், ஆனைக்கோட்டை)
**க. கணேசலிங்கம்**
(சரவணபவனம், இணுவில் மேற்கு)
**இ. சர்வேஸ்வரன்**
(கலைவாணி வீதி, கோண்டாவில்)
**த. விசயகுமாரன்**
(பழம்றோட், கந்தர்மடம்)
**செல்வி. சு. பகீரதி**
(செட்டித்தெரு, நல்லூர்)
**சி. யோகராசா**
(ஏழாலை மேற்கு, சுண்ணாகம்)
**கனகேஷ்வரன் பிரகாஷ்**
(கைதடி கிழக்கு)
**சி. செல்வரத்தினம்**
(புன்னாலைக்கட்டுவன்)
**சு. சத்தியேந்திரன்**
(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
**சி. சகுந்தலாதேவி**
(வங்களாலேன், மல்லாகம்)
**ஆ. விபுலானந்தராசா**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**ம. நாகேஸ்வரி**
(நவிண்டில்)
**த. லதாசந்திரிக்கா**
(மகாத்மா வீதி, நெல்லியடி)
**க. நற்குணராஜா**
(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ. இராஜேஸ்வரி**
(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)
**சு. நவரட்ணம்**
(முத்தமிழ் வீதி, கொட்டடி)
**த. பூபாலன்**
(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)
**கா.ஆ. சச்சிதானந்தம்**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
**மா. கிருஸ்ணம்மா**
(கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்)
**செ. கேஷிகன்**
(அரசடி வீதி, திருநெல்வேலி)
**நா. கமலநாதன்**
(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)
**ஆ. புவனயோகேஸ்வரன்**
(தொம்பை வீதி, சுண்ணாகம்)
**செ. சோதிப்பெருமாள்**
(சரஸ்வதி மஹால், இணுவில்)
**க. பரணிதரன்**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. தர்மஜெயசூரியர்**
(இளை. இ.வ. உத்தியோகத்தர், உரும்பராய்)
**கி. சிவப்பிரகாசம்**
(புலோலி தெற்கு, புலோலி)
**R. ஜெயராஜ்**
(சிவராஜ் றேடிங்கோ, பருத்தித்துறை)
**க. இரவிச்சந்திரன்**
(சாயிகிருஷ்ணா, வதிரி)
**திருமதி ஸ்ரீரஞ்ஜினி ஸ்ரீகரன்**
(கதிர்காம கோயிலடி, வதிரி)
**Dr. வை. தியாகராஜா**
(முத்திரைச் சந்தி, யாழ்.)
**சி. மகாலிங்கம்**
(நீர்வேலி மேற்கு, நீர்வேலி)
**சி. வேலாயுதம்**
(வதிரி, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரியும் நலம் அருளும் நாயகியர்களும்

செல்வி செ. [illegible]

ஒன்பதுநாள் கொண்டாடப்படும் சிறப்புவாய்ந்த "நவராத்திரி" சக்தியின் பெருமையை உணர்த்துகிறது. சூரியன் கன்னியில் இருக்கும் கன்னிமாதம் வளர்பிறை பிரதமையில் கொண்டாடப்படுவது நவராத்திரி. துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி இம்மூவரையும் முறையே ஒவ்வொருவருக்கும் மூன்று தினமாக பூசித்து மகிடன் (மகிஷன்) என்ற அரக்கனை துர்க்கை அழித்த பத்தாவது நாள் "விஜயதசமி"யாகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் பண்டிகை தீய சக்தியை அழித்து வெற்றி கொண்டு தர்மத்தை நிலைநாட்டுவதைக் குறிக்கிறது.



மகிடம் என்றால் எருமை. சோம்பல், தூக்கம், தாமசம் ஆகிய குணங்களைக் கொண்ட எருமை சேற்றில் ஆழ்ந்திருப்பதுபோலும், மனிதனின் தாமோகுணத்துக்கும் தொடர்பு உண்டு. அறியாமை என்னும் இருட்டில் அமிழ்ந்திருக்கும் மனித மனம் சோம்பல், தூக்கம், தாமசம் ஆகியவற்றை எதிர்த்து வெற்றி கொண்டால்தான் இறைவனை அடைய முடியும் என்ற அரிய தத்துவத்தை "நவராத்திரி" நமக்கு உணர்த்துகின்றது.



சக்தியெல்லாம் ஒன்றுதானே, பின் ஏன் மூன்று தேவியர்? அதற்கும் காரணம் இருக்கிறது. தீயவற்றை துன்பமானவற்றை, துக்கத்தைப் அழிக்க சக்தி வேண்டும். அந்தச் சக்தியை அளிப்பவள் துர்க்கை. எனவேதான் முதல் மூன்று நாள் சக்தி கிடைக்கத் துர்க்கையை வழிபடுகிறோம். சக்திக்கு துணையாய் பொருள் வளம் வேண்டுமே! "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை". பொருள் வளம் கொண்டு மனிதன் நிலையிய காரியத்தை நிறைவாக்குமாறு செய்யமுடியும். இந்தப் பொருள் வளத்தை அளிக்கக்கூடிய திருமகளாம் "லக்ஷ்மியை" அடுத்த மூன்று நாள் வழிபடுகிறோம். சக்தி மற்றும் செல்வத்தைச் சரிவர பயன்படுத்த அறிவு வேண்டுமல்லவா? இந்த அறிவும் செல்வத்தை அளிக்கக் கூடியவள் "சரஸ்வதி". ஆகவேதான் அடுத்த மூன்று நாள் சரஸ்வதியை வழிபடுகின்றோம். சக்தி, பொருள், புத்தி இந்த மூன்றும் மனித முயற்சி சேரும்போது மனிதனுக்கு துன்பத்தை எதிர்கொண்டு அதை



அழிக்கும் துணிவு பிறக்கிறது. இதுமட்டுமன்றி நவராத்திரி அன்று பொம்மை கொலுவைக்கும் பழக்கமும் உண்டு. பிரபஞ்சம் அனைத்துவகை உயிரினங்களையும் உள்ளடக்கியது. உயிரினங்களிலிருந்து தெய்வச் சிலைகள் வரை அனைத்தும் படிப்படியாக வைக்கப்பட்டிருக்கும்.

இறைவன் அனைத்துயிர்களிலும் நிறைந்திருக்கின்றான். இப்பொழுது எடுத்துள்ள அரிய மானிடப் பிறவியிலிருந்து இன்னும் உயர் நிலையை மனிதன் படிப்படியாக அடைய முடியும். மண்பொம்மை போல் மனித வாழ்வும் நிலையில்லாதது என்ற மூன்று அரிய தத்துவங்களை கொலுமூலம் நாம் உணர முடிகிறது.

எனவே மனிதன் தீமையை அழித்து, நன்மையை நிலைநாட்டி இறையருள் என்னும் அனுபவத்தை அடைந்து இன்புற வாழவேண்டும் என்பதை உணர்த்தும் இந்தப் பண்டிகையை சிறப்புடன் கொண்டாடி மகிழ்வோம்.

---

# பன்னீர்ப் பத்திரங்களின் தனிச்சிறப்பு

இறைவழிபாட்டிற்கு உகந்த பச்சிலைகளில் பன்னீர்ப்பத்திரம் தனிச்சிறப்புடையது. திருச்செந்தூரிலே முருகனுக்கு அபிடேகம் செய்த விபூதியைப் பன்னீர் இலைகளில் வைத்து வழங்குவார்கள். முருகப் பெருமானுடைய பெருமையைப் போதிக்கின்ற சகலபேதங்களும் ஒன்றுகூடி குமரப்பெருமானின் மகிமையை விளக்கப் பன்னீர் மரங்களாகத் திருச் செந்தூரிற் தோற்றங்கொண்டன. இத்தகு சிறப்புடையதான பன்னீர்ப் பத்திரங் களைச் சிவபூசைக்கும் மற்றும் பல வழிபாட்டுத் தேவைகட்கும் சிறப்பாகப் பயன்படுத்துவார்கள். பன்னீர் இலையிற் காணப்படுகின்ற பன்னிரு நரம்பு களும் முருகனுடைய பன்னிருகரத்தைப் போன்றனவாகும். மேலும் பன்னீர் இலைகள் திருநீற்றைப் பாதுகாப்புடன் வைத்துக்கொள்வதுடன், திருநீற் றுடன் சேர்ந்த பன்னீர் இலைகளையும் சாப்பிடுவதனாற் பல்வேறு நோய் களிலிருந்தும் குணமாக முடிகின்றது.

நால்வகை வேதங்களே பன்னீர் மரமாகத் தோன்றி விளங்குவத னாற்றான், பன்னீர் இலைகள் வேதமந்திர சக்தியைப் பெற்றுத் தன்னுடன் சேர்ந்த விபூதியையும் பெரும் சக்தியுடையனவாக்குகின்றன. மேலும் பன்னீர் இலைகளில் வைக்கப்படும் விபூதி நறுமணமும்- தனிச்சிறப்பும் நீண்டநாட்கள் கெடாதும் இருப்பதையும் நாம் காணமுடிகின்றது.

பன்னீர் இலைகளின் தனிச்சிறப்புடன், பன்னீர்ப் புஸ்ப்பங்களும் தனித்துவமானதாகவும், நறுமணமுடையதாகவும் பூசைகட்குகந்தவையாக வும் போற்றப்படுகின்றன. இறைவழிபாட்டிற்குரிய பச்சிலைகளிற் பன்னீர் இலைகளின் தனிச்சிறப்பையும் நாம் அறிந்து பயன்படுத்தி நலம் பெறுவோம்.

-நீர்வைமணி-

---

தீயோர் நட்பு பேயோர் ஆக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# ஓம் வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

கலியுகத் தெய்வமான குமரக்கடவுள் வேண்டுவோர்க்கு வேண்டுவதை ஈயும் தண்டமிழ்த் தெய்வமாக விளங்குகின்றான். அவன் இல்லாத இடமில்லை. அவனை எண்ணாத உள்ளங்களுமில்லை. "நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்" தெய்வத்தை தமிழ் மக்கள் குலம் காக்கும் தெய்வமாகப் போற்றி வணங்குவர். ஆயிரம் தெய்வங்கள் இருந்தாலும் அழகுத் தெய்வம் முருகன். அழகுக்கு மறு பெயர் முருகன். முருகப் பெருமானை வணங்கினால் வாழ்வில் வெற்றிவரும். நோய்கள் தீரும். பகை அழியும். முத்தி கிடைக்கும். சிவனார் குலக் கொழுந்தின் திருவருள் துணை நமக்கும் கிடைக்கவேண்டும். "யாமிருக்கப் பயமேன்" என அபயக்கரம் காட்டி அடியார்களை ஆட்கொள்ளும் அழகுத் தெய்வம் ஓர் சிற்பிக்கு அருள்புரிந்த திருவிளையாடலைப் பார்ப்போம்.

சிக்கல், எட்டிகுடி, எண்கண் ஆகிய மூன்று திருத்தலங்களிலும், தம் உள்ளத்தில் குடிகொண்டிருந்த முருகப்பெருமானின் சிலைகளை, துளிகூட வேறுபாடின்றி, ஒரேமாதிரி தோற்றத்தில் மூலவராகவும், உற்சவ வடிவினராகவும் வடித்துத் தந்திருக்கிறார் வல்லவன் சிற்பி சில்பா. சிக்கலிலே முருகப் பெருமானை சிற்பி சில்பா அழகுக் கோலமாக வடித்திருந்தான். அந்த வேலனைத் தரிசித்த முத்தரசச் சோழர் பிரமித்து, அதேபோல மற்றொரு முருகன் சிலையை அதே சிற்பி செய்து கொடுத்துவிட்டால், தம் சிங்கார வடிவேலனின் முக்கியத்துவம் குறைந்துவிடுமோ என அறியாமையால் தவித்த அரசன், சிற்பியின் ஒருகைக் கட்டைவிரலைத் துண்டிக்கச் செய்கிறான். சிற்பி கொஞ்சம்கூட மனம் தளரவில்லை.

எட்டி மரங்கள் காடாக வளர்ந்திருந்த இடம் எட்டிகுடி. இதையே எட்டுக்குடி என்று அழைக்கிறார்கள். எட்டிக்குடிப் பெருமானை அருணகிரிநாதர் பாடியிருக்கிறார். காவடி ஆட்டத்திற்குப் புகழ்பெற்ற ஊர். பிருங்கி முனிவர் தன்னைவிட்டு விட்டு ஈசனை மட்டும் வணங்கியதால் உமாதேவியார் மனம் வருந்தி, ஈசன் மேனியில் இடம்பிடிக்க வேண்டி, இந்த எட்டி வனத்தில் வந்து, சிவபெருமானை நோக்கி கேதாரீஸ்வர விரதத்தை அனுஷ்டித்து, இறைவனின் இடப்பாகத்தைப் பெற்றார். தேவி வழிபட்ட சிவலிங்கமூர்த்தி சௌந்தரேஸ்வரர் என்ற பெயரில் இங்கு ஆலயத்தில் வழிபடப்படுகிறார். இங்கு ஆறுமுகப் பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக, திருக்கையில் வேல் தாங்கி, மயில் மீதமர்ந்த கோலத்தில் அழகனாக, அற்புத மூர்த்தியாகக் காட்சி தருகிறார். இந்த முருக மூர்த்திக்கு மயில் கால்களே ஆதாரமாய் அமைந்து நிற்பது சிற்பியின் கலைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

முத்தரசன் என்ற சோழ மன்னனின் கட்டளையின்படி சிற்பி சில்பா அதி அற்புதமான அழகோடு சிக்கல் சிங்கார வேலனை வடிவமைத்தார். சிங்காரம் என்றாலே அழகு. முருகன் என்றாலே அழகன். அன்னை உமாதேவியார் முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்த திருத்தலம். சிக்கலிலே வேல்வாங்கி

மூட நம்பிக்கை ரத்தத்தைச் சிந்தச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திலிலே போர் முடித்தவன் சக்திவடிவேல வன். கந்தசஷ்டியின் வேல் வாங்கும் விழாவில் உற்சவமூர்த்தி முருகப்பெருமானின் திருமுகத் தில், துடைக்கத் துடைக்க வியர்வை ததும்பி நிற்கும் அற்புத அதிசயத்தை இன்றும் காண லாம்.

சிக்கலில் செய்ததுபோல இனி எங் குமே சிலை செய்யாமலிருக்க சிற்பியின் கட்டைவிரலை வெட்டித் தரும்படி பெற்றான் அரசன். இந்த அற்புத அழகுத் திருவுருவ் மூர்த்தியை உருவாக்கிய ஸ்தபதிக்கு முருகப் பெருமானது மூலத் திருமேனியைச் செய்து பார்க்க ஆசை ஏற்பட்டது. நல்ல உயிரோட்ட முள்ள கல் கிடைத்ததும் எம்பெருமானைப் பிரார்த்தனை செய்து, நல்ல முகூர்த்தத்தில் வேலையைத் துவக்கி ஆறுமுகப் பெருமானை உருவாக்கினார். அந்தத் திருவுருவ மூர்த்திதான் எட்டுக்குடியில் மூலமூர்த்தியாக அமர்ந்திருக் கிறார். அந்தத் திருவுருவச்சிலை அத்துணை உயிர்த்துடிப்புடன் அமைந்ததாம். ஆறுமுகப் பெருமானின் திருமேனிமீது இரத்தோட்டம்போல வியர்வையும், அக்கினி ஜுவாலையும் உண்டா யிற்றாம். எம்பெருமானைத் தாங்கி நின்ற மயிலின் சிறகுகளை செப்பனிட்டு கண்களைத் திறந்ததும் மயில் அசையத் தொடங்கி பறக்க எத்தனித்ததாம். கூடியிருந்த மக்கள் மயிலை “எட்டிப்பிடி எட்டிப்பிடி” என்று கூச்சலிட அதுவே மருவி “எட்டுக்குடி” என்ற பெயர் வந்ததென்பர். உடனே சிற்பி மயிலின் நகத்தில் சிறிது மாறு தல் செய்ய மயில் அசைவது நின்றதாம். கட்டைவிரலை இழந்தும் அந்தச் சிற்பி எம்பெரு மான்மீது கொண்ட பக்தியும், வைராக்கியமும் தான் போற்றுதற்குரியது. எட்டுக்குடியில் கோயில் கொண்டிருக்கும் அபார சக்திவாய்ந்த இந்த முருகப் பெருமானைத் தரிசிக்க அடியார் வெள்ளம் அலைமோதுகிறது.

கட்டைவிரலை இழந்தும்கூட எட்டுக் குடி முருகனின் சிலையை செய்ததால் அரசன் கடுங்கோபங்கொண்டு சிற்பி சில்பாவின் இரு கண்களையும் பறித்து விட்டான். அப்போதும் சிற்பி மனம் தளரவில்லை. இருகண்கள் இல்லாவிட்டாலும் எப்படியும் முருகப் பெரு மானின் இன்னுமொரு சிலையையும் வடித்து விடவேண்டுமென்ற பேரவாவுடன் ஒரு சிறுமி யின் துணைகொண்டு “எண்கண்” என்ற இடத்தில் அயராது உழைத்து முருகப்பெரு மானின் திருவுருவச்சிலையை அழகு சொட்டச் சொட்ட வடித்து, எண்கண் திருத்தலத்தின் மூலவராக்கினார். சிற்பி சில்பாவின் மனமானது தெய்வீகச் சிலையை வடிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் உறுதியாக இருந்ததால், கட்டை விரல் இல்லாவிட்டாலும், இரு கண்களையும் இழந்தபோதும் அவரால் எம்பெருமான் சிலை களை வடிக்க முடிந்தது. மூன்று சிலைகளை யும் சிறிதும் வேறுபாடின்றி, ஒரே மாதிரி தோற் றத்தில் அழகு ஒழுக வடித்துள்ளார்.

மனமானது தெய்வீக இன்பத்தில் திளைக்கும்போது, வெளிப்புற அவயவங்கள் இல்லாதது இறைவனை அணுகுவதற்கு தடையே அல்ல என்ற உண்மையை எடுத்துக் காட்டியுள்ளார் சிற்பி சில்பா. எம்பெருமான் சும்மா இருப்பாரா? அவரது திருவிளையாடலே எல்லாம். சிற்பியின் பக்தியின் பெருமையை உலகுக்குப் பறைசாற்ற எண்ணிய முருகன், சிற்பிக்கு இழந்த பார்வையை மீட்டுக்கொடுத்து திருவருள் புரிந்தார். “எனது கண்கள்” என்ற பொருளில் இத்தலத்திற்கு “எண்கண்” என்ற பெயர் வந்தது.

கல்லிலே கலைவண்ணம் கண்டான்- தன்
கண்பார்வை இழந்தாலும் காணும் விழி கொண்டான்

ஈராறு கண்ணன், சிக்கல் சிங்கார வேலன், மதுரை மீனாட்சியம்மை பாலகன், மால் மருகன், வேல்முருகன், கோல மயில்ஏறும் செவ்வேள், ஆலமுண்டான் மகன், மூலகாரணனான மூர்த்தி, ஞாலமேழுமுண்டான் மருகன், செங்கமலத் திருவடிகளுக்கு அன்புசெய்ய, அவனை அருள்புரிய வேண்டிப் போற்றிப் பணிந்து நற்சதி பெறுவோமாக.

ஊழ் கெட்டவரை இழுத்துச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எண்கண் முருகன் பிள்ளைத்தமிழ்

சீராறு மயில்காண வேல்காண அடல்கொண்ட
சேவற் பதாகை காண
திருமுகத்தாமரைகள் ஓராறு காண நின்
செம்பருதி மேனி காண
ஓராறு நவரத்தின மணி யொளிகாண உன்
உடைந்துருகும் நகைகள் காண
உடையபரிபுர மறைகள் தன்னொடு கிண்கிணி
ஒலிக்கும் பதங்கள் காண
தாராறு இரண்டு புயசைலங்கள் காணவே
தங்கமுப்புரி நூலணி
தடமார்பு காணவே ஈராறு செவியில் அணி
தரு குண்டலங்கள் காண
ஈராறுகை காண அடியார் முன் ஓடிவரும்
எந்தை என்முன் வருகவே
என் கண்ணுக்குருள் ஈராறு கண்ணனே
எண்கண் வேலவன் வருகவே.

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன் கற்கோர் கவிமாலை - 23



**பல்லவி**

பக்குவ வழிதன்னைப் பாரினிற்தா- முருகா!
மிக்குயர் பேரின்பம் மிளிர்வாழ்வு நான்காணப்

**அநுபல்லவி**

எக்கணமும் மறவா தேற்றினேன் நின்பாதம்
அக்கறையோ டணைத்தென் ஆவிமா ஈடேறப்

**சரணம்**

பக்கலுள் ஆடவரும் பக்திகொள் பாவையரும்
செக்கலிலே எழுந்து செழுபுனல் நீராடி
திக்குள பூவெடுத்தும் தீபவகை கொடுத்தும்
சிக்கெனத் தொழுவருளுநர் தெய்வமே திருக்குமரா!
திக்கெலாம் சிறக்கக் காக்கும் செல்வச் சந் நிதிக்கந்தா!
குக்குடக் கொடியேந்தும் கோலாகலா! வேலா
துக்கசாகர ரத்தமுழ்ந்தும் துயரற அருள்வாரி
தக்கதோர் தருணமதிற் தமியனாம் எனைக்காத்தே
(பக்குவ)

-இராசையா குகதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதத்தின் மகிமை

**செல்வன் ஜ. நித்தியானந்தா அவர்கள்**

மக்களின் வாழ்க்கையிலே ஏற்படுகின்ற வினைகளை நீக்குவதற்குப் பல வழிகள் இருந்தும் அதிலே சிறந்த ஒரு வழியாகக் காணப்படுவது விரதமே ஆகும். வாழ்க்கையிலே ஆன்மீகத்தை வளர்க்கப் பல வழிகள் கூறப்பட்டாலும் அவை இடையிலே ஏற்படுத்தப்பட்டவை. ஆனால் விரதம் என்பது அன்றைய காலம்தொட்டு இன்றுவரை மாறாத ஒரு சிறந்த வழியாக உள்ளது.

மனம் பொறி வழிப்போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறை மெய் அன்போடு வழிபடுதல் விரதம் எனப்படும். இந்த விரதத்தை அனுஷ்டித்து தமது இலட்சியங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பலபேர் உள்ளனர். எடுத்துக்காட்டாக நோக்கும்போது, உமை தவம் மேற்கொண்டு சிவனை அடைந்தவர். மார்க்கண்டேயர் சிவனை நோக்கி விரதம் இருந்து தன் நோக்கத்தை நிறைவேற்றியவர். விவேகானந்தர் காளியை நோக்கி விரதம் இருந்து அதில் வெற்றிகண்டு ஆன்மீக முக்தி அடைந்தவர். காரைக்கால் அம்மையார் போன்றவர்கள் சிவனைநோக்கி விரதம் இருந்து தனது குறிக்கோளை நிறைவேற்றினார். அதேபோல 63 நாயன்மார் போன்றோரும் சிவனை நோக்கி விரதம் அனுஷ்டித்து சிவனை அடைந்தனர். ஆண்டாள் கண்ணனை காதலனாக ஏற்று அவரை அடையவேண்டும் என்பதற்காக விரதம் இருந்து அதில் அசையா நம்பிக்கை கொண்டும் இருந்தாள். மீராவும் கண்ணனை அடையவேண்டும் என மனம் தளராது விரதம் அனுஷ்டித்தவர். சிவனடியாரான அப்பூதி அடிகள் போன்றோரும் சிவனை நோக்கி விரதம் மேற்கொண்டு சிவனுடன் இரண்டறக் கலந்து கொண்டனர். இதனை எடுத்து நோக்கும்போது விரதத்தின் மகிமை கல்மேல் எழுத்துப்போல தெளிவாகத் தெரிகின்றது.



ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரதங்கள் நாள் விரதம், கிழமை விரதம், மாதவிரதம், ஆண்டுக்கு ஒருமுறை வரும் விரதம் என வகைப்படுத்துவர். தோஷத்தை நீக்குவதற்கு சனீஸ்வர விரதம் போன்றவை உள்ளன. தமது வேண்டுகோளை நிறைவேற்ற கந்தஷஷ்டி, வரலட்சுமி, விநாயகர் கதை விரதம், ஆவணிஞாயிறு, ஐப்பசி வெள்ளி என்பனவும் இறந்த அம்மா, அப்பாவுக்காக சித்திராபௌர்ணமி, ஆடி அமாவாசை போன்றனவும் உள்ளன.

ஆனால் இன்றைய இளைஞர் சமுதாயத்துக்கு இவ்விரதத்தின் மகிமை தெரியவில்லை என்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும். இன்று மாமிசம் மட்டுமே வாழ்க்கை என வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமைகளில் மட்டும் விரதம் அனுஷ்டிக்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும். மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆகவே மனித வாழ்க்கைக்கு உயிர் எவ்வளவு அவசியமோ அதேபோல ஆன்மீக வாழ்வுக்கு விரதம் என்பது அத்தியாவசியமான ஒன்று. இந்த விரதத்தின் ஊடாக மனவடக்கம், மனக்கட்டுப்பாடு, குறித்த நேரத்தில் குறிப்பிட்ட விடயத்தை மேற்கொள்ளும் திறன் என்பன ஏற்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆகவே விரதம் அனுட்டிப்பதை வழக்கப்படுத்திக் கொண்டால் வாழ்வு நலன்பெறும் என்பதில் சந்தேகமே இல்லை.

# 'ஏற்றமாம் வரமளிப்பது'

நம்மை நாம் உணர நல்லதோர் சந்தர்ப்பமே
நவராத்திரியாகும். இதனை உணர்வோமாக,
நமக்குள் பல இராத்திரிகள் உண்டு- அவற்றுள்
நமக்கு வாழ்வளிப்பது நவராத்திரியாகும்.

நாம் திருந்துவதற்கும், நம்மை நாம் வெல்வதற்கும்
நாளை நமதாவதற்கும், நல்லவை நடப்பதற்கும்
நாணயமாய் வாழ்வதற்கும், நமனைப் புரட்டுவதற்கும்
நம்பிக்கையான விரதம் நவராத்திரியாகும்

தாய்மைக்குத் தாற்பரியம் அளிப்பதும்,
தந்தைக்கு வல்லமையாம் வாழ்வளிப்பதும்,
நோய் நொடிகளை நீக்கியே வரமளிப்பதும்,
நேர்த்தியாம் தூயவழியில் வழிநடாத்துவதும்,

ஆயகலைகளை அமுதாகத் தருவதும்
ஆடற்கலையை அவலாகத் தருவதும்,
தோயும் இசையைத் தேனாகத் தருவதும்
தெவிட்டாத தமிழினை தேவாம்ருதமாய் சொரிவதும்

துர்க்கையாய், இலட்சுமி, ஸரஸ்வதியாய்,
தூய வாழ்வுக்கு வரமளிப்பதாய்,
எக்காலமும் வீரம் செல்வம் கல்விதன்னில்
ஏற்றமாம் வரமளிப்பது விஜயதசமியில்

-கே.எஸ்.சிவஞானராஜா-

(தொடர்ச்சி...)

# திருமந்திரம் கூறும் சிவாகமம்

செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை அவர்கள்

இறைவன் ஆன்மாக்கள்மீது வைத்த கருணையால் அருளிச் செய்த சிவாகமங்கள் இருபத்தெட்டுக் கோடியே நூறாயிரங்கள். இவைகளைத் துணையாகக் கொண்டே தேவர்கள் சர்வேசுவரனுடைய பெருமையைச் சொன்னார்கள். அடியேனும் அவற்றை ஆராய்ந்து அப்பரம்பொருளைத் தோத்திரிக்கின்றேன் என்றவாறு.

இருபத்தெண்கோடி நூறாயிரம் என்பது எல்லையற்றது என்னும் பொருளில் பன்மை குறித்து நின்றது. இவ்வாகமங்களே இறைவனுடைய பெருமையை உணர்த்தும் சாதனங்கள் என்பதாம்.

ஆகமங்களின் கிரந்தத்தொகை ஒரு பரார்த்தத்து ஒரு சங்க ஒரு பதும பட்டு அற்புத பத்தொன்பது கோடியே முப்பத்து மூன்றிலட்சத்து நாற்பத்து நாலாயிரம் எனக் காமிகம் அவதாரபடலம் கூறுகிறது. காரணம் முதலிய ஆகமங்கள் வேறுகூறும். இத் திருமந்திரத்துள் 60ஆம் மந்திரம் எண்ணில் எழுபது கோடி நூறாயிரம் என்கிறது. சைவபூஷணம் பரார்த்தத்தின் மேல் பதினொரு லட்சம் கோடியே முப்பது கோடி ஐம்பத்தொரு லட்சத்து ஐம்பத்து நாலாயிரம் என்கிறது.

சிவபெருமான் வெளிப்படுத்தியவை அறத்தை உரைப்பன என்பதை

"பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலானறஞ் சொன்னவாறே"

அறிஞர் என்பவர் பதினெட்டு மொழிகளும் அறிந்தவர். அத்தகைய ஆகமம் கூறும் பொருளை நன்றாய் உணர்ந்தவர். அறிஞர் அறிந்த பதினெட்டு மொழிகளும் அண்டங்களுக்கு முதல்வனான சிவபெருமான் வெளிப்படுத்திய அறத்தைக் கூறுவனவாகும்.

பதினெட்டு மொழிகட்கும் பரசிவம் காரணமாயவாறு யாங்ஙனம் எனின் சிவம் சுத்தமாயையைக் கொண்டு சத்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தவன் என்க. அண்ட முதலான் என்றது அவனே அர்த்தப் பிரபஞ்சத்திற்கும் பரமகாரணன் என்பதை அறிவித்தவாறு. அண்டங்களுக்கு முதல்வனானவன் சிவபெருமான் என்று கூறுகிறார்.

"அண்ணலருளா லருளுந்திவ் யாகமம்
விண்ணிலமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணி லெழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலு நீர்மே லெழுத்தது வாகுமே"

இறைவன் ஆன்மாக்கள் மீது வைத்த கருணையால் அருளிய தெய்வத்தன்மை பொருந்திய ஆகமங்கள் தேவர்களுக்கும் விளங்க முடியாதன. அவற்றின் கிரந்தத் தொகை எண்ணில் எழுபது கோடியே நூறாயிரம். எழுத்துக்களை எண்ணில் வெள்ளம் என்று எல்லையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சும் என்றவாறு எழுத்தது எண்ணிலும் நீர்மேல் ஆகும் எனக் கூட்டுக. நீர்- வெள்ளம், ஈண்டுப் பல என்னும் பொருட்டாய் நின்றது.

அறிவாய் விளங்குபவன் என்பதை பின்வருமாறு காட்டியுள்ளார்.

"பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரன்ஆகி ஆகமம் ஓங்கிநின்றானே"

பரம்பொருளாகியும் பராபரப் பொருளாகியும் தன்னை அறிவித்தது உலகைத் தாங்குபவனாய்ச் சிவ தருமங்களைத் தானே அருளிச் செய்யுங் காலத்து அரனாய் தேவர்களால் அர்ச்சிக்கப்படுகின்றன. சிவபெருமான் அறிவாகி ஆகமமாகி ஓங்கி நின்றான் என்றவாறு

பரனாய் தரனாய் அரனாய் உரனாகி என்று ஆக்கச் சொல்புணர்த்துக் கூறினும் அவை அவர்க்கு இயல்பேயாம் என்க.

பராத்பரம் என்பது பராபரம் என ஆயிற்று எனக் கொண்டு மேலானவற்றிற்கெல்லாம் மேலான பொருள் என்பாரும் உளர். பராபரம் காட்டி பரஞானம், அபரஞானம் என்ற இரண்டையும் அறிவித்து சிவதன்மம்- ஆகமங்கள் சிவபுண்ணியங்கள் எனலுமாம் உரனாகி- ஞானசொரூபியாய்.

ஆகமம் ஓங்கி நின்றானே என்றது காமிகம் இரண்டு திருவடிகளாகவும் யோகஜம் இரண்டு கணைக்கால்களாகவும் சிந்தியம் திருவடிகளின் விரல்களாகவும், காரணம் தண்டைக் கால்களாகவும் அஜிதம் முழந்தாள்களாகவும், தீப்தம் தொடைகளாகவும், குஷ்மம் குய்யமாகவும், சகஸ்ரம் இடுப்பாகவும், அம்சுமான் முதுகாகவும், சுப்ரபேதம் தொப்பூழாகவும், விஜயம் வயிறாகவும், நிஷ்வாசம் மூக்காகவும், சுவாயம்புவம் தனங்களாகவும், அனவம் கண்களாகவும், வீரம் கழுத்தாகவும், ரௌரவம் செவிகளாகவும், மகுடம் திருமுடியாகவும் விமலம் கைகளாகவும் சந்திரஞானம் மார்பாகவும், பிம்பம் திருமுகமாகவும், புரோத்கீதம் நாக்காகவும், லளிதம் கன்னங்களாகவும், சித்தம் நெற்றியாகவும், சந்தானம் குண்டலங்களாகவும், சர்லோக்தம் பூணூலாகவும், பாரமேசுரம் முத்துமாலையாகவும், கிரணம் திருவாபரணமாகவும், வாதுளம் பரிவட்டமாகவும், ஏனைய உபாகமங்கள் திருமேனிப்பூச்சு பரிமளத் திரவியங்கள் புஸ்பங்கள் இவைகளாவும், எல்லா ஆகமங்களின் ஞானபாதமாகிய சைவசித்தாந்தம் நைவேத்தியமாகவும், இறைவற்கு அமைந்திருத்தலின் என்க. இவ்வாறு மகுடாகமத்துக் கூறப்பெற்றுள்ளது.

பரசிவத்திடமிருந்து பெற்றவை என்பதை பின்வருமாறு காட்டியுள்ளார்.

"சிவமாம் பரத்தினில் சக்தி சதாசிவம்
உவமாமகேசர் உருத்திரதேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே"

பரமசிவத்தினிடமிருந்து சக்தியும், சதாசிவமும், உமாமகேசரும், சீகண்டருத்திரரும், திருமாலும், பிரமனும், ருத்திரரும் ஆகிய இவர்கள் முறையே அடைந்த ஒன்பது ஆகமங்களையும் எங்கள் குருநாதன் அடைந்தார் என்றவாறு சிவமாய் பரத்தினில், ஆகமங்கள் அனைத்திற்கும் பிறப்பிடம் பரசிவமாதலின் அதனிடத்திருந்து சக்தியும் சதாசிவம் முதலியோரும் கேட்டு நந்தி மரபில் இடையீடின்றியே வருகின்றது என்று நூல்வழிவந்த உணர்த்தியவாறு. உமாமகேசர் என்பது எதுகை நோக்கி அகரம் விரிந்து உவமாமகேசர் என்றாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரசிவத்திடமிருந்து ஆகமத்தைக் குருநாதனான நந்தி பெற்றான் என்க. தவத்தைச் செய்து உபமன்யு முனிவரிடம் சிவஞானோபதேசம் கேட்ட திருமால்.

அடுத்து ஒன்பது ஆகமங்களின் பெயர்கள் பற்றியும் கூறியுள்ளார்.

"பெற்றநல்லாகமம் காரணம் காமிகம்
உற்றநல்வீர முயர்சிந்திய வாதுளம்
மற்றவ்வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே"

குருபரம்பரையிற் பெற்ற நல்ல ஆகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலோத்ரம், சுப்ரம், மகுடம் என்னும் ஒன்பதும் ஆம் என்றவாறு.

ஆகமங்கள் இருபத்தெட்டும் சிவபேதமெனவும், ருத்ரபேதம் எனவும் இருவகைப்படும். சிவபேதம் ஒன்பதும் ருத்ரபேதம் பத்தொன்பதும் ஆம். சிவயோகிகள் கூறும் இந்த ஒன்பது ஆகமங்களும் சிவபேதத்திலடக்கப்பட்டன. காரணம், காமிகம், சிந்தியம், சுப்ரம் என்பன. ருத்ரபேதத்தில் அடங்கியன வீரம், வாதுளம், கலோத்ரம், மகுடம் என்பன. யாமளம்- ருத்ரயா மளம் ஆகத் திருமூலதேவர் மூலாகமங்கள் இருபத்தெட்டேயன்றித் தந்திர சாரத்தையும் தழுவி இத்திருமந்திரத்தை அருளிச் செய்தார் என்பது தெளிவு.

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்இலிகோடி தொகுத்திடும் ஆயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்
எண்இலி கோடியும் நீர்மேல் எழுத்தே"

சிவபெருமான் அருளால் வெளிப்பட்ட சிவாகமங்கள் எண்ணற்றவையாய்ச் சொல்லப்பட்டிருப்பினும் இறைவன் சொன்ன உண்மைப் பொருளை உணராவிடின் அவையெல்லாம் நீரின் மீது எழுதப்பட்ட எழுத்து விரைவாக அழிவதுபோல் பயனற்றவையாகிவிடும். பெருமையுடைய சிவபெருமான், ஆகமப் பொருளை இறைஞானம் கொண்டு உணர்தல் வேண்டும்.

"மாரியும் கோடையும் வார்பனி தூங்க, நின்று
ஏரியும் நின்று அங்கு இளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குங் கருணை செய்தானே"

மழைக்காலமும், கோடைக்காலமும் மாறி ஒழுகின்ற பனி எப்போதும் மிகுந்த காலமாகிய ஏரிகள் நீரவற்றி இளைத்திருக்கின்ற காலத்தே ஆரியமொழியையும், தமிழையும், விரைந்து அறிவித்து உமாதேவியாருக்குக் கருணை செய்தான் இறைவன் என்றவாறு.

கோடையும் மாரியும் மாறி எப்போதும் பனிபெய்யுமாயின் மழையின்மையை அறிவிப்பதாம். எல்லாம் வறண்ட காலமாகிய ஊழிக்காலத்தில் இருமொழிகளையும் உணர்த்தி நாட்டை வளப்படுத்தினான் இறைவன்.

இதனால் இருமொழியும் ஒத்த பெருமையுடையன. ஒரு முதல்வன் வழிவந்தன என்பன வலியுறுத்தப்பெற்றமை காண்க. சிவபெருமான் ஆகமப்பொருளை ஊழிக்காலத்தில் பராசக்திக்கு அருள் செய்தான். அதை வடமொழி, தமிழ்மொழி என்னும் இரண்டிலும் அருள் செய்தான்.

சிவனை ஆகம அறிவால் அறிய இயலாது என்பதை பின்வருமாறு காட்டுகிறார்.

"அவிழ்க்கின்றவாறும், அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டு உயிர்போகின்றவாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சொல் வடசொல் எனும் இரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே”

உயிர்களைப் பந்தத்தினின்றும் நீக்கும் முறைமையையும் பந்தத்தில் விழும் முறையையும் கண் இமைத்தல் ஒழித்து உயிர் போகின்ற முறையையும் தமிழ்ச்சொல் வடமொழிச் சொல் என்னும் இரண்டாலும் உணர்த்தும் சிவனை உணர்வதற்கு முடியுமோ! முடியாது.

உணர்தல் என்பது மறப்பின் வழி நிகழ்வதாகலின் உணர்தலாகிய தொழில் நிகழ்ச்சிக்கு இடமேயின்று என்றுணர்த்தியவாறு இங்ஙனமன்றி உணர்தலுமாம் எனக்கொண்டு உணர்தலே கடமையெனப் பொருள் உரைத்து ஏகாரத்தை அசையாக்குவாரும் உள்.

சிமிழ்த்தல் சிமிட்டல் ஆயிற்று. “புட்சிமிழ்த்தற்று” என்னும் குறள் நோக்கிப் பொருள் கொள்க. இங்ஙனம் அன்றிச் சிமிட்டல் ஐயப்பட்டு எனப்பிரித்து கண்ணிமைப்பில் கோழையில் பொருந்தி எனப் பொருள் கூறுவாரும் உள். பாசத்தாற் கட்டுண்டு என்ற பொருளே நேரிதாதல் தெளிக என காட்டப்பட்டுள்ளது.

அடுத்து இறைஞானத்தை உணர்த்தும் நோக்குடன் ஆகமங்களில் சிவனது விக்கிரக அமைப்பு முறை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இம்மரபை பின்பற்றி திருமூலர் சிவனது வடிவங்களைத் தமது நூலிலும் குறிப்பிட்டுள்ளார். 2ஆம் தந்திரத்தில் சிவனது அட்டவீரட்ட செயல்கள், இலிங்கத் தோற்றம், தக்கயாகம், பிரளம் பற்றிய கதை, இறைவனது ஐந்தொழில் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. சிவன் விடத்தை உண்டது, திருமாலும் இறை தத்துவத்தினை விளக்கும் நோக்கத்திற்காகவே இறைவனது பல்வேறு செயல்களைக் குறிப்பிடுகின்றார். அவர் இவ்வாறு கூறும் முறைக்கு முன்னோடியாக ஆகமங்களே விளங்கியிருக்க வேண்டும்.

திருமந்திரம் தோற்றம்பெற்ற காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டு என்பர். ஆகமம் தோற்றம் பெற்ற காலம் கி.மு 4ஆம் நூற்றாண்டு எனக் கொள்வர். ஆகவே திருமந்திரத்தில் சிவாகமம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. திருமந்திர பாயிரத்தில் “ஆகமச் சிறப்பு” என்ற பகுதியும் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே திருமந்திரத்தில் சிவாகமக் கருத்துகள் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. திருமந்திரம் கூறும் சிவாகம நெறி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

(முற்றும்)

## பலனை எதிர்பார்க்காதே

**காட்டின் வழியே குருவும் சீடனும் நடந்து சென்றனர். சீடனுக்குப் பசி எடுக்கவே ஒரு மரத்தின் உச்சியில் இருந்த மாங்கனியைப் பார்த்துக் கீழே கிடந்த கல்லை எடுத்து வீசினான். ஆனால் பழம் விழவில்லை. “ஐயா, எவ்வளவோ முறை முயற்சித்தும் பழம் கீழே விழவில்லை. ஆனால் பசி வயிற்றைக் குடைகிறதே. என்ன செய்வது?” என்றான் குருவிடம். குரு புன்னகைத்தபடியே, “பழம்தானே வேண்டும் உனக்கு?” என்று மரத்தின் அடியில் கிடந்த ஒரு கல்லை எடுத்து குறிபார்த்து எறிந்தார். குறி தவறவில்லை. பழம் தொப்பென்று தரையில் விழுந்தது. வியப்படைந்த சீடன், “அது எப்படி?” எனக் கேட்டான். “சீடனே! நீ கல்லெறியும்போது பசியைப் போக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பழத்தின் பலன் மட்டுமே உனக்குத் தெரிந்தது! ஆனால் நானோ பழத்தை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் கல் எறிந்தேன். பலனை எதிர்பார்க்கவில்லை” என்றார் குரு.**

**தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள்

**திரு மயில்வாகனம் சிவயோகசுந்தரம் அவர்கள்**

இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் சித்தராக விளங்கியவர் யோகர் சுவாமிகள். நல்லூரானையும் செல்லப்பரையும் தம் மூலமூர்த்திகளாக வழிபட்டவர். இந்தியாவில் பகவான் இராம கிருஷ்ணர், ரமண மகரிஷி போல இலங்கையில் யோகர்சுவாமிகட்கு பலதரப்பட்ட மக்கள் அடியவர்களாக வாழ்ந்தார்கள். சுவாமிகள் வேடமொன்றும் தரிக்காமல், தாளமேளமில்லாமல் உலகத்தவர் போன்றே நடமாடினார். இளைஞராக நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை செய்தபோது ஓய்வுநேரத்தை தேவார திருவாசகம், பட்டினத்தார் பாடல் முதலிய பலவற்றைக் கற்பதிலும் மற்றைய சமயங்களின் தத்துவங்களைப் படிப்பதிலும் நேரத்தைப் போக்கினார். வேலையை உதறிய யோகர் சுவாமிகள் நல்லூர்த் தேரடியில் செல்லப்பரின் அருட்பார்வைக்கு இலக்கானார். கொழும்புத்துறைக் கொட்டிலில் குடிகொண்டிருந்த யோகர்சுவாமியை அதிபர் அம்பிகை பாகன் ஒருநாள் தரிசிக்கச் சென்றவேளை யோகர் சுவாமிகள் அப்பர் தேவாரமான

"கள்ளனேன் கள்ளத்தொண்டனாய்க் காலத்தைக் கழித்து போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்ளிற்கெல்லாம் உடனிருந்தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாஇறச் சிரித்திட்டேனே

என்ற பாடலைப் பாடி இறைவன் நமது செயல்களையெல்லாம் உடனிருந்தறிகிறான் என்ற தமது அனுபவத்தை அவருக்குக் கூறினார்.

செல்லப்பரைத் தரிசித்த வேளைகளில் கொழும்புத்துறை விதானையார் திருஞான சம்பந்தரும் உடனிருப்பார். ஒருவரையும் அண்டவிடாத செல்லப்பரிடம் யோகர் பெற்ற அனுபவத்தைக் கூறுகையில் "சும்மாவா பெற்றேன் மலையைப் பிளந்தல்லவா பெற்றேன்" என யோகர் சுவாமி கூறுவார் என விதானையார் யோகர் பட்ட பாடுகளைக் கூறுவார்.

யோகர் சுவாமிகளின் ஆரம்ப காலத்தில் கலைப்புலவர் நவரத்தினம், யாழ் அரச அதிபராக இருந்த ஸ்ரீகாந்தா அவர்களின் தந்தை மயில்வாகனம் போன்றோருடன் கூடித்திரிவார். அப்போது அவர்கள் யோக சுவாமியை ஒரு ஆச்சிரமம் அமைக்கக் கேட்டார்கள். அதற்கு சுவாமிகள் "எனது ஆச்சிரமத்திற்கு ஆகாயம்தான் கூரை. நான்கு திக்குகளும்தான் சுவர்கள் எனக் கூறினாராம். ஆனால் இன்று உலகில் பல பாகங்களில் அன்பர்கள் சிவதொண்டன் நிறுவனங்களை அமைத்து ஆன்மீகப் பணிகளை ஆற்றுவதைக் காணலாம். பண்டிதர் மயில்வாகனனார் யோகர் சுவாமிகளின் ஊக்குவிப்பினால் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து சுவாமி விபுலானந்தரானார். கொழும்பு இராம கிருஷ்ண மடத் தலைவராக 1970ஆம் ஆண்டுகளில் விளங்கிய பிரேமானந்த மகராஜ் சிறுவனாக இருந்தபோதும் கொழும்புத்துறைக் கொட்டிலில் நந்தவனப் பணிகளை செய்துகொண்டிருந்தவேளை யோகர் சுவாமியைத் தனது குருவாக ஏற்க முயன்றபோது "உனது குரு வடக்கிலுள்ளார்" எனக்கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம கிருஷ்ண மடத்தில் சேருமாறு பணித்தார். யோகர் சுவாமிகள் இராம கிருஷ்ண மடத்திற்கும் துறவிகட்கும் பெருமதிப்பளித்தார். ஒருமுறை அதிபர் அம்பிகைபாகன் இந்தியாவிலிருந்து வந்த இராமகிருஷ்ண மடத் துறவிகளை சிவதொண்டன் நிலையத்தில் தங்க யோகர் சுவாமிகளின் அனுமதி கோர அதற்கு சுவாமிகள் "காவியுடுத்து கந்தசுவாமி வந்தாலும் உள்ளே விடப்படாது. இராம கிருஷ்ண மடத்துறவிகள் உயர்ந்தவர்கள். அவர்களைத் தகுந்த மாலை மரியாதைகளுடன் தங்க வை" என அனுமதி கொடுத்தார்.

பலரும் அறியாத சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரைப்பற்றி யோகர்சுவாமிகள் "செல்லாச்சி அம்மையார் காடு செல்லாமல், மலையேறாமல் வீட்டிலிருந்தபடியே பூரண அனுமதி பெற்றவர்" என யோகர் சுவாமிகள் கூறுவார்கள். சுவாமிகள் அடிக்கடி செல்லாச்சி அம்மையார் ஆச்சிரமம் சென்று அவரது துறவை ஊக்குவிப்பார். செல்லாச்சி அம்மையாரும், தானும் பல சந்நியாசிகளைக் கண்டதாகவும் யோகர் சுவாமிகளைப் போல ஒரு பூரண துறவியை தம் வாழ்நாளில் கண்டது கிடையாது என அடிக்கடி கூறுவார். செல்லாச்சி அம்மையார் சமாதியுற்றபோது யோகர் சுவாமிகளின் ஆலோசனைப்படியே இறுதிக் கிரியைகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

யோகர் சுவாமிகள் தமது இந்திய யாத்திரையின்போது அண்ணாமலையில் ரமண மகரிஷியை சந்தித்து ஒருவர் முன் ஒருவராக சிலமணி நேரம் வீற்றிருந்தனர். "நான் யார், நீ யார்" என்ற தத்துவத்தை உணர்ந்த இரு மகரிஷிகளும் "சொல்லெல்லாம் மோனம்" என்ற நிலையில் இருந்தனர். இதுபற்றி பின்னர் யோகர் சுவாமி குறிப்பிடும்போது "ஒரு குன்றின் மேலிருந்தது போலிருந்தது" எனக் கூறினார்.

இதுபோல முதலாவது காஞ்சிப் பெரியவரை யோகர் சுவாமி சந்தித்தபோதும் இருவரும் ஒன்றும் பேசாது மெய்மறந்திருந்தனர். பின்னர் யோகர் சுவாமி எழுந்து செல்லும் போது காஞ்சிப் பெரியவர் தமது சீடர்களுக்கு "ஒரு சிங்கம் போகிறது" என யோகர் சுவாமிகளை காட்டிக் கூறினார். மேலும் 1940ஆம் ஆண்டு காசியாத்திரையின்போது யோகர் சுவாமிகள் அங்கிருந்து அடியவர் ஒருவருக்கு எழுதிய திருமுகத்தில் "தேடித் திரிந்து கண்டேன் காசி விசுவநாதனை" என்றார். "இருந்த இருக்கின்ற இருக்கப் போகின்ற யாழ்ப்பாணத்தவருக்கு தேவையான கருமாதிகள் எல்லாம் செய்து முடித்துள்ளேன்" என எம்மவர் மீதுள்ள கரிசனையை தெரிவித்திருக்கின்றார். ரமணமகரிஷி அண்ணாமலையில் சோதிபோல யோகர் சுவாமிகள் யாழ்ப்பாணத் தவர்க்கு சோதியாகத் திகழ்ந்தார்.

யோகர் சுவாமிகள் தேவார திருவாசகம் கோளறு பதிகம் குறிப்பாக சிவபுராணம் ஓதுதல் கந்தபுராண படனம் என்பனவற்றை பலவகையிலும் ஊக்குவித்தார். பலகாலமாக சிவதொண்டனில் திருவடிபூசை செய்த அமரர் கந்தப்பிள்ளை யோகர் சுவாமி முன் முதன் முறை சிவபுராணத்தை இராகத்துடன் பாடினார். அப்போது சுவாமிகள் "நில் நில், இராகத்துடன் இது படிக்கக்கூடாது இது தமிழ் வேதம் என்று சொல்லி யோகர்சுவாமிகள் தமது இனிய குரலால் "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" என்பதை வேதமோதும் இசையுடன் பாடிக்காட்டினார். இன்றும் சுவாமிகள் காட்டிய முறைப்படியே சிவபுராணம் ஓதப்பெறுவது பெருமைக்குரிய விஷயமாகும். மேலும் சுவாமிகள் கோளறு பதிகத்தை தாமே முன்னின்று ஓதி பல அடியவர்களது இன்னல்களையும் பிணிகளையும் தீர்த்தவர். நாகலிங்க பரதேசியார் என்ற சுவாமிகள் தமது இறுதிக்காலத்தில் வறுமையால் வாடினார். இவர் முறைப்படி திருமுறைகளை ஓதவல்லவர். ஒருநாள் வாட்டத்துடன் யோகர் சுவாமியை தரிசிக்கச் சென்றார். யோகர் சுவாமிகள் இவரைப் பார்த்து "இடரினும் தளரினும்" என்ற பதிகத்தை பாடுமாறு

'குற்றத்தை மறைத்தல் கோழைத்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தார். அவரும் உடல் பதைபதைத்து கண்களில் நீர் சொரிய பக்திச் சுவையுடன் பாடிக்கொண்டிருந்தார். எட்டாவது பாடலைப் பாடியபோது காரில் வந்திறங்கிய ஒரு தம்பதியினர் ஒரு தாம்பாளத்தில் நிவேதனப் பொருட்களுடன் ஒரு முடிச்சும் வைத்து யோகர் சுவாமிகளை விழுந்து வணங்கினர். சுவாமிகள் அம்முடிச்சை அவிழ்த்து நிலத்தில் கொட்டினர். அவ்வளவும் தங்க நாணயங்கள் எல்லாவற்றையும் நாகலிங்கப் பரதேசியாருக்கு கொடுத்து "சந்தோஷமாக இரும்" என யோகர் சுவாமிகள் வழியனுப்பினார். மேலும் சித்தாந்த சாத்திரங்களை சைவர்கள் முறையாக கற்கவேண்டுமென சுவாமிகள் சிவதொண்டனில் பல வகுப்புக்களை நடத்த ஊக்குவித்தார். வெளிநாடுகளுக்கு சோல்பரிப்பிரபுவின் மகன் சந்தசுவாமி தலைமையில் ஒரு தூதுக்குழுவை தான் வாழ்ந்த காலத்தில் அனுப்பி பரப்பியமையும் குறிப்பிடத்தக்கது. கந்தபுராணப் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை கோவில்களிலும் மடங்களிலும் ஒழுங்காக படிக்க ஊக்குவித்தார். "கந்தபுராணத்தை ஒழுங்காகப் படித்துவந்தால் தமிழர்களைப் பீடித்திருக்கும் இன்னல்கள் பிணிகள் அகலும்" என அப்பவே அடிக்கடி எல்லோர்க்கும் கூறுவார்.

குருசீட பரம்பரைக்கு ஆளாகாத யோகர் சுவாமிகள் மௌனமுனி மார்க்கண்டு சுவாமிகளை தாம் வாழ்ந்த காலத்தில் சிவதொண்டர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விட்டுச் சென்றார். மார்க்கண்டர் தியத்தலாவையில் வேலை செய்தபோது யோகர் சுவாமிகள் தாமே பல தடவை தேடிச்சென்று ஆட்கொண்டார். மார்க்கண்டரும் இளைப்பாறியவுடன் யோகர் சுவாமிகளிடம் சென்று தம்மையேற்றுக் கொள்ளுமாறு பணிந்தார். தன்னையே கதி என்ற மார்க்கண்டரை ஏற்கனவே ஒழுங்கு செய்த கைதடிக் குடிசையில் அமர்த்தினர். ஆரம்ப காலத்தில் சிவதொண்டனுக்கு பொறுப்பாயிருந்த கைதடி விசுவலிங்கத்தைப் பார்த்து யோகர் சுவாமிகள் "விசுவலிங்கம்! உனக்கு ஒரு நல்ல சினேகிதனைத் தருகிறேன். அவன் போகும்போது உங்களுக்கு எல்லாவற்றையும் தந்துவிட்டுச் செல்வான். அவனைக் கவனமாகப் பார்த்துக்கொள்" எனக் கூறினார். மார்க்கண்டு சுவாமிகளும் வேண்டேன் பிறதெய்வமென்று யோகர் சுவாமிகளையும் நற்சிந்தனையையும் தமது முழுமூச்சாகக் கொண்டு சுமார் முப்பத்தைந்தாண்டாக தாம் சமாதியாகும் வரை நற்சிந்தனை எனும் நல்லமிர்தத்தை உள்நாட்டு வெளிநாட்டு அடியவர்க்கு பருகச் செய்தார்.

சோல்பரிப் பிரபுவின் மகன் சந்த சுவாமிகள் யாத்திரைகள் பல செய்தும் சித்தம் தெளியாமல் இறுதியில் யோகர் சுவாமிகளை நாடி "கடவுளைக் காண தமக்கு வழிகாட்டுமாறு" வேண்டினார். சந்தசுவாமியை அழைத்துச் சென்றவர் இவர் கவர்ணர் ஜெனரலின் மகன் என யோகர் சுவாமிகளுக்கு கூற யோகர் சுவாமிகள் "கவர்ணரும் நானே, ஜெனரலும் நானே" எனக் கூறினார். யோகர் சுவாமிகள் ஒரு திருவாதிரை நன்னாளில் இவருக்கு "சந்தசுவாமி" என தீட்சநாமம் வழங்கினார். சந்தசுவாமிகளுக்கு முதலில் சிவதொண்டன் நிலையத்திலும் பின்னர் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒப்படைத்து சிவதொண்டனாக வாழும் இலட்சணங்களைப் பயிற்றுவித்தார். கைதடியில் இருந்தபோது நல்லூருக்கு நாள்தோறும் நடந்துசென்று அதிகாலையில் தேரடியைத் தரிசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

யோகர் சுவாமிகளால் பாடப்பெற்ற நற்சிந்தனை தேவார திருவாசகங்களைப் பிழிந்தெடுத்த ரசத்தைப் போன்றது. அது பாமரர் முதல் பண்டிதர் வரை படித்து பயன் பெறக்கூடிய பொக்கிசம் போன்றது. இன்றைய காலகட்டத்தில் நற்சிந்தனையை படிப்பது எல்லோருக்கும் மனச் சாந்தியைத் தரவல்ல வல்லமை உடையது. சுவாமிகளின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட சிவதொண்டன் நிலையமும் சிவதொண்டன் மலரும் தாளமேளம்

இல்லாமல் இன்றுவரை ஆன்மீக தாகம் கொண்ட ஆன்மாக்களை உய்விக்கும் பணியை செய்துகொண்டிருக்கின்றன. செங் கலடியிலும் சிவதொண்டன் நிலையம் சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. நாவற் குளியில் ஆசிரியராக கடமையாற்றிய செல்லத் துரை மாஸ்டர் யோகர்சுவாமிகளால் ஆட்கொள் ளப்பட்ட மற்றொரு அடியவர் ஆவர். பிற்காலத் தில் செல்லத்துரை சுவாமிகள் என அறியப் பட்ட இவர் சிவதொண்டனுக்காகவே தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர். சுவாமிகளின் போதனைகளை அடியவர் மத்தியில் பரப் பியவர். யோகர் சுவாமிகளின் வாழ்க்கையையும் வழிகாட்டுதலையும் எல்லோரும் அறியச் செய்த பெருமைக்குரியவர்.

ஆத்மஜோதி முத்தையா அவர் களையும் "இவரும் எமது கூட்டத்தைச் சேர்ந்தவர்" என சுவாமிகள் அன்பர்கட்கு அறிமுகப்படுத்துவார். ஆத்மஜோதி மலர் மூலம் யோகர் சுவாமிகளை அறிய அக்காலத்தில் பல அரிய கட்டுரைகளை வரைந்தவர். முத் தையா அவர்கள் ஏழாலையைச் சேர்ந்தவர். ஒருநாள் யோகசுவாமிகள் நகைச்சுவையாக இவரைப் பார்த்து "கிணறுகாவி வந்து விட் டாயா" என்றார். அதற்கு முத்தையா சுவாமி "இப்போது கோடைகாலம் கிணறு இன்னமும் காவி பிடிக்கவில்லை" என வினயமாக பதிலளித் தார். இதுபோல கந்தர்மடம் வை.சி.சி. குமார சாமி சுவாமியின் நெருங்கிய அடியவர். அவரது மகன் டாக்டர் நித்தியானந்தா காலியில் வைத்திய நிபுணராக கடமையாற்றியவர். இவர் யாழ்ப்பாணம் வரும்போது கட்டாயமாக யோகர் சுவாமியைத் தரிசிப்பார். ஒருமுறை டாக்டர் நித்தியானந்தா சுவாமியைத் தரிசித்துப் போகும்வேளை யோகர் சுவாமி "விடுகாலி போ வெளியே" எனக் கூறினார். டாக்டர் நித்தி யானந்தாவும் மனவருத்தத்துடன் வீடு திரும்பி னார். வீடு திரும்பிய அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவரது உயர் அதிகாரியிட மிருந்து பின்வரும் கடிதம் வந்திருந்தது. "அவர் காலி ஆஸ்பத்திரியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு வெளிநாட்டில் மேற்படிப்புக்கு செல்லுமாறு கேட்கப்பட்டிருந்தார். டாக்டர் சுவாமியின் நகைச்சுவையை எண்ணி ஆனந் தக் கண்ணீர் வடித்தார்.

யோகர் சுவாமி வாழ்ந்த காலத்தில் பல பக்குவப்பட்ட ஆன்மாக்கள் அவரை நாடி அருள் பெற்றனர். சுவாமியின் அடியவர்கள் பலர் சுவாமியின் நினைவாக தமது பிள்ளை களுக்கு யோகேந்திரா, யோககுருநாதன், யோகராசா, யோகரன்பன், யோகரமணன், யோககுமார், சிவதொண்டன், யோகாம்பிகை, யோகேஸ்வரி என பெயரிட்டு மகிழ்ந்தனர். பல அடியவர்கள் யோகர் சுவாமிகள் தமது இல்லத்திற்கு முதல்முதலாக எழுந்தருளிய தினத்தை வருடந்தோறும் நினைவு தினமாகக் கொண்டாடுவர்.

சுவாமிகள் மறையுமுன் மார்க்கண்டு சுவாமிக்கு கூறிய வாசகம் "நான் ஒருத்தருக் கும் ஒரு குறையும் வைக்கவில்லை" சுவாமி எங்களுக்கு அருளிய "நற்சிந்தனை"யை நாள் தோறும் அருந்தி அதன் வழி நடந்தால் நம்மைப் பீடித்திருக்கும் பீடைகள் தீரும் என்பது உறுதி.

## ஐப்பசி மற்றும் கார்த்திகைமாத குருபூசைத் தினங்கள்

**09.11.2011** ஐப்பசி 23 புதன்கிழமை

திருமூலர் குருபூசை

**20.11.2011** கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை

மெய்ப்பொருள் நாயனார் குருபூசை

**30.11.2011** கார்த்திகை 14 புதன்கிழமை

[illegible] குருபூசை

துன்பம் எமக்கொரு மௌன ஆசிரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# அன்பும் இறைஇயலும்

திரு த. நாகராசா அவர்கள்

தமிழ் நாட்டில் வாழ்ந்த பூசலார் என்ற நாயனார் வாழ்க்கையும் அன்பிற்கும் இறை இயலுக்குமிடையேயுள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகின்றது. மன்னன் பெரிய கோயிலைக் கட்டிவிட்டேனென்று பெருமிதம் கொண்டான். ஆனால் பூசலாரோ உள்ளத்திலே பெரிய கோயிலைக் கட்டினார். இரண்டு பேருடைய கும்பாபிஷேகமும் ஒரேநாளில் நடைபெற்றது. ஆனால் மன்னன் கட்டிய கோயிலை இறைவன் ஏற்காது பூசலார் கட்டிய கோயிலையே ஏற்றுக் கொண்டார். காரணம் பூசலார் இறைவன்மீது கொண்ட அன்பே பிரதான காரணம். மன்னனும் இறைவன்மீது அன்புகொண்டு கோயில் கட்டியது உண்மை என்றாலும் பூசலார் கொண்ட மிக்க அன்பும் அவர் உள்ளத்தில் கட்டிய கோயிலும் இறைவனுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்ததனால், இறைவன் அதை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தது. மன்னனுக்கு அன்பு இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் பூசலார் உள்ளத்தில் கட்டிய கோயிலே இறைவனை ஏற்கச் செய்த பிரதான காரணமாகும்.

ஏறிபத்த நாயனார் அல்லது கல்லெறி நாயனார் என்ற நாயனார் இருந்தாராம். அவர் வீதியால் போகும்போது வீதியில் இருந்த கோயிலுக்கு கல்லால் எறிந்து விட்டுச் செல்வாராம். இறைவன் மீது கல்லெறிந்தது அன்பின் காரணமாக ஏற்பட்டது. இவரது அன்பை அறிந்த இறைவன் இவரது அன்பைச் சோதிக்கும்பொருட்டு வீதியில் கல்லொன்றையும் இல்லாது செய்து விட்டாராம். இதனைக் கண்ட நாயனார் இறைவனுக்கு எறிவதற்கு கல் இல்லாத காரணத்தால் தனது தலையைத் திருகி எறிய முயன்றாராம். இவரது பக்தியையும், அன்பினையும் மெச்சி இறைவன் தோன்றி அவருக்கு அருள் செய்ததாக கல்லெறி நாயனாரின் வாழ்க்கை வரலாற்றின் மூலம் அறியலாம்.

அன்பிற்கும் இறைஇயலும் என்பவற்றிற்கு எடுத்துக்காட்டாக முக்கிய இரண்டு சம்பவங்களை இங்கு குறிப்பிடல் வேண்டும். ஒன்று அப்பூதி அடிகள் வரலாறு. இரண்டு சிறுத்தொண்ட நாயனார் வரலாறு. அப்பூதி அடிகளார் சிவன் அடியாராகிய திருநாவுக்கரசர் மீது பற்று வைத்துத் தான் செய்யும் தொண்டு நிறுவனங்கள் எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசரின் பெயரை சூட்டி வைத்தார். ஒருநாள் அப்பர் இவ்வழியால் வரும்போது தனது பெயரை, தொண்டர் நிறுவனங்களுக்கு வைத்திருப்பதுகண்டு ஆச்சரியமடைந்தார். அங்கு வந்தவர் அப்பர் சுவாமிகள் எனக் கேள்விப்பட்ட அப்பூதி அடிகள் அவரை வரவேற்று உபசரித்தார். பின்பு அவரைத் திருவமுது உண்பதற்காக அழைத்தார். அதற்காகத் தனது மகனை வாழையிலை வெட்டி வருமாறு பணிக்க அவனும் வாழையிலை வெட்டும்போது அரவத்தால் கடியுண்டு மரணமானான். அவனை அப்பர் உயிர் பெறச்செய்தார். இச்செயல் சிவத்தொண்டனான நாவுக்கரசர் மேற்கொண்ட பக்தியின் காரணமாக ஏற்பட்டது. எனவே தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் எனப்பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடலுக்கு உவமையாக அமைந்துள்ளது. அப்பூதி அடிகள் சிவனின் பக்தனாக இருந்தபொழுதிலும் நாவுக்கரசர்மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றின்மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அன்பையும் இறை இயலையும் தொடர்புபடுத்திக்காட்டுவதாக அப்பூதி அடிகள் வரலாறு கூறுகின்றது.

கண்ணப்ப நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் ஏனைய நாயன்மார்கள் செய்யத் துணியாத செயற்பாட்டினை (செய்யத் துணியாத செயலினை) செய்யத் துணிந்தவர்கள். தனது கண்ணை கண்ணப்பர் எப்படிக் கொடுக்கத் துணிந்தாரோ அதனைப் பெரும்பாலும் ஒத்தவகையில் தனது மகனை வெட்டி கறி சமைத்துக் கொடுத்தவர் சிறுத்தொண்டர். இவரது வாழ்க்கை வரலாற்றைப் பார்க்குமிடத்து இவர் சிவனடியார்மீது மிகுந்த பக்தியுடன் வாழ்ந்தவர். சிவனடியார்களுக்கு அமுது கொடுக்காமல் தான் உணவு அருந்தமாட்டார். ஒருநாள் சிவபெருமான் எந்த அடியாரையும் அவரது வீட்டுக்குச் சென்று திருவமுது செய்யாமல் செய்து விட்டார். சிவனடியார்கள் வராது எங்கும் தேடித்திரிந்த சிறுத்தொண்டர் இறுதியாக யாரோவொரு சிவனடியார் தனது இல்லம் நோக்கி வருவதைக்கண்டு உவகையுற்று, அவரை அன்புடன் வரவேற்று திருவமுது செய்யுமாறு வேண்டினார். ஆனால் அவ்விடம் வந்த சிவனடியாரோ தனக்குப் பிள்ளைக் கறி சமைத்துத் தந்தால்தான் தான் உண்பேன் என்றார். இதைக் கேட்ட சிறுத்தொண்டர் எதற்கும் மறுப்புக்கூறாமல் அதற்கு இணங்கி சிவனடியாரை இருக்கச்செய்து தனது ஒரே மகனை வெட்டிக் கறி சமைத்து சிவனடியாரை திருவமுது செய்யுமாறு வேண்ட உனது மகனையும் அழைத்து வந்தால்த்தான் உண்பேனென்று கூறினார். இதுவரையில் தனது மனைக்கு வந்தவர் சிவபெருமானென்று சிறுத்தொண்டருக்குத் தெரியாது. யாதும் செய்ய முடியாத சிறுத்தொண்டர் நடந்த நிகழ்வினைக் கூறவும் சிவனின் அருளினால் பிள்ளை மீண்டும் உயிர்பெற்று வந்தான். சிறுத்தொண்டரின் அன்பினை மெச்சிய இறைவன் தன்னுடன் சிறுத்தொண்டரைச் சேர்த்துக்கொண்டதாக வரலாறு கூறும். எனவே சிறுத்தொண்டர் தனது ஒரே மகனென்றும் பாராமல் செய்த செயல் இறைவன்மீதும் சிவனடியார்மீதும் கொண்ட அன்பினை எடுத்துக் காட்டுகின்றது.

தமிழகத்தில் அரசோச்சிய சேரநாட்டு மன்னன் சேரமான் பெருமான் நாயனார் சிவனடியார்மீதும் சிவபெருமான் மீதும் மிகுந்த அன்பு கொண்டவன். ஒருநாள் சலவைத் தொழில் செய்யும் தொழிலாளியொருவன் உப்புமூட்டையுடன் வந்து கொண்டிருந்தான். அப்பொழுது மழை பெய்த காரணத்தால் உப்பெல்லாம் மழைத் தண்ணீரால் ஊறி அவனது மேனியெங்கும் விபூதி தரித்தவர்போல் மாறி விட்டது. தேரில் வந்துகொண்டிருந்த சேர மன்னன் சலவைத் தொழிலாளியின் தோற்றத்தைக் கண்டு தேரின் மீதிருந்திறங்கி சலவைத் தொழிலாளியை சிவனடியாரென்றெண்ணி அவனது காலின்மீது வீழ்ந்து வணங்கினான். இச்செயலைக் கண்ட சலவைத் தொழிலாளி பதைபதைத்து "அடியேன் அடிவண்ணான் என்று கூறினான். இதைக்கேட்ட சேரமன்னன் அடியேன், "அடிச்சேரனென்று கூறினான்". இவ்விடயம் மூலமாக சிவனடியார்களையும் திருநீற்றினையும் சேரமன்னன் மதித்து வாழ்பவன் என்று அறிவதுடன் இச்செயல் சிவபெருமான் மீது அவன் கொண்ட அன்பினையும் எடுத்துக் காட்டுகின்றது. இதனையும் அன்பும் இறை இயலும் என்ற விடயத்துடன் இணைத்துக் கொள்ளலாம். (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்றமிழ் பாடுக

திரு ச. லலீசன் அவர்கள்

உலகில் உள்ள ஆறாயிரம் மொழிகளுள் ஆறு மொழிகளே செம்மொழி என்ற உயர் தகுதிப்பாட்டில் வைத்து எண்ணப்படுகின்றன. அவை தமிழ், சமஸ்கிருதம், சீனம், கிரேக்கம், கீபுறு, இலத்தின் ஆகியனவாம். ஆரியம் எனப் போற்றப்படுகின்ற வடமொழிக்கு ஈடாகத் தென்மொழியாகிய தமிழ்மொழி சிறப்புற்றிருந்தது. சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட இறைவன் "அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொல் தமிழ் பாடுக" எனக் கூறியமை இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

நாயன்மார்களுடைய காலத்தில் வடமொழியாகிய சமஸ்கிருத மொழி அனைத்திந்திய மொழியாகக் கருதப்பட்டது. தற்போது நம்மத்தியில் ஆங்கிலம் பெற்றுள்ள இடத்திற்கு ஒப்பான இடத்தைச் சமஸ்கிருதம் கொண்டிருந்தது. சமஸ்கிருதம் கற்றவர்கள் சமூகத்தில் உயர்நிலையைப் பெற்றிருந்தனர். இத்தகைய பின்புலத்தில் சொற்றமிழ் பாடுக என இறைவன் குறித்ததாகச் சேக்கிழார் குறிப்பிடக் காரணம் என்ன? என்பதையும் பல்லவர் காலத்தில் வாழ்ந்த சமய குரவர்கள் தமது பாடல்களில் தமிழை முதன்மைப்படுத்தியமைக்கான காரணம் என்ன? என்பதையும் சமூகவியல் அடிப்படையில் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சைவ நாயன்மார்களுக்கும் வைணவ ஆழ்வார்களுக்கும் தமிழை முதன்மைப்படுத்த வேண்டிய ஒரு சூழல் பல்லவர் காலத்திலும் அதற்குப் பின் வந்த சோழர் காலத்திலும் ஏற்படுகின்றது. பல்லவ அரசர்களுடைய ஆட்சி சிறப்புற்ற காலமாக கி.பி. 575 தொடக்கம் கி.பி. 710 வரையான காலப்பகுதியைக் கொள்வர். பல்லவர்கள் வடநாட்டில் இருந்து தமிழகத்திற்கு வந்தவர்கள். இவர்கள் பக்திப் பயிர் வளர்த்தனரேயன்றி தமிழ் மீது நாட்டத்தை வெளிக்காட்டவில்லை. ஆனால் இவர்கள் வடமொழியை அதிகளவு ஆதரித்தனர். முதலாம் மகேந்திரவர்மன் "மத்தவிலாசப் பிரகடனம்" என்ற பெயரில் நாடக நூல் ஒன்றை எழுதுமளவிற்கு பல்லவ அரசர்களின் வடமொழி அறிவு சிறப்பாக இருந்தது.

பல்லவ அரசர்கள் தமது அரசவையில் வடநாட்டு வேதியர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த நிலையில் வடநாட்டு வேதியர்கள் தென்நாட்டு வேதியர்களை சற்றுத் தாழ்ந்த நிலையில் நோக்கும் நிலை உருவாயிற்று. அந்தணர் அந்தணருக்கு அடிமையாகலாமா? எனச் சுந்தரர் வினாத் தொடுத்ததை இந்தப் பின்புலத்தில் நோக்க முடிகின்றது.

சுந்தரருடைய திருமணத்தைத் தடுத்தாட்கொள்வதற்காக வந்திருக்கின்ற கிழ வேதியரிடம் சுந்தரர் வினா எழுப்புவதாக இக்காட்சி அமைகின்றது.

மணப்பந்தலுக்கு வந்த கிழவேதியர் திருநாவல் ஊரராகிய சுந்தரர் தனக்கு அடிமையானவர் எனச் செப்புகின்றார்.

ஆவதிது கேண்மின் மறையோர் என் அடியான்
இந்நாவல் நகரூரன் இது நான் மொழிவது

என்கிறார் கிழவேதியர். இதற்குச் சுந்தரர்,

ஆசுஇல் அந்தணர்கள் வேறுஓர் அந்தணர்க்கு அடிமையாதல்
பேசஇன்று உன்னைக் கேட்டோம் எனப்பதிலிறுக்கின்றார்.

தமிழ்நாட்டு வேதியரைவிட வடநாட்டிலிருந்து வருகைதந்த வேதியர்களைப் பல்லவர்கள் ஆதரித்தமைக்கான காரணத்தை அ.ச.ஞானசம்பந்தன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பல்லவர்களுடைய குலமுறை கிளத்துகின்ற தண்டன் தோட்டச் செப்பேடுகளில் இருந்து ஒரு செய்தியை அறிய முடிகின்றது. இப்பல்லவர்களின் முன்னோன் ஒருவன் கொல்லப்பட, கொல்லப்பட்டவன் மனைவியையும் சிறு குழந்தையையும் பிரஹத்சரண கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு வேதியன் காப்பாற்றினான் என்றும் அதனால் பல்லவர்கட்கு பிரஹத்சரணத்தாரிடம் நன்றியுணர்ச்சி மிகுந்து அவ்வினத்தாருக்கு வேண்டிய நலங்கள் செய்தார்கள் என்று வரும் கூற்று. இவ்வாறு வடநாட்டில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்களை வரவழைத்துக் குடியேற்றியதற்குக் காரணமாக இருக்குமா? என்ற ஐயமும் தோன்றத்தான் செய்கின்றது" (அ.ச.ஞா., பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.133)

மேற்காட்டிய பின்புலங்கள்தான் வடநாட்டு வேதியருக்குத் தமிழக வேதியர் அடிமையாக முடியுமா? என்ற தொனிப்பட சுந்தரரை இறைவனிடம் வினவ வைத்தது. இந்த நுணுக்கத்தை அறிந்த சேக்கிழார் பெரிய புராணத்தில் இக்காட்சியைப் பூடகமாகப் பதிவு செய்துள்ளார்.

உள்ளூரில் இருக்கும் கலைவல்லாரைவிட வெளிநாட்டில் இருந்து வரும் கலைவல்லார் மீது அதிக மதிப்புக் கொள்ளும் மனோநிலை தமிழர் மத்தியில் மிக நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. இதற்குப் பல்லவ, சோழ அரசர்களும் விதிவிலக்கல்லர். இராசராச சோழன், இராசேந்திர சோழன் ஆகிய இருவரும் வடநாட்டில் இருந்து இறக்குமதியாகிய சதுரானன பண்டிதர், லகுலீச பண்டிதர் என்பவர்களையே குருவாகப் போற்றினர்.

திருஞானசம்பந்தர், சுந்தரர் போன்ற தென்நாட்டு வேதியர்கள் தம்மை நிலைநிறுத்துமாறு தமிழ் உயர்வுக்கு முதன்மை கொடுத்தனர். சம்பந்தன் இறைவனே தமிழ் வடிவினன்தான் என்கிறார்

"பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழ் அவையும்" என அவர் பாடினார். அத்துடன் ஒவ்வொரு பதிகத்தின் திருக்கடைக்காப்பிலும் தமிழோடு சேர்த்துத் தன்னை இணைத்துப் பாடினார். சில பாடல்களில் தாம் வேதம் அறிந்தவர், ஆனால் தமிழால் பாட வந்தவர் என்றும் குறிப்பிடுகின்றார்.

"நல்லுரை நான்மறை நாவன் நற்றமிழ் ஞானசம்பந்தன்" (திருமுறை 1-40-11)

"நான்மறை நாவன் நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தன்" (திருமுறை 1-76 -11)

சம்பந்தருடைய காலத்தின் பின் பக்திப் பயிர் வளர்த்த சுந்தரர் கி.பி.8ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். தெய்வப் பெருமைகளை மக்கள் மொழியில் அறியச் செய்யுமாறு கட்டளை பெற்றவராக சுந்தரரை நோக்கமுடியும். ஆதலாலேயே தடுத்தாட் கொள்ளப்பெற்ற நிலையில் சொற்றமிழ் பாடுக எனக் கட்டளையிடப்படுகின்றார்.

சுந்தரர் பெற்ற தமிழுணர்வு அவரது பாடல்களிலும் வெளிப்படுகின்றது. இதன் காரணமாக இறைவனுடைய சடாமுடியில் உள்ள பாம்பை ஆட்டுவதற்கு தமிழ்த்திறம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று பாடுகின்றார்.

**பயங்கரமான பகைவன் மனம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செந்தமிழ்த்திறம் வல்லீரோ செங்கண்
அரவம் உன்கையில் ஆடவே" (திருமுறை 07 - 36 - 04)

சம்பந்தருடைய பாணியில் தன்னுடைய பெயரைத் தமிழுடன் இணைத்தும் சுந்தரர் பாடுகின்றார்.

"ஆரூரன் சொன்ன பாவனத் தமிழ் பத்தும் வல்லார்
மறையும் தாம் செய்த பாவந்தாமே"

"சந்தம் மிகு தண்தமிழ் மாலைகள் கொண்டு
அடிவீழ வல்லார் தடுமாற்றிலரே"

சுந்தரர் வாழ்ந்த காலத்திற்குரிய பின்புலங்களைத் தனது மதிநுட்பத்தால் அறிந்து பெரியபுராணத்தில் பதிவு செய்த சேக்கிழாரின் திறம் போற்றுதற்குரியது. சொற்றமிழ் பாடுக என்பதை இறைவாக்காகப் பதிவு செய்தார். அன்றும் இன்றும் இனி என்றும் இதன் முதன்மையைப் பேணுவதே பொருத்தமானதாகும்.

## செவிச் செல்வம்

**முகத்தில் ஐந்துபேர்கள் குடியிருக்கின்றார்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி. இந்த ஐவரில் மூத்தவர் காது, கடைக்குட்டி கண், இந்தக் கண் காதைப் பார்த்து, "காதண்ணா, கோயிலில் ஆராதனை செய்ததும், தட்டை என்னிடம்தான் நீட்டுகிறார்கள். உன்னிடம் காட்டுவதில்லை. பூமாலை போட்டால் கண்களில்தான் ஒற்றிக்கொள்கிறார்கள். காதிலே ஒற்றிக் கொள்வதில்லை. பிரியமானவர்களைக் கூப்பிடும்போதும் "கண்ணா! கண்ணா!" என்றுதான் கூப்பிடுகிறார்கள். "காதே! காதே!" என்று கூப்பிடுவதில்லை. ஆகவே எனக்குத்தான் பெருமை" என்று கூறிக்கொண்டது.**

**"தம்பீ! நீ இளம்பிள்ளை அவசரப்படுகிறாய்! சொல்லுகிறேன் கேள்! பிறந்தவுடன் காதுதான் எல்லாவற்றையும் கேட்கும். சிறிது நேரத்துக்குப்பின் தான் கண் திறக்கும். அது மட்டுமல்ல கண் இல்லாதவன் வித்துவானாக இருக்கலாம், காது இல்லாதவன் வித்துவானாக இருக்க முடியாது. அந்தகக்கவி வீரராகவ முதலியார்- மாம்பழக் கவிச்சிங்க நாவலர், ஆகியோர் கண் இல்லாத வர்கள். யாருக்குக் காது கேட்கவில்லையோ அவன்தான் பொதுவில் ஊமை யாகவும் இருக்கிறான். காது குத்தும் கல்யாணம் வைதீகச் சடங்குகளில் ஒன்று. அது மாதிரி கண்குத்துகின்ற கல்யாணம் உண்டா?**

**காது இருந்த இடத்திலேயே இருந்து வேலை செய்யும். முதலாளி இருந்த இடத்திலேயே இருந்து வேலைக்காரர்களிடம் வேலை வாங்கலாம். கண் அந்தந்த இடங்களுக்குச் சென்று வரும். அதுமட்டுமன்று முதலில் ஆபத்து வருவது கண்ணுக்குத்தான். நாற்பது வயதிலேயே வெள்ளெழுத்து வந்துவிடும். காதுக்கு அப்படியில்லை. ஆகவே தம்பீ! எனக்கு மிகுந்த பெருமை உண்டு. அதனால்தான் அந்தணர்கள் அசுத்த காலத்தில் பூணூலைக் காதில் சுற்றிக்கொள்கிறார்கள். ஒரு பொருளைச் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டேயிருந்தால் கண் வலிக்கும். எழுதிக்கொண்டேயிருந்தால் கைவலிக்கும். சாப்பிட்டுக்கொண்டேயிருந்தால் வயிறு வலிக்கும். பேசிக் கொண்டேயிருந்தால் வாய் வலிக்கும். ஆனால் மணிக்கணக்கில் கேட்டுக் கொண்டே இருந்தாலும் காது வலிக்காது" என்று சொன்னது.**

**-வாரியார் சுவாமிகள்-**

**ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# பரிபாடல் பகரும் பக்திப் பிரார்த்தனை - 4

**திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

பரிபாடல் பதினான்காம் பாடல் செவ்வேள் மீது பாடப்பெற்றது. "கார்மலி கதழ்பெயல்" என்று தொடங்கும் பாடல் "தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே" என்று நிறைவு பெறுகின்றது அப்பாடல். முப்பத்திரண்டு அடிகளால் ஆனது. கேசவனார் என்னும் புலவரால் பாடப்பெற்றது. இசையும் அவரே. பண்ணோதிறம்

"மேகம் மிக்க மழையைப் பொழிந்தது. அந்நீரை ஏற்று நீர் நிறைந்த சுனைகள் மலர்களை மலர்ந்தன. குளிர்ந்த நரிய கடம்பு மணங் கமழ் மலர்கள் பூத்துப் பொலிவுற்றது. வண்ணம் மிக்க வண்டுகள் தாதினைத்தேடி ஊதா நின்றன. ஈக்கள் முரலும் இசை பண்களை நிகர்த்தன.

"எம்பெருமானே நினது நெடிய திருப்பரங்குன்றச் சாரலில் மூங்கில்கள் தழைத்தன. தழைத்த மூங்கில்கள் நினது முன்னர் ஆடும் கூத்தப்பெண்களுடைய தோள்களை ஒத்தன. வாகையின் ஒளிமிக்க மலரைப் போன்ற சூட்டினையுடையன மயில்கள். மயில்கள் அகவும் ஒலி தலைவியரைப் புணர்ந்து பின்னர் பிரிந்து சென்ற தலைவரைக் காலத்தைப் போக்காதே வன்மின்கள் என்று அழைப்பவருடைய ஒலிக்கு ஒத்து ஒலிப்பன.

"கொன்றையின் புதுமலர் தாழும் பொன்மாலை போன்று பொலிந்தன. அழுது கொண்டிருக்கும் சிறுமியர்களுக்கு அழுகை அகலும் பொருட்டுத் தாயர் அதோ புலி புலி என்று சுட்டி சொல்லவல்லதாக மெல்லிய பூங்கொத்து வேங்கைமலர் அகன்ற பாறைக் கல்லின்மேல் உதிர்ந்து பரவிக் கிடப்பன.

"இவற்றோடு நீர்நிலைகளின் பக்கங்களில் தழைத்த காந்தளின் பூங்கொத்துக்கள் மலர்வன. தோன்றியினுடைய கொழுந்து படர்ந்த கொடியில் தோன்றிய அழகுடைய பவழம் போன்ற செந்நிற மலர் பரக்கும்.

"பெருமானே நினது திருப்பரங்குன்றம் கார்கொள்ளும் காட்சி கண்கவர் மிக்கது.

"போரில் மிக்குச் சென்று சூரபன்மன் ஆகிய மாமரத்தினைக் கிளையோடு அறுத்தருளிய சுடர்விடு வெற்றிவேல் பெருமானே!

"களங்கமற்ற கார் காலத்து வெண்மேகம் கிளர்ந்து எழுந்தாற் போன்ற அகில் முதலியவற்றால் புகைக்கப்பட்ட நறுமணப் புகையை நயந்தவனே!

"ஓராறு முகமும் ஈராறு தோள்களுமுடையவனே!

"அழகால் பிறமகளிரை வென்ற வெற்றியில் விளங்கிய வள்ளிக்கு வாய்த்தவனே!

"தலைவியர் தம்மைப் பிரிந்து சென்ற கணவர் விரைந்து வந்து புணர்ந்து பின்னர் நீங்காமையிருக்க யாழிசை மீட்டு நின்னைப் பரவிப் பாடும் பாட்டினை விரும்புவனே!!

"பெருமானே! நிவந்தோங்கு இமயத்து நீலப் பஞ்சுனை பதுமப் பாயலில்" நீ கார்த்திகை மகளிரிடத்துப் பிறந்த அவ்விளம் பருவத்திலேயே சிறந்தோர் நின்னை எரியுமிழ் வச்சிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இகந்து வந்து எறிந்த அரிதமர் சிறப்பின் இந்திரன் முதலியோர் மிகவும் அஞ்சுதற்குக் காரணமான ஆற்றலுடையானே! புகழினையுடை யோனே!!

"இருபிறப்பினையும் இருபெயரினையும் அருளுடைய நெஞ்சத்தினையும் ஒப்பற்ற புகழினையுமுடைய அந்தணருடைய வைதிக அறத்தினைச் சார்ந்தவனே!

"பிறந்த ஞான்றே நின்னை யுட்கிச்
சிறந்தோர் ரஞ்சிய சீருடை யோயே
இருபிறப் பிறாபெய ரீர நெஞ்சத்
தொருபெய ரந்தணர் அறனமர்ந் தோயே

(பரிபாடல் 14 அடிகள் 25-28)

"நீ அத்தன்மை உடையை ஆதலின் அடியேங்கள் நின்னைப் பெரிதும் விரும்பி நின்னை அடுத்தடுத்து வழிபடுகின்றோம். அங்ஙனம் வழிபடுதல் எப் பயனைக் கருதி என்பையாயின் அந்த வழிபாடு தாமே மேன்மேலும் நின்னுடைய மிகப்பழைய மரபுப் புகழ்களையும் மேலும் பலப்பல ஆகுக என்று கருதியேயாம். அருள்புரிவாயாக

"அன்னை யாகலின் அமர்ந்தியா நின்னைத்
துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்
இன்னு மின்னுமவை யாகுக
தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே"

(பரிபாடல் 14 அடிகள் 29-32)

(வளரும்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளை வரவேற்போம்

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

உங்களுக்குச் சந்தோஷமானது என்று நம்பி நீங்கள் ஏற்றுக்கொண்டது எதுவாக இருந்தாலும், அதோடு சில சவால்கள் இலவச இணைப்பாகச் சேர்ந்துவரும்.

அது கடின உழைப்பாக இருக்கலாம், மும்முரமான போட்டியாக இருக்கலாம். எதிர்பாராத தடைகளாக இருக்கலாம்.... எதுவாக இருந்தாலும் அதையெல்லாம் ஆசையோடு, சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வளர்ச்சியில் உண்மையிலேயே விருப்பம் இருந்தால், பிரச்சினைகளை ஆசையோடு வரவேற்கப் பழகுங்கள்.

தோற்றுக்களைத்தவர்கள் பொதுவாகச் சொல்லும் காரணம் என்ன தெரியுமா? 'எனக்கு மட்டும் நேரமே சரியில்லை. நான் மாவு விற்கப் போனால் காற்று அடிக்கிறது. உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது'

நீங்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் எப்படியும் இந்த உலகம் உங்கள் மீது பிரச்சினைகளை வீசி வேடிக்கை பார்க்கத்தான் போகிறது. அப்புறம் ஏன் அவற்றை எதிர்கொள்ளத் தயங்குகிறீர்கள்? கடினமான சந்தர்ப்பங்கள் உண்மையில் சாபங்கள் அல்ல. உங்களுக்கு அருளப்படும் வரங்கள்!

ஒரு சினிமாவுக்குப் போகிறீர்கள். அடுத்தடுத்த காட்சிகள் நீங்கள் எதிர்பார்த்தபடியே வந்து கொண்டிருந்தால் அந்த சினிமாவை ரசிப்பீர்களா, அல்லது 'போர்' என்று எழுந்து வெளியே வருவீர்களா?

எதிர்பாராத திருப்பங்கள்தானே ஒரு வாழ்க்கையைச் சுவையாக அமைத்துத் தரமுடியும். கடவுளிடம் ஒரு விவசாயி கடுமையாகச் சண்டைக்குப் போனான். "உனக்குப் பயிர்களைப்பற்றி என்ன தெரியும்? நீ நினைத்தபோது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால் பெரிய தொந்தரவாக இருக்கிறது. பேசாமல் அந்த வேலைகளை விவசாயி ஒருத்தனிடமே ஒப்படைத்து விடேன்!" கடவுள் உடனே, "அப்படியா? சரி. இனிமேல் வெளிச்சம், மழை, காற்று எல்லாம் உன் கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்" என்று வரம் அருளிவிட்டுப் போய்விட்டார்.

விவசாயிக்குச் சந்தோசம் பிடிபடவில்லை. அடுத்த பருவம் வந்தது. "மழையே பெய்" என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்னபோது, நின்றது. ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதை தூவினான். மழை, வெயில், காற்று எல்லாமே அவன் சொன்ன பேச்சைக் கேட்டன. பயிர் பச்சைப் பசேலென்று வளர்ந்தது. வயல்வெளியைப் பார்க்கவே பிரரம்மியமாக இருந்தது. அறுவடைக்காலம் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான். திறந்து பார்த்தான். அதிர்ந்தான். உள்ளே தானியத்தைக் காணவில்லை. அடுத்தது, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு கதிராக வெட்டி எடுத்துத் திறந்து பார்த்தால், ஒன்றிலுமே தானியம் இல்லை.

"ஏ கடவுளே!" என்று கோபத்தோடு கூப்பிட்டான். "மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதங்களில்தானே பயன்படுத்தினேன்! ஆனாலும், பயிர் பாழாகிவிட்டதே, ஏன்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் புன்னகைத்தார்; "என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்று வேகமாக வீசும் அப்போது கதிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக்கொள்ளும் குழந்தைகளைப்போல பூமிக்குள் தங்கள் வேர்களை மிக ஆழமாக அனுப்பிப் பிடித்துக்கொள்ளும். மழை குறைந்தால், தண்ணீரைத் தேடி வேர்களை நாலா பக்கமும் அனுப்பும், போராட்டம் இருந்தால்தான் தாவரங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, வலுவாக வளரும். எல்லாமே வசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்குச் சோம்பேறித்தனம் வந்துவிட்டது. தளதளவென்று வளர்ந்ததே தவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்க அவற்றுக்குத் தெரியவில்லை!"

"வேண்டாமடா, உன் மழையும் காற்றும்! நீயே வைத்துக்கொள்" என்று கடவுளிடமே திருப்பித் தந்துவிட்டான் விவசாயி.

ஆம்...... வாழ்க்கை எல்லாவிதத்திலும் சௌகரியமாகவே அமைந்துவிட்டால், அதைப் போன்றதொரு வெறுமை வேறெதுவும் இல்லை.

பிரச்சினைகள் உங்களைப் போட்டு அழுத்தும்போதுதான் உங்கள் திறமை அதிகரிக்கும். சவால்கள்தான் மனிதனை முழுமையாக்கும்.

இருட்டு என்றொரு பிரச்சினை இருந்ததால்தானே மின்விளக்கைக் கண்டுபிடித்தீர்கள்? பயணம் என்பது பிரச்சினையாக இருந்ததால்தானே வாகனங்களுக்கு உருக்கொடுத்தீர்கள்? தொலைவில் இருப்பவர்களைத் தொடர்பு கொள்வது பிரச்சினையாக இருந்ததால்தானே, தொலைபேசியை உருவாக்கினீர்கள்.

பிரச்சினைகளே இல்லாமல் இருந்து விட்டால் உங்கள் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்?

சங்கரன்பிள்ளை புதிய வீடுகட்ட விரும்பினார். கட்டட நிபுணர் விதவிதமான பிளான்களைக் காட்டினார்.

'இல்லை, இது இல்லை. நான் நினைத்திருப்பது வேறுமாதிரி' என்று ஒவ்வொரு பிளானையும் நிராகரித்தார் சங்கரன்பிள்ளை. நிபுணர் களைத்துப்போனார். "உங்கள் மனதில் என்னதான் இருக்கிறது"? என்று கேட்டார்.

ஒரு புராதன பித்தளைக் குமிழைச் சங்கரன்பிள்ளை தன் பொக்கெட்டிலிருந்து எடுத்துக் காட்டினார். "இதைக் கதவில் பொருத்தக்கூடிய மாதிரி ஒரு வீட்டுப் பிளானை இது வரை நீங்கள் எனக்குக் காட்டவில்லையே?" என்றார்.

பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தைரியமில்லை... ஆனால், வாழ்க்கை மட்டும் வசதியாக அமைய வேண்டும் என்று நினைப்பவர்கள்தான் சங்கரன்பிள்ளையைப்போல் கதவுக்குமிழை வைத்துக்கொண்டு அரண்மனைக்கு ஆசைப்படுகிறார்கள்.

எதற்காக எல்லாம் திட்டப்படியே முடியவேண்டும்?

ஏதாவது ஒன்று பிய்த்துக்கொண்டு தான் போகட்டுமே... அதை எதிர்கொள்வோம். சமாளிப்போம். அதுதானே உண்மையான வெற்றி?

முடிவு சாதகமாக இருக்குமா, இருக்காதா என்று வீண் யோசனைகள் செய்து கொண்டிருக்காதீர்கள். முழுமையான ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள்.

இனிமேல் சவால்கள் எதிர் வந்தால் அவற்றுக்குச் சாபம் கொடுக்காதீர்கள்.

அத்தனையையும் ஆசையோடு எதிர்கொள்ளுங்கள்.

**முன்னோக்கியே செல்லுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீர்த்தித் திருவகவல்

கொழும்பு தமிழ்ச் சங்
நூலகம்

பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்
தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசுந்

**பதவுரை:**

பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்- பாண்டூர் என்னும் தலத்தில் அடியவர்கள் திரண்டு வந்து வணங்கும்படி எழுந்தருளியிருந்தும். ★ தேவூர் தென்பால் திகழ்தரு தீவில்- திருத்தேவூருக்குத் தென்பக்கத்தே கடற்கண் விளங்காநின்ற தீவின்கண், கோ ஆர் கோலம் கொண்ட கொள்கையும்- அரசியற்றன்மை பொருந்திய திருவுருவினைக் கொண்டு எழுந்தருளிய கோட்பாடும்.

ஈண்டுதல்- திரளுதல் "ஈண்டு பெருந்தானை" (முல்லை 90) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நெருங்குதல் எனினுமாம். திகழ்தருதல்- விளங்குதல். கோ என்றது ஈண்டு அரசியற் றன்மையை உணர்த்தியது. பாண்டூர் தேவூர் என்பன பாண்டி நாட்டிலுள்ளன என்பர்.

தேன்அமர் சோலை திரு ஆரூரின்- வண்டுகள் தங்கும் சோலையுடைய திருவாரூரில், ஞானம் தன்னை நல்கிய நன்மையும்- வீடு பயக்கும் உணர்வினை உபதேசித்தருளிய நலமும்.

தேன்- வண்டு "தேனிமிர் கண்ணி" (பு.வெ.மா.43) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்" (ஞான 303:3) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. தேன் எனினுமமையும். ஞானம்- வீடு பயக்குமுணர்வு. 'ஞானமாவது வீடு பயக்குமுணர்வு' எனப் பரிமேழலகர் உரைத்தமையும் (குறள் 34அதி) காண்க.

இடை மருது அதனில் ஈண்ட இருந்து- திருவிடை மருதூரின்கண் அடியவர்கள் நெருங்கி வந்து வழிபட வீற்றிருந்து, படிம பாதம் வைத்த பரிசும்- தனது தூய திருவடிகளை அடியவர்களின் சென்னிமீது வைத்து அருள் செய்த கருணைத் தன்மையும்.

★ தேவூர் வேதாரணியத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரூர். அதற்குத் தென்பால் திகழ்தருதீவு, மணற்றி, மணிபல்லவம் என்னும் பெயர்களையுடைய யாழ்ப்பாணத் தீபகற்பமாகலாம். இத்தீபகற்பத்திலுள்ள சிவ தலங்களுள் நகுலேச்சரம் மிக்க பழமையுடையது. ஆதலே இறைவன் கோவார் கோலங் கொண்ட தலமாக அமையலாமோ என எண்ண இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைமருது- திருவிடை மருதூர், ஈண்ட இருந்து- நெருங்கி வந்து வழிபட இருந்து. "இடைமரு துறையும் எந்தாய் போற்றி" (போற்றி 145) இடை மருதே யிடங்கொண்ட அம்மானே" (ஏசறவு 9) வருந்திய மாதவத்தோர் வானோ ரேனோர் வந்தீண்டிப் பொருந்திய... இடை மருதில், பொருந்திய கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே" (தே.ஞான 192:5) என வருவன காண்க. படிமம் என்றது ஈண்டு தூய்மை என்னும் பொருள்பட நின்றது.

ஏகம்பத்தில் இயல்பாய் இருந்து -திருக்கச்சி ஏகம்பம் என்னும் காஞ்சிமாநகரில் தமது இயற்கையான அருவத் திருமேனியோடு வீற்றிருந்து, பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்- இடப்பாகம் உமையம்மையாரோடு கூடியதான தன்மையும்.

திருக்கையிலையில் இறைவி தன் உள்ளத்தில் எழுந்த அன்பின் மிகுதியால் இறைவனது பின்புறத்திற் சென்று அவ்விறைவனுடைய திருக்கண்களைத் தமது அழகிய திருக்கரங்களாற் புதைத்தலும் அக்கண்களினொளி மறைய அதனால் எல்லாவுலகங்களும் எட்டுத் திசைகளும் விண்ணோருலகமும் இருளடைந்தன. நிலவுல்கினர் பூமியையும் அதிலுள்ள பொருள்களையும் காணாராயினர். தேவர் முதலிய யாவரும் ஒன்றும் தோன்றாது வருந்தி இருள்வயப்பட்டுத் பதைபதைத்துப் பெருங்குரலிட அதனைக் கேட்ட அம்மையார் தமது திருக்கரத்தை நீக்க இறைவன் தமது கண்களைத் திறந்தனர். உடனே ஞாயிறு திங்கள் வான் மீன் முதலிய எல்லா ஒளி மண்டலங்களும் விளங்கின. இறைவன் இறைவியை நோக்கி நீ நம் கண்களை விளையாட்டாக மூடித்திறந்தது ஒரு சிறுபொழுதேயாயினும் அஃதுஉலகங்களுக்கெல்லாம் எண்ணிறந்த பல ஊழிக்காலங்களாகக் கழிந்து படைத்தல் முதலிய தொழில்கள் இல்லையாம் வண்ணம் தகைந்த காரணத்தால் அதற்குக் கழுவாயாக நீ நம்மை அகன்று மண்ணுலகிற் சென்று நமக்கு இனிய காஞ்சிமாநகரில் நம்மைச் சிவலிங்க வடிவில் வைத்து வழிபடுவாயாக என்று விடுப்ப, இறைவியும் இறைவனைப் பிரிந்துபோந்து காஞ்சியிலே கம்பையாற்றங்கரையில் ஒரு மாமரத்தடியினிற் சிவலிங்கத் திருவுருவைக் கண்டு வழிபட, இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் அக்கம்பையாற்றில் வெள்ளம் சிவபூசையைச் சிதைவ செய்வதுபோற் பெருக்கெடுத்துக் கடுகி வருதலும் இறைவி மனங்கலங்கி இப்பெருநீர் வெள்ளம் எம்பிரான் மிசையே நண்ணும்; இனிச் செய்வதென்னே என்று தம்பெருமானார்பால் அன்பு நிறைந்தெழுகின்ற திருவுள்ளத்தோடும் தன் இருகரங்களாலும் அச்சிவலிங்கத்தினைக் கட்டித் தழுவப் பெருமானும் அத்திருவுருவினின்றுந் தோன்றி உமையம்மையை அணைத்துத் தனது இடப்பாகத்திற் பொருந்த வைத்தான் எனக் காஞ்சிபுராணம் கூறும்.

ஏகாம்பரம் என்பது ஏகம்பம் என மருவியது. ஏக ஆம்பரம்- ஒரு மாமரம். "நிறைமலர்த் தனிமா நீழ னித்தனே" (காஞ்சி. தழுவக் 405) என வருதலுங் காண்க. (தொடரும்....

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட உற்சவ தினங்கள்

நவம்பர்

**27.10.2011 ஐப்பசி 10 வியாழக்கிழமை**
கந்தசஷ்டி விரதாரம்பம்

**01.11.2011 ஐப்பசி 15 செவ்வாய்**
கந்தசஷ்டி விரதம், மாலை சூரசம்ஹாரம்

**02.11.2011 ஐப்பசி 16 புதன்**
பாரணை, மாலை தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்

**11.11.2011 ஐப்பசி 25 வெள்ளி**
ஐப்பசி கடைசி வெள்ளி விரத தினம், கார்த்திகை விரத தினம், பகல் விஷேட உற்சவம்.

**வெற்றி எண்ணத்தைப் பொறுத்து இருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




## பாவையிலிருந்து வந்த பார்வை

அலைகள் வீசும் வங்காள விரிகுடா கடற்கரை அருகில் உள்ள மயிலாப்பூரில் சிவநேசர் என்ற ஒரு வணிகர் வாழ்ந்து வந்தார்.

அவர் கடல் வணிகத்திலே மரக்கலன்கள் (கப்பல்கள்) அமைத்து வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினார்.

குபேரனைக் காட்டிலும் செல்வம் மிகுந்தவராகத் திகழ்ந்தார். ஆனால் அவருக்கு திருமணம் ஆகி வெகுநாட்கள் ஆனபின்பும் குழந்தை இல்லாமல் இருந்தது.

குழந்தை இல்லாததால் மனவருத்தம் கொண்டார். அக்குறைதீர வழி என்ன என்று அனைத்து கற்றறிந்த பெரியவர்களிடம் கேட்டார்.

சிவபெருமானை வணங்குவதும் தான தருமங்கள், அறச்சாலைகள் நிறுவுதல் போன்ற செயல்களும் உங்களுக்கு பலனைத் தரும் என்று கற்றவர்கள் கூற, சிவநேசர் அவ்வண்ணமே செயல்படத் துவங்கினார்.

அறச்செயல்களின் பயனால் சிவநேசர் ஒரு பெண் குழந்தை பெற்று ஆனந்தம் அடைந்தார். அந்தப் பெண் குழந்தை பூவின் தன்மைபோல் மென்மையாகவும் அழகாகவும் விளங்கியதால் பூம்பாவை என்ற பெயரிட்டு அழைத்து வந்தார்.

குழந்தைப் பேற்றை இறைவன் தந்ததால் நன்றியோடு அவருக்கு விழா எடுத்துப் பாராட்டி அந்தணர்களுக்கும், ஏழை எளியவர்க்கும் பொன், பொருள், ஆடைகள் முதலானவற்றை தானமாகத் தந்தார்.

பூம்பாவை முறையாக வளர்ந்து ஏழு வயதை அடைந்தாள். மிகவும் அழகாகவும் பொன் அணிகள் அணிந்தும் தோழிகள் பலர் துணையுடனும் கன்னிமாடத்தில் செல்வாக்குடன் திகழ்ந்தாள்.

சிவநேசர் தமது செல்வங்கள் அனைத்தும் தனது மகளுக்கும், அவளுடைய கணவனுக்கும் உரியது என்பதை அறிந்து பூம்பாவைக்கு ஏற்ற மணமகனை தெரிவிப்பவருக்கு தக்க சன்மானம் வழங்குவதாய் பறைசாற்றினார்.

சிவனருளால் தோன்றிய மகளை சீகாழிப் பதியிலே சிவனால் ஞானப்பால் உண்டு சமணர்களை வாதிலே வென்று வரும் ஞானசம்பந்தரே மணம்புரியத் தக்கவர் என்று பலரும் சிவநேசருக்குக் கூறினர்.

சிவநேசரும் ஞானசம்பந்தர் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தமையால் "அதுவே சரி" என்றுகூறி இந்த இனிய சொல்லை தன்னிடம் உரைத்தவர்க்கெல்லாம் பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுத்தார்.

"எனது மகள் பூம்பாவையையும் என் உடமைகளையும் என்னையும் சீகாழி

**காலம் தவறினால் எல்லாம் தவறாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்புதல்வன் திருஞானசம்பந்தருக்கு அடிமையாக அளிக்க ஒப்புக்கொள்கிறேன்" என்று அனைத்து சான்றோர்கள், பெரியவர்கள் முன்னிலையில் கூறினார் சிவநேசர்.

பூம்பாவை கன்னிமாடத்தில் பூப்பறிக்கச் செல்ல, பூச்செடியில் ஒரு விஷப்பாம்பு இருந்து விதிவசமாய் பூம்பாவையைக் கடித்தது.

பூம்பாவை மயங்கி விழ உடனிருந்த தோழியர் அவளைக் கன்னிமாடத்திற்கு அழைத்து வந்து நடந்ததைச் சிவநேசரிடம் கூறினார்கள்.

விஷம் ஏறிப் பூம்பாவை மயங்கி இருக்க, தன் மகளின் விஷம் நீக்கி காப்பாற்றுபவர்களுக்குப் பொன்னும் பிற செல்வங்களும் பரிசாகத் தருவேன் என்று பறைசாற்றினார் சிவநேசர்.

பல வைத்தியர்கள் முயன்றும் அந்த விஷத்தை நீக்கமுடியாது போனதால் பூம்பாவையின் உடலில் உயிர் தங்காமல் போனது.

இவள் திருஞானசம்பந்தருக்கு உரியவள். எனவே நாம் வருத்தம் கொள்ள வேண்டாம் என்று கருதி பூம்பாவையின் உடலைத் தீயில் எரித்து எலும்புகளையும் சாம்பலையும் ஒரு பானையில் எடுத்து வைத்தார்.

அந்தப் பானையை ஞானசம்பந்தரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தன் மகளை உயிருடன் வளர்ப்பது போன்றே பாலமுது அளித்தும் அணிகலன் அணிவித்தும் போற்றி வந்தார்.

திருஞானசம்பந்தர் மயிலைக்கு அருகாமையில் உள்ள திருவொற்றியூர் என்னும் நகருக்கு வந்துள்ளார் என்னும் நற்செய்தியை சிவநேசரிடம் அறிந்தவர் கூற சிவநேசர் மகிழ்ந்தார்.



திருவொற்றியூர் வந்து ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கி நடந்தவற்றை விளக்கி தாங்கள் மயிலாப்பூர் வந்து சிறப்புறச் செய்யவேண்டுமென வேண்டினார்.

சிவநேசரின் அன்புக்காய் அவர் விருப்பத்திற்கு சம்மதம் தெரிவித்தார் சம்பந்தர்.

ஞானசம்பந்தரை இறைவனின் அருட்பேறு பெற்றவராக எண்ணி திருவொற்றியூரிலிருந்து மயிலாப்பூருக்கு வழி எங்கும் நீண்ட முத்துப்பந்தலை அமைத்தார் சிவநேசர்.

மங்கள வாத்தியங்கள் முழங்க சம்பந்தரை தனது நகரான மயிலாப்பூருக்கு அழைத்துச் சென்றார். மயிலாப்பூர் வந்தடைந்த ஞானசம்பந்தர், "எலும்புகள் வைக்கப்பட்டுள்ள பானையை திருக்கோயிலிலுள்ள மண்டபத்தில் வையுங்கள்" என்று கூறினார்.

சிவநேசர் அவ்வாறே செய்ய, என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய சிவநேசர் மற்றும் அவ்வூர் மக்கள் அனைவரும் ஆவல் கொண்டு கூடினர்.

இந்த உலகில் பிறப்பது வினையின் காரணமாகும். அடியார் பிறந்த நாம் அடியவர்களுக்குத் தொண்டு புரியவும் இறைவனின் திருவிழாக்கள் கண்டு உய்வு பெறவுமே பிறப்பு எடுக்கின்றோம்.

இச்செயல்கள் யாவும் புரியாமல் இவ்வுலகைவிட்டு போய்விடுவாயா பூம்பாவையே, என்று எண்ணி, எலும்புகளுள்ள பானையை நோக்கி 'பூம்பாவாய்' என்று ஞானசம்பந்தர் விளித்தழைக்க, எரிந்து கருகிய எலும்புகள் ஓர் அழகிய பெண்ணுருவம் பெற்றன.

பூம்பாவை பானையில் இருந்து தாமரை மலர்போல் வெளிப்பட்டாள். சிவநேசர் அகம் மகிழ்ந்து பூம்பாவையை "தாங்கள் திருமணம் செய்தருள வேண்டும்" என்று ஞானசம்பந்தரை வேண்டினார்.

"அன்பரே, தங்கள் மகள் பூம்பாவை மறைந்து விட்டாள். இவளோ சிவனார் தந்த மகள். உங்கள் குறை தீரவே இந்த மகள் எழுந்தருளினாள். எனவே நான் மணம்புரிய இயலாது" என்று ஆறுதல்கூறி தன் சைவத் தொண்டை மேம்படுத்த இறைவனை வணங்கி வேறு ஊருக்குச் செல்லத் துவங்கினார் ஞானசம்பந்தர்.

சிவநேசரும் பூம்பாவையும், அவர் குடும்பத்தினரும் சிவனருள் நிரம்பப்பெற்று வாழ்ந்து சிவலோகம் அடைந்தனர்.

## அருள் ஞானச்சுடரே வாழ்க!

ஆற்றங்கரையான் அருளால் அழகாக அச்சேறி
அன்புக் கரங்களில் அணிசெய்து நல்லைநகர் வீதி
ஏற்றமுடன் பிரகாசிக்கும் எழில்மிகு சஞ்சிகையே!
எங்கள் பிணியகற்றும் ஒளடதப் பெட்டகமே!
மாற்றங்கள் வந்து எம் வாழ்க்கையது மாறினபோதுவே
மார்க்கமாய் நீ வந்து இருளகற்றி ஒளி தந்தாய்!
தீற்றமாய் விளங்கியே சிறப்புடனே நாளும் வாழ்க
அருள் ஞானச்சுடரே நீ பல்லாண்டு வாழியவே!


சிந்தனையைத் தூண்டிடும் சிறப்புமிகு கட்டுரைகள்
சீரான வாழ்வுக்கு வழிகாட்டும் அறிவுரைகள்
கந்தனைக் கரங்குவித்துக் கண்டாங்கெனச் சொல்ல
சுடுவினை அகலுமெனும் கருத்துள்ள கவிதைகள்
உந்தனை நாம் எதிர்பார்த்து எப்போ நீ வருவாயென
ஏக்கமுடன் வாசலிலே காத்திருக்க வைத்து உனை
சிவத்திண்ணையே செய்து வரவேற்று உளம் மகிழ்ந்தோம்
வளமுடனே என்றென்றும் நீ பல்லாண்டு வாழியவே!

-இராஜேஸ்வரி ஸ்ரீதரன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்




கொற்றாவத்தை பூமகள் - மழலைகள் பூங்கா மாணவர் களிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கான பரிசுப் பொருட் களை, திருவு ஸாத்மானந்தா சுவாமிகள் (சின்மயா மிஷன், சேலம்) வழங்குகிறார்.



பூதவராஜர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த நடேசமூர்த்தி மிதுஷா என்னும் மாணவிக்குரிய துவிச்சக்கர வண்டியினை யாக்ரத சைதன்யா சுவாமிகள் (சின்மயா மிஷன், சேலம்) மாணவியின் தந்தையிடம் வழங்குகிறார்.



மாத இறுதி வெள்ளிக்கிழமை மாலையில் நிவாரண உதவிப் பங்கீட்டுப்
பொருட்களை பெற்றுக்கொள்ளக் காத்திருக்கும்
மக்களில் ஒரு பகுதியினர்.



இந்த நிவாரணப் பங்கீட்டுப் பொருட்களை வழங்கும் தொண்டர் குழாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் வழிபாட்டுக்குரிய பஞ்சபூத சிவஸ்தலங்கள்

காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

இந்த உலகம் மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களினால் ஆனது. பரமேஸ்வரன் பஞ்சபூதங்களிலும் இருந்து அருள் பொழிகின்றார்.

**"மண்" (காஞ்சிபுரம்)**

சக்திபீடங்களில் மிகவும் சிறந்தவை முக்கியமானவை காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி என்பது உலகம் அறிந்ததே.

இந்தக் காஞ்சியிலேதான் 108 சிவாலயங்கள் இருக்கின்றன. அதில் முக்கிய ஆலயமாக இருப்பது ஏகாம்பரேஸ்வரர் ஆலயம். இங்குள்ள மூலவர் சுயம்பு லிங்கம். மண்வடிவில் அமைந்துள்ள இறைவன் பக்தர்களுக்குக் கருணை பொழிகின்றார்.

**"நீர்" (திருவானைக்காவில்)**

ஸ்ரீரங்கம் அருகே திருவானைக்காவில் அமைந்துள்ள சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள லிங்க மூர்த்தியைச் சுற்றி சதா சர்வகாலமும் நீர் சுரந்து கொண்டிருக்கும். இங்கு பரமேஸ்வரர் நீர் வடிவில் மக்களுக்கு அருள் புரிகின்றார்.

**"காற்று" (காளாஸ்திரி)**

ஆந்திரா மாநலத்தில் மலைகள் சூழ்ந்த பகுதியில் ஸ்வர்ணமுகி ஆற்றங்கரையில் அமைந்துள்ள தென்காசி என்று போற்றப்படுவது ஸ்ரீ காளாத்தீஸ்வரர் ஆலயம். இங்கு கோயில் கொண்டுள்ள காளத்தீஸ்வரன் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இந்த அமைப்பு இந்தக் கோயிலின் சிறப்புக்களில் ஒன்று.

இந்த ஆலயம் நவக்கிரக சாந்திக்கு சிறந்ததாகவும் விளங்குகிறது.

காளத்தீஸ்வரன் சன்னதியில் ஒளிவீசும் தீபங்கள் அமைதியாக இருக்கும். ஒரு தீபத்தின் சுடர் மட்டும் சதா சர்வகாலமும் அசைந்துகொண்டே இருக்கும். தீபச்சுடரின் அசைவினால் இங்கு காற்றாக பரமேஸ்வரன் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

**"நெருப்பு" (திருவண்ணாமலை)**

திருவண்ணாமலை இங்கு மலையே லிங்கமாகவும் மலையைச் சுற்றிய பகுதி திருக்கோயிலாகவும் அமைந்துள்ளது மிக விசேசமான அம்சமாகும்.

பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் ஏற்பட்ட போட்டியின் காரணமாக லிங்கேஸ்வரர் பெரும் நெருப்பாக ஜோதி வடிவில் தோன்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாதம் தீபத்தன்று திருவண்ணாமலையில் கூடும் மக்களுக்கு ஜோதி வடிவில் அருள் பொழிகின்றார்.

**"ஆகாயம்" (சிதம்பரம்)**

சிதம்பரம் கோயிலின் சிறப்பு, நடராஜப் பெருமான் கொலுவிருக்கும் சன்னதியில் பக்கத்தில் உள்ள சிறு வாயிலைத் திறந்தால் திரைபோட்டு இருக்கும். இந்தத் திரையை விலக்கி தீப ஆராதனை காட்டுவார்கள். அப்போது நாம் கவனித்தால் தங்க வில்வ மாலையைக் காணலாம்.

பரமேஸ்வரன் அண்ட பெருவெளி எங்கும் இருக்கின்றான் என்பதுதான் இதன் தத்துவம். இதுதான் சிதம்பர ரகசியம்.

பரமன் நீரிலும், நிலத்திலும், நெருப்பிலும், காற்றிலும், பரவெளியிலும் பரவிப் படர்ந்து இவ்வுலகத்தை இயக்குகிறார்.

## ஞானத் துறவி ஞானப்பிரகாசர்

யாழ்ப்பா ணத்தைப் போர்த்துக் கேயர்
        ஆட்சி செய்த காலம் அதுவாகும்
பாழ்பட் டகொடிய பசுவதைச் சட்டம்
        பார்க்க மனமே சகிக்கா தவராய்
வாழ்வதற் காகத் தமிழகம் சென்றார்
        வையகம் போற்றும் ஞானப் பிரகாசர்
ஆழ்ந்த புலமையும் சிறந்த தேர்ச்சியும்
        ஆலயத் தொண்டு ஆற்றி யேமகிழ்ந்தார்

ஞானத் துறவி வாய்த்த குருவிடம்
        நல்லு பதேசமும் தீட்சை யும்பெற்றார்
ஞானப் பிரகா சமென்ற குளமும்
        நல்லதோர் மடமும் அமைத்தார் சிதம்பரத்தில்
ஆன பணிகளாம் உரைநூல் ஆக்கியும்
        ஆண்டவன் பணியிலும் ஆனந் தமடைந்தார்
வான ளாவிய புகழினை உடைய
        மாதவர் சித்தாந் தசிந்தனை யாளராவார்

*-கவிஞர் வ. யோகானந்தசிவம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

7. கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

## பதவுரை

மனனே- ஏ மனமே!, கெடுவாய்- வீணே கெட்டொழிகின்றாய்; கதிகேள்- நீ உய்யும் வழியைக் கூறுகிறேன்; கேட்பாயாக. கரவாது இடுவாய்- இரப்பவர்க்கு ஒளியாமல் இயன்றதைத் தருவாயாக. வடிவேல் இறைதாள் நினைவாய்- கூரிய வேலாயுதத்தை உடைய முருகப் பெருமானுடைய திருவடியை மறவாமல் தியானிப்பாயாக. நெடுவேதனை- இவ்வாறு முருகவேளை நினைத்து வந்தால் நீண்ட காலமாகத் தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பத்தை, தூள்படவே சுடுவாய்- பொடிப் பொடியாகப் போகுமாறு ஞானாக்கினியால் சுட்டு எரிப்பாயாக; வினையாவையும் விடுவாய் விடுவாய்- வினைகள் அனைத்தையும் விட்டுவிடுவாயாக.

## பொழிப்புரை

ஏ மனமே! நீ அவமே கெட்டழிகின்றனை; உய்யும் வழியை உபதேசிக்கின்றேன் கேட்பாயாக; யாசிப்பவர்க்கு ஒளித்து வைக்காமல் அன்புடன் கொடுப்பாயாக. கூர்மையான ஞான வேலாயுதத்தை ஏந்திய முருகப்பெருமானுடைய திருவடியை மறவாமல் நினைவாயாக; தொடர்ந்து நெடுங்காலமாக வருகின்ற பிறவித் துயரை ஞானத் தீயினால் தூளாகுமாறு சுட்டெரிப்பாயாக. வினைகள் அனைத்தையும் அறவே விட்டுவிடுவாயாக.

## விரிவுரை

கந்தரநுபூதியில் மனத்தை முன்னிலையாக்கி அழைத்து உபதேசிக்கின்ற பாடல் மூன்று.

7-ஆவது பாடல் "கெடுவாய்"
18-ஆவது பாடல் "கைவாய்"
37-ஆவது பாடல் "கிரிவாய்"

***கெடுவாய் மனமே:-***

மனன் என்பது மனம் என்பதன் போலி. தவநெறி விட்டு அவநெறி பட்டு அழிகின்ற உலகினர்க்கு அறிவுறுத்தும் பொருட்டு, அடிகளார் தமது மனத்தை முன்னிலையாக்கிக் கூறியருள்கின்றார்.

மனமே பந்தத்துக்கும் முத்திக்கும் காரணமாகிறது. "மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ" மனம் ஐம்பொறிகளின் வழியே சென்று உலக இன்பத்தை விழைகின்றபோது கீழ்மனம் என்றும், அகநோக்கிச் சிவத்துடன் ஒன்றும்போது உயர்மனம் என்றும் பேர் பெறுகின்றது.

"தவநெறியை மேற்கொள்ளாது அவநெறியைப் பற்றி அலைகின்ற மனமே! நீ வீணே கெட்டொழிகின்றனையே!" என்று அடிகளார் இரங்குகின்றார்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே

திருப்புகழிலும் மனத்தை விளித்து அடிகளார் பாடியிருக்கின்றார்.

"அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெஇ தாகித சூத்திரம்
அம்போருக னாடிய பூட்டிது இனிமேல்நாம்

"அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னார்க்கியல்
அங்கா குவம் வா.....
மைந்தா குமரா எனும் ஆர்ப்புய மறவாதே"

-(அந்தோ) திருப்புகழ்

### கதிகேள்:-

கதி- வழி. ஏ மனமே! நீ பிழைக்கும் வழியைக் கூறுகின்றேன். கவனமாய்க் கேள்.

கரவா திடுவாய்:-

உன்பால் வந்து இரப்பவர்க்கு இல்லையென்று கூறி உள்ளதை ஒளிக்காமல் இயன்றவரை அன்பாகக் கொடுப்பாயாக.

வறியவர்க்கு வழங்காது செல்வத்தை ஒளித்து வைக்கின்றவர்கட்காக இறைவன் கொடிய நரகத்தைப் படைத்து வைத்தான்.

"கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்" -அப்பர்-

கரப்பவர்க்கு இறைவனும் தன்னைக் கரந்து கொள்கின்றான்;

"கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியான் இறைவன்" -அப்பர்-

"பரவப் படுவார் பரமனை ஏத்தார்
இரவலர்க்கு ஈதலை யாயினும் ஈயார்
நரகத்தில் நிற்றிரோ?"

-திருமந்திரம் (264)

இரக்கமுடன் இட்டது எங்காயினும் வந்து நமக்கு உதவும்.

"எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது"

-கந்தரலங்காரம் (59)

இவ்வாறு வழங்காதார் செல்வத்தைத் தீயோர் கவர்வர்.

"வைத்தீட்டினார் இழப்பர் வான்தோய் மலைநாட!
உய்த்தீட்டுந் தேனீக் கரி" -நாலடியார்

### வடிவேலிறை தாள் நினைவாய்:-

இங்ஙனம் வறியவர்க்கு வழங்கும்போது, "இது என் செல்வம்; யான் வழங்குகின்றேன்"

**தியாகத்திலும் பார்க்க பணிவு மிகவும் பெரியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினையாது "இச் செல்வம் முருகன் தந்தது; முருகனுக்குத் தருகின்றேன்" என்று தருதல் வேண்டும். தான தருமம் புரியும்போது, நான், எனது என்ற செருக்கற்றுச் சிவமயமாய் நிற்க வேண்டும். அதனால் தருகின்ற நல்வினைப் பயன் சேராது. இல்லையேல் நல்வினையும் பிறவியைத் தரும். நல்வினை பொன் விலங்கு போல்வது.

இக்கருத்தைக் கந்தரலங்காரத்திலும் அடிகளார் அழகாக உபதேசிக்கின்றார்.

"வையிற் கதிர்வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்"

-கந்தரலங்காரம் (18)

உய்யும் வழி இரண்டு. பறவை பறப்பதற்கு உதவியாக இரு சிறகுகள் இருப்பதுபோல், மாந்தர் உய்யும்வழி இரப்பார்க்கு இடுவதும், இறைவனை நினைப்பதுமேயாகும்.

வடி-கூர்மை. வேல்- வெல் என்ற முதல்நிலை நீண்ட தொழிற்பெயர்.

எல்லாவற்றையும் வெல்வது ஞானம் ஒன்றே யாகும்.

ஞானமே வேல். அறிவு கூர்மையானது.

"கூர்த்த மெய்ஞ் ஞானத்தால்" -சிவபுராணம்

இறை- இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது எல்லாப் பொருள்களிலும் இருப்பவன்.

***சுடுவாய் நெடுவேதனை தூள்படவே:-***

நெடுவேதனை- பிறவித் துன்பம்.

அதுதான் நெடுங்காலமாக உயிருக்குள்ள துயரமாகும். எண்ணில் கோடி காலமாக உயிர் இறப்பதும் பிறப்பதுமாகவே உழன்று வேதனைப்படுகின்றது.

இப்பிறவித் துயரம், தனக்கென்று வைக்காமல் தருவதனாலும், இடையறாத இறைவனுடைய திருவடி தியானத்தாலும் விலகும்.

இறவாதவனும் பிறவாதவனும் ஆகிய வேற்பரமனை மறவாது தியானிப்பதனால் உண்டாகும் ஞானாக்கினி பிறவித்துயரை எரித்துப் பொடிப் பொடியாக்கி விடுகின்றது.

***விடுவாய் விடுவாய் வினையா வையுமே:-***

வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராப்தம் என்றும் நல்வினை, தீவினையென்றும், இன்ப துன்பங்கள் வினையால் ஆதி தெய்விகம், ஆதி பௌதிகம், ஆதியான் மிகவும் என்றும் வந்து சேரும்.

இதனால் வினை யாவையும் விடுவாய் என்று அருளிச் செய்தார்.

ஆதி தெய்விகம்- தெய்வத்தால் வரும் இன்ப துன்பங்கள்.

கருவில் துயர்செனிக்கும் காலைத் துயர்மெய்
திரைநரைமூப் பில்திளைத்துச் செத்து- நரகத்தில்
ஆழுந் துயர்புவியை ஆள்இன்பம் ஆதியெலாம்
ஊழுதவும் தைவீகம் என்றுஓர்.

ஆதி பௌதிகம்- ஐம்பெரும் பூதங்களால் வரும் இன்ப துன்பங்கள்.

பனியால் இடியால் படர்வாடையினாலும்
துனிதென் றலினால் சுகமும்- தனையனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரினாம் இன்பின் னலுநெருப்பி னாம்துயரின்
போரில் பவுதிக மாகும்.

ஆதியான்மிகம்- உயிர்களால் வரும் இன்ப துன்பங்கள்.

தன்னால் பிறரால் தனக்குவருந் தீங்குநலம்
இன்னா விலங்கரவம் தேள்எறும்பு- செல்முதல்நீர்
அட்டைஅல வன்முதலை மீன்அரவம் ஆதியினாம்
கட்டமும்இங் கான்மிகமே காண்.

வினைகளே இன்ப துன்பங்கட்குக் காரணம் வினைப் போகமே உடம்பு. ஆதலால் வினைகள் யாவையும் விட்டுவிடு, விட்டுவிடு என்று அடுக்குத்தொடரால் கூறியருளினார்.

முன் பாடலில் முருகனை நினையாத மனம் உருகாது கல்லாக இருக்கும் என்றுகூறி, அடுத்த இப்பாடலில் அம் மனத்துக்கு உபதேசமாக "இடு; நினை" என்று அழகாக உபதேசிக்கின்றார்.

**கருத்துரை**

மனமே! பிழைக்கும் வழி, ஈதலும் இறைவனை நினைத்தலுமாகும். பிறவித் துயரைப் பொடியாக்கி, வினைகளை விட்டு அநுபூதி பெறுவாய்.

(தொடரும்...

# ஒரு சொல் போதும்

**ஊர் ஊராய் சுற்றித்திரிந்த அந்த சாது ஒருநாள் அந்தச் சிறிய கிராமத்திற்கு வந்தார். அந்தக் கிராமத்துப் பெண்ணொருத்தி, உடல் நலமில்லாத தன் குழந்தையை அவரிடம் காட்டி, குழந்தையைக் குணப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். குழந்தையைக் கையில் வாங்கிய அவர் கடவுளிடம் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார்.**

**"மருந்துகளால் குணப்படுத்த முடியாத ஒரு வியாதி, வெறும் பிரார்த்தனையினால்- அதுவும் வெறும் சொற்களால் எப்படிக் குணப்படுத்த முடியும்?" கூட்டத்தில் இருந்த ஒருவன் கேட்டான்.**

**"நீ முட்டாள். வாயை மூடு" என்று அவனைப் பார்த்துச் சொன்னார் சாது. இந்த வார்த்தையைக் கேட்டவுடன் அந்த மனிதன் கடுங்கோபம் கொண்டான். கண்கள் சிவந்தன. அவரைத் தாக்கவேண்டும் போல அவன் உடல் பரபரத்தது.**

**சாது அவனிடம் சென்று அமைதியாகச் சொன்னார், "நான் சொன்ன ஒரு வார்த்தையில் அமைதியாக இருந்த உன் முகம் கடுமையாக மாறிவிட்டது. ஒரு வார்த்தை உன்னை அடியோடு மாற்றுமானால், அதேபோல் வேறு சில வார்த்தைகள் ஒரு நோயை ஆற்றும் அருமருந்தாக ஏன் செயற்படாது?"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

# திருவிளையாடல்



-ஆறுமுகநாவலர்-

படலம்-57

## வலை வீசின படலம்

திருவாலவாயில் எழுந்தருளியிருந்த சோமசுந்தரக்கடவுள், மீனாட்சியம்மையாருக்கு அதிரகசியமாக வேதப் பொருளை உபதேசித்தருளினார். அப்பொருளை, எம்பிராட்டியார், ஏதோ காரணத்தினால் விருப்ப மின்றிக் கேட்டார். சிவபெருமான் அஃதறிந்து தேவியாரை நோக்கி "நீ நம்மிடத்தே பாரா முகமாகி விருப்பமின்றிக் கேட்டாய். இக்குற்றத் தினாலே மீன் பிடிக்கும் வலைஞராகிய பரதவர் குலத்து மகளாகக் கடவாய்" என்று பணித் தருளினார். தேவியார் அஞ்சி, "எம்பெருமானே! உம்மைப் பிரிந்து வாழ வல்லேனோ" என்று விண்ணப்பஞ் செய்து வணங்கினார். சிவபெரு மான் அதுகண்டு, திருவுளமிரங்கி, "நீ பரதவ ராசனுக்கு மகளாய் வளரும் நாளிலே, நாம் வந்து உன்னை விவாகஞ் செய்து கொள் வோம்" என்று திருவாய் மலர்ந்து, அவரைப் போகும்படி விடுத்தார்.

விநாயகக் கடவுள் இதனையறிந்து, தந்தையாகிய சிவபெருமான் முன்வந்து, "இதெல்லாம் விளைந்தது இதனாலன்றோ" என்று கூறி அங்கிருந்த சுவடிகள் அனைத் தையும் துதிக்கையால் வாரிக் கடலெறிந்தார். முருகக் கடவுளும் தந்தையார் திருக்கரத் திலிருந்த சுவடிகளைப் பறித்துக் கடலில் வீசினார். சிவபெருமான், திருநந்திதேவரை வெகுண்டு நோக்கி, "நாம் இருக்கும் சமயமறியாது இவர்களை உள்ளே விடுத்தாய். இக்குற்றத்தினாலே, நீ சுறாவுருக்கொண்டு கடலிற் புகுந்து உழலக் கடவாய்" என்று சபித்தருளினார். விநாயகக் கடவுளுக்குச் சாபம் விதிக்கின் அது தம்மைச் சாருமாதலால், அவருக்குச் சாபம் விதிக்கவில்லை. முருகக் கடவுளை நோக்கி, நீ மதுரையின் வணிகர் குலத்து ஊமைப் பிள்ளையாவாய்" என்று பணித்தருளினார். இது நிற்க,

பாண்டி நாட்டிலே, கீழைச் சமுத்திரக் கரையிலுள்ள ஒரு நெய்தல் நிலத்து ஊரிலே பரதவராசன் என்று ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் முற்பிறவியிலே பெருந்தவம் செய்தும், சிறிது தீவினை செய்த காரணத்தினால் பரதவர் குலத்திற் பிறந்து, அங்குள்ள பரதவர்கள் பிடிக்கும் மீன்களுக்குத் திறைபெற்று அவர் களுக்கெல்லாம் அரசனாய் இருந்தான். அவன் சிவபெருமான்மீது மிக்க பக்தியோடிருந்தும், பிள்ளைப் பேறின்மையால் மிக்க வருத்த முற்றிருந்தான். ஒருநாள் தனது ஏனைய வலையரோடு கடற்கரை நோக்கிச் சென்றான். கரையின் ஒரு பக்கத்தில் புன்னை மரநிழலில், உமாதேவியார் ஒரு குழந்தையாய் அழுது கொண்டிருந்தார். பரதவராசன் குழந்தையைக் கண்டு, "சிவபெருமானே தன்மீது இரக்கங் கொண்டு தந்தருளிய குழந்தை இது" எனப் பேருவகை கொண்டு, குழந்தையை எடுத்துத் தழுவிக்கொண்டுபோய் தன் மனைவி கையிற் கொடுத்தான். மனையாளும் குழந்தையைத் தழுவி முத்தமிட்டு பேரானந்தத்தோடு வளர்த்து வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநந்திதேவர், சிவபெருமான் பணித்தருளியபடியே சுறாமீன் வடிவங்கொண்டு அச்சமுத்திரத்திலே திரிந்தார். விநாயகக் கடவுளும், முருகனும் கடலில் வீசியெறிந்த ஏட்டுச்சுவடிளைத் தன் சிரசின்மீது தாங்கி, சிவனின் திருவடியைச் சதா தியானித்தபடியும் கடல்பூராவும் சுற்றித் திரிந்தார். தோணி, படகுகளில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு பெரும் சேதம் விளைவித்தும், ஏனைய மீன் வகைகளை அழித்தும் படாதபாடு படுத்தியது அச்சுறாமீன். வலைஞர்களின் துன்பத்தைப் போக்க எண்ணிய பரதவராசன் ஒரு தோணியிலேறி வலைவீசி சுறாவை பிடிக்கக் கடும் பிரயத்தனம் செய்தான். பலவிதமாக முயன்றும் அவன் வீசிய வலையில் அச்சுறாமீன் அகப்படாததுடன், அவன் சென்ற மரக்கலத்தையும் சேதமாக்கியது. பெரும் மனத்துயரமடைந்த அவன், "இந்த சுறாமீனை எவன் பிடிப்பானோ, அவனே என் புத்திரியை மணக்கும் தகுதியுடையவன்" என மனம் ஒருமித்திருந்தான்.

சோமசுந்தரக்கடவுள் தனது கணங்களுள் ஒருவர் வலைஞர் வேடங்கொண்டு வலையும் பறியுங்கொண்டு முன்னே வர, தாமும் ஒரு பரதவ இளைஞன் வேடங்கொண்டு சென்று, அந்த நெய்தல் நிலத்து சிற்றூரை அடைந்தார். பரதவராசன் அவருடைய வரவை நோக்கி, "நீ யார்" என்று வினாவினார். "மதுரையில் உள்ள வலைஞர்களுக்கெல்லாம் அரசனானவனின் மகன் நான்" என்றார். அது கேட்ட பரதவராசன், "இந்தத் துறையிலே ஒரு சுறாமீன் மிக்க சீற்றம் கொண்டு திரிகிறது. அதனை நீ பிடித்துத் தருவாயாயின், எனது புத்திரியை உனக்குத் திருமணஞ் செய்து தருவேன்" என்றான். அது கேட்ட, பரதர் வேடங்கொண்ட சிவபெருமான் ஒரு படகிற் பாய்ந்தேறி வலையை வீசினார். அந்த வலையில் அகப்பட்ட சுறாமீனை இழுத்துக் கரையிலே போட்டார். வலைஞர்களெல்லாம் தம் துன்பம் நீங்கியமை கண்டு ஆரவாரித்து நிற்க, பரதவராசன் மகிழ்ந்து தன் புத்திரியை அப்பரதவ வேடங்கொண்ட சிவபெருமானுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான்.

திருமணக்கோலத்துடன் வலைஞராகிய சிவபெருமானும், உமாதேவியாரும் இடபாரூடராக ஆகாயத்திலே தோன்ற, திருநந்தி தேவரும் தமது பழைய வடிவத்தைக் கொண்டார். பரதவராசனும் நல்லறிவு தோன்ற வீழ்ந்து வணங்கித் தோத்திரஞ் செய்தான். வணங்கி நின்ற பரதவராசனை நோக்கி சிவபெருமான், "அன்பனே! நீ நெடுங்காலம் மக்கள் பேறின்றி வருந்தியமைகண்டு, நாம் மனமிரங்கி, உமையையே உனக்கு மகளாகத் தந்து பின் மணஞ்செய்தோம். நீ இப் பூவுலகிலே குபேரன் போலப் பல போகங்களை அனுபவித்து- வாழ்ந்து பின் என் திருவடியை அடைவாயாக" எனத் திருவருள் புரிந்தார். பின் திருநந்தி தேவரோடும்- அடியார் கூட்டத்தினரோடும் திருவுத்தரகோசமங்கை என்னும் ஸ்தலத்துக்கு எழுந்தருளியிருந்தார். அங்கு உமாதேவியார் விரும்பிக் கேட்ப, அவருக்கு வேதத்தின் இரகசியப் பொருளைத் திரட்டி உபதேசித்து, அனைவருக்கும் அருள்செய்து முத்தி கொடுத்து உமாதேவியாரோடும் மதுரையை அடைந்தருளினார்.

## வறுமையின் கொடுமை

**தரித்திரமானது மனிதனுடைய வாழ்வை அடியோடு கெடுத்துவிடும். வடிவு, தனம், மனம், குணம், குடி, குலம் முதலிய யாவும் வறுமையால் அடியோடு அழியும்.**

**வறுமையால் நல்ல சுகங்களை துய்த்தற்கு இன்மையால் இம்மை நலனும் தருமம் செய்ய முடியாமையால் மறுமை நலனும் இன்றி வறுமையாளன் வாடுவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| விஜயராணி துரைசாமி | | வெள்ளவத்தை | 1000. 00 |
| தயாநிதி ஸ்ரீகரன் | | தெகிவளை | 1000. 00 |
| கலாஜினி பார்த்தீபன் | | தெகிவளை | 2000. 00 |
| M. ஜீவரஞ்சன் | மணியன் ஸ்ரோர்ஸ் | கனடா | 5000. 00 |
| வே. கிருபாகரன் | | தெகிவளை | 5000. 00 |
| ந. மகேந்திரராணி | | பருத்தித்துறை | 1000. 00 |
| சின்னத்துரை கைலாயநாதன் | | இணுவில் மேற்கு | 1000. 00 |
| ஆ. இராசரத்தினம் | | கொழும்பு | 1000. 00 |
| தே. ராஜகுமார் | | கரணவாய் தெற்கு | 5000. 00 |
| K.V. துரைசாமி | | மயிலிட்டி | 2000. 00 |
| திருமதி செல்வமாணிக்கம் பரமேஸ்வரி முதியோர் இல்லம் | | இணுவில் | 5000. 00 |
| விஸ்வலிங்கம் குடும்பம், சண்முகசுந்தரம் குடும்பம் | | திருகோணமலை | 5000. 00 |
| இ. தங்கராசாமூலம் திருச்செல்வம் சற்குருநாதன் | | | 10000. 00 |
| N. வேணு | | லண்டன் | 3000. 00 |
| T. சிவலோகநாதன் | | உரும்பராய் | 5000. 00 |
| V. கெங்காதரன் CDI பிளாட்ஸ் | வெள்ளவத்தை | 3மூடை அரிசி | 1600. 00 |
| T. சஞ்சீவன் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| Dr S. மகேஸ்வரன் | நடுத்தெரு | தொண்டைமானாறு | 10000. 00 |
| T.K. பாலசுப்பிரமணியம் | பம்பலப்பிட்டி | கொழும்பு | 2000. 00 |
| தே. ராஜகுமார் | கரணவாய் தெற்கு | கரவெட்டி | 5000. 00 |
| வி. விஜயகுமார் | நாவற்குளி | கைதடி | 1000. 00 |
| வி. விக்னகரன் | நாவற்குளி | கைதடி | 1000. 00 |
| திருமதி வினோதினி செல்வகுமார் | பிள்ளையார் கோயிலடி | மாதகல் | 1000. 00 |
| விஜிந்தினி பிரபாகரன் | பெரேராலேன் | கொழும்பு | 5000. 00 |
| செல்வி விஜயரதனி விநாயகமூர்த்தி | பெரேராலேன் | வெள்ளவத்தை | 9000. 00 |
| கருணையம்பதி ச.ச.நிலையம் | | கரணவாய் | 10000. 00 |
| கந்தசாமி திலீபன் | | நீர்வேலி | 20000. 00 |
| திருமதி சின்னையா குடும்பம் | | கரணவாய் | 10000. 00 |
| குகானந்தன் கேதீசன் (கனடா) | | அச்சுவேலி | 5000. 00 |
| நல்லையா ரவிக்குமாரி | | சுவிஸ் | 5000. 00 |
| பேராசிரியர் சின்னத்தம்பி மூலம் ராதாகிருஸ்ணம் (கனடா) சரண், | சினேகா (கனடா) | இடைக்காடு | 20000. 00 |

மிகப் பலமுள்ள மனிதன் பொறுமைசாலி.

| | | | |
|---|---|---|---|
| திரு திருமதி நந்தகுமரன் குடும்பம் | | கல்வியங்காடு | 5000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி | | கரணவாய் மத்தி | 1000. 00 |
| க. குகன் | | கரவெட்டி | 2000. 00 |
| T. யோகரமணன் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| Dr V. கைலாசபதி | | புத்தளம் | 5000. 00 |
| தியாகலிங்கம் திருக்குமரன் | | மட்டக்களப்பு | 5000. 00 |
| சி. ரட்னசபாபதி | | கன்னாதிட்டி | 1000. 00 |
| யாதவன் பாலச்சந்திரன் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| P.T. பாலச்சந்திரன் | அவுஸ்திரேலியா | (வல்வெட்டித்துறை) | 10000. 00 |
| திருமதி அர்ச்சனா விஷ்ணுராஜ் | அவுஸ்திரேலியா | (வல்வெட்டித்துறை) | 10000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | | பத்தமேனி | 1000. 00 |
| த. நந்தகோபால் | | கொக்குவில் | 3புட்டி அரிசி |
| சு. சத்தியேந்திரன் | | திருநெல்வேலி | 3புட்டி அரிசி |
| திருமதி சுவாமிநாதன் | | ஆவரங்கால் | 1000. 00 |
| V. செல்லத்துரை | | தெகிவளை | 15000. 00 |
| இ. இராகுலன் | | புத்தூர் | 1000. 00 |
| திருமதி அருள்நந்தி | | லண்டன் | 5000. 00 |
| சிவதாசன் நிஷாந் | | சுண்ணாகம் | 1500. 00 |
| அ. திருவருட்செல்வன் | பள்ளந்தோட்டம் | துன்னாலை | 500. 00 |
| க. சூரியகுமார் | | அச்சுவேலி | 500. 00 |
| சு. பானுஜா | | துன்னாலை | 500. 00 |
| S. ஸ்ரீரங்கநாயகி | | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| சி. சிவதரன் | ஸ்ரான்லிவீதி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சு. சுதாகரன் கவிதா குடும்பம் | தில்லையம்பதி | கோண்டாவில் | 11100. 00 |
| ஆ. நடராஜா | | சிறுப்பிட்டி | 5000. 00 |
| சி. நவலிங்கம் குடும்பம் | குரும்பசிட்டி | புலோலி | 2000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி | தாதிய உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ந. நாகராஜா | | மூளாய் | 5000. 00 |
| நாராயணபிள்ளை கடம்பமூர்த்தி | | மாதகல் | 2000. 00 |
| ச. தர்மலிங்கம் ஊடாக திருமதி ஜமுனா வர்ணன் | | பிரான்ஸ் | 10000. 00 |
| இ. கைலாயநாதன்மூலம் Dr கணேஸ்குமார் | | கொழும்பு | 4000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் மயிலியதனை | | தொண்டைமானாறு | 2000. 00 |
| சி. பரஞ்சோதி | | கற்கோவளம் | 1மூடை அரிசி |
| க. ஞானச்சந்திரன் | | கொக்குவில் மேற்கு | 2000. 00 |
| வா. விக்னேஸ்வரன் | | காரைநகர் | 3000. 00 |
| தே. சதீசன் | | காரைநகர் | 1000. 00 |
| சிவசண்முகநாதன் லிங்கேஸ்வரி | சுதுமலை வடக்கு | மானிப்பாய் | 3மூடை அரிசி |
| ம. கணபதிப்பிள்ளை | | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |

(தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கல விளக்கேற்றுதல்

இரா. சாந்தன் அவர்கள்

மங்கல விளக்கேற்றல் என்பது மங்கலம், விளக்கு, ஏற்றுதல் என்னும் மூன்று சொற்களாலாய தொடர்மொழி. அவற்றுள் மங்கலம் என்பது நன்மை, நலம், காரியசித்தி, பொலிவு, அறம் என்னும் பல பொருள்களைக் குறிக்கும். ஆகவே மங்கலத்தைத் தரும் விளக்கையேற்றி வணங்குதல் என்பது அதன் பொருளாகும்.

பாரத நாட்டிலே எல்லா மங்கல கருமங்களையும் விளக்கேற்றி வணங்கித் தொடங்கும் வழக்கம் மிகப் பழைய காலம்தொட்டு நிலவிவருகின்றது. அது தமிழ் மக்களின் விழுமிய பண்பாட்டையும் உயர்ந்த கடவுள் கொள்கையையும் காட்டுகின்றது. விளக்கேற்றி வழிபடுவதற்கு முன்பு செயலால் சில கருமங்களை அறிவது அவசியம்.

மங்கல கருமந்தொடங்கும் இடத்தையும் அதன் அயற்புறத்தையும் தூய்மை செய்து, பொதுவிடயமாயின் ஆங்கே ஒரு பீடம் வைத்து அதனை வெண்துகிலால் மூடி அழகு படுத்துக. அழகுபடுத்திய பீடத்தில் தலைவாழையிலைத் துண்டையிட்டு ஒருபிடி நெல்லை நீருடன் சேர்த்து மஞ்சற் பொடி கலந்த பச்சையரிசியாயினும் அதன்மேல் பரவி, ஒப்பஞ் செய்து நிறைகுடம் வைக்க எடுத்த கருமம் முட்டின்றி முடித்தற் பொருட்டுக் காப்புத் தெய்வமாகிய பிள்ளையாரை வாழையிலையின் தலைமாட்டில் மாவிலையின் மேல் வைக்க வேண்டும்.



பழம், பாக்கு, வெற்றிலை, மஞ்சள், மலர்வகை, சந்தனம், திருநீறு, குங்குமம் முதலிய மங்கலப் பொருள்களை ஆங்காங்கே அழகுற வைக்க வேண்டும். மலர்களுள் செம்மலரும், வெண்மலரும் சிறந்தவை. குத்துவிளக்கைக் கிழக்குப்புறமாக வைத்து நிறைகுடம் குத்துவிளக்கு என்பவற்றின் முடியிலே பூச்சூடுக. பிள்ளையாருக்கு விபூதி சந்தனம் குங்குமம் முதலியன அணிந்து பூவும் அறுகுஞ் சாத்துக. குத்துவிளக்கு அவ்வாறே அழகுபடுத்தி நாற்புறமுந்திரியிட்டுத் தேங்காய் நெய் இடவேண்டும்.

மங்கல விளக்கேற்றி, சாம்பிராணி ஊதுவத்தி முதலியவற்றால் நறும்புகை எடுத்து திருநீறு உள்ள ஒரு சிறு தட்டிலே கர்ப்பூரத்தையிட்டுச் சுடர் கொளுத்தித் தேங்காய் உடைக்க, திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாயென்று பிள்ளையாரை நீடு நினைந்த பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பாடலோதி வணங்கித் தங்கருமத்தை தொடங்குதல் வேண்டும்.

இச்சடங்கு வகையெல்லாம் சைவத் தைச் சார்ந்தவை. பழந்தமிழர் வாழ்வுடன் சைவச் சடங்குவகை இறுகப் பின்னிக் கிடந் ததை யாரும் மறுக்கமாட்டார். பல்வேறு காரணங்களால் சைவச் சார்புநிலை தளர்ந்து வரும் இந்நாளிலே நிறைகுடம் வைத்து விளக்கேற்றி தங்கருமத்தைத் தொடங்குவர்.

இலங்கையில் பெரும்பாலானோர் எக்கருமத்தைத் தொடங்கும்போதும் விளக் கேற்றித் தொடங்குதல் பெருவழக்காகிவிட்டது. ஒழுங்குமுறையற்ற கலாச்சாரமும் அன்பும் வணக்கமுமின்றி விளக்கேற்றிக் கருமந் தொடங்குதல் அருவருக்கத்தக்க செயலாகும்.

பலவகைத் திறப்பு விழாக்கள், அடிக் கல் நாட்டுதல் முதலிய வைபவங்களை விளக்கேற்றித் தொடங்குகின்றனர். அதனால் பழைய பண்பாடு அழியாமற் காக்கப்படு கின்றது. விளக்கிலே விளங்குஞ் சோதியைக் கடவுளாகப் பாவித்து நெஞ்சார நினைந்து வாயார வாழ்த்தி வணங்கி எடுத்த கருமம் இனிது முடியுமாறு வேண்டுதல் இன்றியமை யாததாகும். பலர் கால்களில் சப்பாத்து, செருப்பு முதலியன பாதங்களில் மிளிர, தெய்வ சிந்தனையின்றி சித்தம் பிறிதாகிச் சிதற விளக்கேற்றிக்கொண்டு வைபவங்களைத் தொடங்குதல் உய்தியில் குற்றமாகும். பல்லாண்டுகாலம் உயர்ந்த நோக்கத்துடன் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பண்பாடு இவ்வகை வேண்டாப் பழக்கவழக்கங்களால் இகழப்படு கின்றது. காணவும் கருதவும் முடியாத கடவுளை ஒளிவடிவில் வைத்து வழிபடும் விழுமிய கருத்து சிந்தனை அடைவதுமின்றிக் கடவுளும் நிந்திக்கப்படுகின்றார். ஆ! இதுவோ மங்கல விளக்கேற்றலின் தத்துவம்? இதனைத் தடுத்து உண்மையுரைப்பார் இல்லையா? வைபவங்களை விளக்கேற்றித் தொடங்குதலே சாலப் பயன் தருமென்று நம்புவோர், செருப்பு சப்பாத்து முதலியவற்றைக் கழற்றிவிட்டுத் தம்மை தூய்மை செய்து தாம் வழிபடுந் தெய்வத்தை அவ்விளக்கின் சுடராகப் பாவித்து வாழ்த்தியும் வணங்கியுந் தொடங்கக் கடவர். அதுவே முறை. அதுவே சிறந்த கலாச் சாரத்தை மதித்து வளர்த்துப் பாதுகாக்கும் நெறி.

நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய இளைஞர் அந்த நல்லமுறையைப் பார்த்து பழகிக் கொள்வர். அவர்கள் கருத்தில்லாத வெறும் போலிச் செய்கைகளைக் கண்டு அவற்றை உண்மையென்று நம்புவர்களாயின் அவர்கட்கு விளக்கேற்றித் தொடங்குதலின் தத்துவத்தை அறிவுறுத்தல் சிறந்ததாகும்.

இனி, விளக்கின் சுடர் கொழுந்து சிவத்தின் வடிவமாகும். ஓம் என்பது பிரணவம். அது அகரம், உகரம், மகரம் என்னும் மூன்று எழுத்துக்களாலாகி உலகத் தோற்றத்துக்குக் காரணமான முதலோசை. அது தூய ஒளிவடி வானது. சிவலிங்கமும் பிரணவ வடிவமுடை யது. ஆகவே சிவலிங்கமும் ஒளிவடிவமுடை யது. அவையிரண்டும் சிவத்தின் அருட்குறிகள். ஓங்காரம் அருவப் பொருள். சிவலிங்கம் அரு வுருவப் பொருள்.

இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன் னிருந்த ஆசிரியர் தொல்காப்பியரும் "கொடி நிலை வள்ளி கந்தழியென்ற வடுநீங்கு சிறப் பின் முதலான மூன்றுங் கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே" என்று கூறியருளியதுங் காண்க. கொடிநிலை- ஞாயிறு, வள்ளி- திங்கள், கந்தழி- தீப்பிழம்பு.

இனி, அம்மூன்று சுடர்களையும் சிவத் தின் கண்களாகச் சைவநூல்கள் கூறும். "சுடர் மூன்றுங் கண் மூன்றக் கொண்டான்றான் காண்" என்னுந் தேவார திருமுறையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை வெளிப்படுத்தும். எம்பெருமான் அம்மூன்றிலும் கலந்து நின்று அவற்றை தொழிற்படுத்துவர். ஞாயிறு வலக்கண் திங்கள் இடக்கண் செந்தீ நெற்றிக்கண் ஆகும்.

திருக்கோயில் சடங்குகளுக்கும் தீ வளர்த்தலும் விளக்கேற்றி வைத்தலும் அவற்றைச் சிவமாகவே கருதி வழிபடுவதும் இதுவரை நடைபெற்றுவரும் நிகழ்ச்சியாம். சுருக்கமாகச் சொன்னால் வைதீகச் சைவச் சடங்குகளிலே தீ வளர்த்து வழிபடுதல் முதன்மை பெறுவது. இனி ஐம்பூதங்களும் சிவன் விளக்கத்திற்கு இடமாயினும் தீப்பிழம்பு ஒன்றே அவரை உருவ வடிவில் வழிபடுவதற்கு இயைந்த கருவியாய் ஏனைய பூதங்களைக் காட்டிலும் மேலோங்கி நாயகமாய் நிற்கிறது. சிவம் மன்னுயிர்களின் அகத்தே நின்று தன்னருள் ஒளியால் மல இருளைப் போக்கி அறிவு விளக்கந் தருதல் போலத் தீப்பிழம்பும் மன்னுயிர்களின் புறத்தேயுள்ள இருளைப்போக்கி விளக்கந்தருகின்றது. சிவம் அருவாயும், உருவாயும் நீக்கமற நிற்றல் போல, தீப்பிழம்பும் பொருள்களில் அருவாயும் கண்டாய வழி உருவாயும் நீக்கமற நிறைந்து நிற்கின்றது.

## இறைவனைக் காணலாம்

ஆணவமும், பெருமையும் உங்களிடம் வளர்ந்துவிட்டால் அதன்பின் ஆசைகள் தோன்றிவிடும். விரைவில் பற்றுக்களும் தோன்றிவிடும். பற்றிலிருந்து அனைத்துவிதமான பந்தங்களும் வளர்ந்துவிடும். பந்தங்கள் அதிகரிக்கும்போது கடவுள்பக்கம் திரும்பமுடியாத அளவிற்கு அவரைப் பார்க்கமுடியாத அளவிற்கு உங்கள் கவனம் சிதறிவிடும். நீங்கள் இறைவன் பக்கம் திரும்பும்போதுதான் உங்களால் இறைவனைப் பார்க்க முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



திரு கே.வீ. குணசேகரம் அவர்கள்

சிவன்தான் முருகன் என்றறிந்தோம். சிவவடிவங்கள் 54உம் கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படுகின்றன என்றும் அறிந்தோம். அருணகிரிநாதர் முருகனின் ஆறுதிருமுகங்களின் தன்மை பற்றியும், நக்கீரர் முருகனின் ஆறு திருமுகங்களின் தன்மை பற்றியும் கூறியதையும் அறிந்தோம். இனி இவ் ஆறுதிரு முகங்களைப் பற்றியும் பார்ப்போம்.

முருகனது முகம் ஒன்று. மிகுதியாக உள்ள ஐந்து முகங்களும் ஐந்து தெய்வங்களுக்குரியன. இதை வெளிப்படையாக யாரும் சொல்லாவிட்டாலும் புராணங்கள் கூறும் கதைகளில் இருந்து, அந்த ஐந்து முகங்களும் சைவ சமயத்தில் உள்ள மற்றைய ஐந்து தெய்வங்களுக்குரியவை என்பது புலனாகும்.

சிவனை முக்கண்ணன் என்றழைப்பர். சிவன் அர்த்த நாரீஸ்வரர். சிவனை விட்டுச் சக்தியைப் பிரிக்கமுடியாதென்று திருமந்திரம் கூறுகிறது. சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியைப் பிரிந்து சிவமில்லை. எனவே சிவனின் இடக்கண்ணும் நெற்றிக்கண்ணின் அரைவாசியும் உமைக்குரியது. இதைத் திருவருட் பயனும் கூறுகிறது. முருகன் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியமையால் சிவனும் சக்தியும் சேர்ந்தே முருகனைத் தோற்றுவித்தனர். இதனால் சிவசக்தியின் கூட்டாகவே முருகன் இருக்கிறான். சிவனின் சக்தியைத் திருமந்திரம் திருவருளம்மை என்று கூறுகிறது. சிவனது சக்தி திருவருளம்மை என்ற உமாதேவியார் சிவனினதும் உமாதேவியாரினதும் (அர்த்தநாரீஸ்வரர்) சக்தி முருகன். பழத்தையும் தேனையும் தனித்தனியாக உண்பதை விடப் பழத்தையும் தேனையும் கலந்து உண்டால் சுவை அதிகம். தேனில் தோய்த்து பலாப் பழத்தை உண்ணல் மிக்க சுவையானது என்று இலக்கியங்கள் கூறுகின்றன. ஞானப்பழமான சிவனையும் ஞானத் தேனான உமாதேவியையும் கலந்து வந்தவன் முருகன். எனவே சிவசக்தியான முருகனின் அருள் சிவனைவிட மும்மடங்கு அதிகமானது. சிவனின் அருள் இருக்கும்; சக்தியின் அருள் இருக்கும்; இருவரும் சேர்ந்த அருள் இருக்கும்.

கந்தபுராணத்தில் போர் நடக்கும்போது முருகனுக்குத் தோல்வி ஏற்படுகிறது. அதனால் முருகன் தந்தையிடம் செல்கிறான். அவர் தனது சக்தியையும் உமாதேவியாரின் சக்தியையும் திரட்டி வேல் என்ற படைக்கலமாக்கி கொடுக்கிறார். சிவனினதும் உமாதேவியினதும் சக்தி திருவருள். இருவரும் அடியவர்களுக்குத் திருவருளைத்தான் கொடுப்பார்கள். திருவருள் ஆன்மாக்களின் பக்குவநிலைக்கேற்ப குருவாக வந்து செயற்பட்டு ஆன்மாக்களைப் பற்றிப்பிடித்துத் துன்புறுத்தும் ஆணவத்தை அழிக்கும் என்று மெய்கண்ட சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. கந்தபுராணத்தில் வரும் சூரபத்மனைப் பிடித்தாட்டியது ஆணவமே. அதைப்பற்றிக் கச்சியப்பர் பல பாடல்களில் கூறியுள்ளார். உயிர்கள் ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை என்கிறது சைவ சித்தாந்தம். படைக்கப்பட்ட உயிர்கள் கர்ம வினைக்கேற்பப் பிறப்பெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா்ம வினையை முடித்த உயிர்கள் இறை வனின் அடியைச் சேரும். புராணங்களை எடுத்து நோக்கினால் அரக்கர்கள் பலரின் உடல்கள் அழிக்கப்பட்டனவே தவிர உயிர்கள் அழிக்கப்படவில்லை. இந்த நிலையில் சூரபத் மனின் உடல் அழிக்கப்படுகிறது. அவனது ஆன்மா சேவலும் மயிலுமாகி முருகனின் கொடியாகவும் வாகனமாகவும் மாறுகின்றன. உடல் அழிக்கப்பட்டதும் ஆன்மா மலநீக்கம் பெற்று இறைவனை அடைய உதவுவது திரு வருள். அதனால் சிவனும் உமையும் திரு வருளையே வேலாக்கி முருகனுக்கு அளித் தனா். அத்துடன் முருகனின் ஆறுமுகங்களில் ஒன்று சிவனது முகம். அடுத்தது சக்தியான உமாதேவியாரின் முகம்.

விநாயகபுராணம் மயில் முருகனது வாகனமான வரலாற்றைக்கூறுகிறது. காசிப முனிவரின் மனைவியான விரதை தனது பிள்ளைகளை நாகர்கள் சிறைப்பிடித்துச் சென்றதால் மிக்க கவலையடைந்து விநாய கரைத் தொழுது விரதமிருந்தாள். அவளது விரதத்தின் மகிமையால் விநாயகர் அவளின் முன் தோன்றினார். அவரைக் கண்டு மகிழ்ந்த விரதை தனது புத்திரரை நாகரிடமிருந்து மீட்டுத் தரும்படி கேட்டாள். அதற்கு விநாயகர் சொன்னார், "முனி பத்தினியே! சில காலம் செல்ல உனது வயிற்றிலிருந்து ஒரு முட்டை பிரசவமாகும். அதை என்னிடம் கொண்டு வா" என்றார்.

சில காலங்களின் பின் விரதை ஒரு முட்டையை ஈன்றெடுத்தாள். அதை அவள் விநாயகரிடம் கொண்டு சென்று கொடுத்தாள். விநாயகர் அம்முட்டையைத் தன் நகத்தால் கீறி உடைத்தார். அதிலிருந்து ஒரு மயில் வெளிப்பட்டது. அந்த மயிலில் ஏறிச்சென்று நாகர்களை வென்று விரதையின் புத்திரர் களைச் சிறைமீட்டார்.

சூரனுடன் வெற்றிபெற முடியாத முரு கன் சிவனிடம் சென்று வேலைப் பெற்றபோது சிவன் சொன்னார், நீ முன்பு வள்ளியைத் திருமணம் செய்தபோது விநாயகரைத் தொழா மற் சென்றமையால் பல இன்னல்களுக்காட் பட்டாய்; அதன்பின் விநாயகரைத் தொழுதமை யால் அவரின் உதவியுடன் வள்ளியைத் திரு மணம் புரிந்தாய். அதுபோலச் சூரனுடன் போர் புரியுமுன் விநாயகரை வணங்கி அவரது அருளைப் பெறு" என்று சொன்னார். அதன்படி முருகன் விநாயகரிடஞ் சென்று போரைப் பற்றிக் கூறித் தன்னை ஆசீர்வதிக்குமாறு வணங்கினான்.

விநாயகர் மனம்மகிழ்ந்தார். தனது மயில்வாகனத்தை முருகனுக்குக் கொடுத்து விட்டுச் சொன்னார்; "தம்பி, எனது சக்தி முழுவதையும் இந்த மயில் வாகனத்தில் புகுத்தி உனக்கு நான் தருகிறேன். இந்த மயில் உனக்கு வேண்டியவற்றையெல்லாம் தரும்" என்றார். இதன்மூலம் முருகன் விநாய கரது சக்தியையும் பெறுகிறான். அதனால் அவனது ஆறுதிருமுகங்களில் ஒன்றாக விநாயகரின் முகம் உள்ளது. புராணங்களின் கூற்றுப்படி வேலை வணங்குவோர் மூன்று தெய்வங்களினதும் அருளைப் பெறுகின்றனர்.


முருகனது இன்னொரு முகம் மஹா விஸ்ணுவுடையது. அதுபற்றி முன்பு விபர மாகக் கூறப்பட்டது. எஞ்சியுள்ள ஒருமுகம் சூரியனது. முருகனது முகம் சூரியப்பிர காசமானது என்று புராணங்கள் கூறுகின்றன. சூரியப்பிரகாசமான அந்த முகம் சூரியனது ஒளியைவிடப் பிரகாசமானதென்றும், சூரிய கதிர்களைப்போல உலகெங்கும் பரவித் தீமை களை அழிக்குமென்றும், அருளும் என்றும் கந்தபுராணம் கூறுகிறது. அதனால் முருகனை வணங்குவோர் ஆறு தெய்வங்களையும் வணங்குவதாகக் கருதப்படுவர். இதனால்த் தான் முருகன் கலியுகத் தெய்வம் என வர்ணிக்கப்படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகங்களில் பன்னிரு விழிகள் உள்ளன. அவனது கரங்கள் பன்னிரண்டு. முருகனின் பன்னிரு கரங்களைப் பற்றித் திருமுருகாற்றுப்படை பின்வருமாறு கூறுகிறது.


"வான்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கஞ் சேர்த்தியது ஒருகை;
நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை
அசை இயது ஒருகை;
அங்குசங் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடு இன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான் அர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்கப்
பன்னிருகையும் பாற்பட இயற்றி,
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப, வால்வளை ஞரல,
உரம் தலைக் கொண்ட, உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ,
விசும்பு ஆறாக விரை செலல் முன்னி;
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதாஅன்று" (தொடரும்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




# திருவனந்தபுரம்

## புதையல்

### தொகுப்பு: வல்லைச் செல்வம்

கேரள மாநிலம்- திருவனந்தபுரத்தில் உள்ளது ஸ்ரீ பத்மநாதசுவாமி திருக்கோயில். திருச்சி- ஸ்ரீரங்கம் அரங்கநாதரைப்போன்று இங்கும் சயனநிலையில் உள்ள பத்மநாத சுவாமி மீது நம்மாழ்வார் திருப்பாசுரம் பாடிய சிறப்புமிக்க திருத்தலம் இது. இந்தக் கோயில் நிலவறைகளின் உள்ளே கோடி கோடியாகப் புதையல். தோண்டத் தோண்டத் தங்கம். அள்ள அள்ள நகைகள்- பொற்காசுகள்- வைரம்- வைடூரியம்- தங்கக் கலசம்- கிரீடம் எனப் பலவும் பலகோடி மதிப்பிலானவை.

18ஆம் நூற்றாண்டின் பின்னரே சோழநாட்டின் தலைநகராகத் "திருவனந்தபுரம்" வந்துள்ளது. குமரி மாவட்டத்தைச் சேர்ந்த குறுநில மன்னர்கள் பலரதும் ஆளுகைக்குட் பட்டதாகவே இருந்துள்ளது. 1829இன் பின்னர் திருவாங்கூர் மகாராஜா பரம்பரையில் வந்த மார்த்தாண்டவர்மாவும் பின் வந்த அவரது குடும்பத்தினருமே இக்கோயிலைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் மாநிலங்களின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டபோது தமிழ்நாடு குமரி மாவட்டத்தின் சில பகுதிகள் கேரளாவுக்கும், கேரளத்தின் சில பகுதிகள் தமிழ்நாட்டுக்குமாக மாறின. அப்படி மாறிய பகுதிகளுள் திருவனந்தபுரம் பகுதியும் ஒன்று.

திருநெல்வேலி மாவட்டம்- அம்பா சமுத்திரத்தைச் சேர்ந்தவர் சுந்தரராஜன். ஓய்வு பெற்ற நியாயவாதி. வயது முதிர்ந்த மெலிந்த தோற்றம்- நரைத்த தலை- நீண்ட தாடி- இடையில் ஒரு நாலுமுழ வேட்டி- நெற்றியில் நாமம். இதுவே சுந்தரராஜனின் உருவ அமைப்பு. இன்று இந்த கோடானுகோடி புதையல் வெளிவரக் காரணமாக இருந்தவரே இந்தத் தனிநபராவர். இவர் திருவான்கூர் சமஸ்தானத்தாருடன் பல காலமாக மிக நெருக்கமாக இருந்தபோதும், பிற்காலத்தில் அரச குடும்பத்துடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக நீதிமன்றப் படியேறினார். திருவாங்கூர் மகாராஜாவின் பராபரிப்பில் இதுவரை இருந்துவரும் ஸ்ரீ பத்மநாதசுவாமி கோயிலை அரசுடமை ஆக்கவேண்டுமென்பது முதற் கோரிக்கை. பலகாலமாகத் திறக்கப்படாமல் இருக்கும் எல்லா நிலவறைகளும் திறந்து பார்க்கவேண்டுமென்பது இரண்டாவது கோரிக்கை. உச்ச நீதிமன்றம் முதற்கோரிக்கையினை நிராகரித்தபோதும், இரண்டாவதினை ஏற்றுக்கொண்டது. அதன்படி மூன்று ஓய்வு பெற்ற நீதிபதிகள் உள்ளடங்கிய 7பேர் கொண்ட ஒரு குழுவை நீதிமன்றமே நியமனம் செய்தது. அக்குழுவில் ஒருவராக வழக்காளியான சுந்தரராஜனையும் உச்ச நீதிமன்றம் சேர்த்துக் கொண்டது.

நீதிமன்றத் தீர்ப்பின்படி யூன் 27முதல்

யூலை 1 வரையிலான 5 நாட்கள் நிலவறைகள் திறக்கப்படுகின்றன. நீதிமன்ற ஆணை பெற்ற ஏழுபேர் கொண்ட குழுவினர் நிலவறையைத் திறக்கப்போனபோது அதிர்ச்சி அடைந்தனர். மொத்தம் ஆறு பாதாள அறைகளில் முதலாவது அறை திறக்கப்பட்டபோது குழுவினருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. உள்ளே தங்கக்குடைகள், தங்கச்சங்கிலிகள், தங்கக்கட்டிகள், தங்கக் காசுகள் என நிலவறை நிறைந்திருந்தது. 5ஆவது நிலவறையைத் திறப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்ட போதும், வெட்டும் நவீன இயந்திரங்களின் உதவியுடன் இரும்புப் பட்டங்களும், பூட்டுக்களும் வெட்டப்பட்டு திறக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் மண் குவியல்கள் மட்டுமே காணப்பட்ட அந்த நிலவறையின் அடியில் புதைந்து கிடந்தன தங்கக்குவியல்கள். 1200அடி நீளமான தங்கச் சங்கிலிகள், (அதில் ஒன்று 18அடி நீளமானது) 1000கிலோகிராம் எடைகொண்ட தங்கக் கிரீடங்கள், (அனைத்தும் 72 கரட் கொண்டவை) 1000கிலோகிராம் எடைகொண்ட முத்தும்- பவளமும்- வைடூரியமும், 1கிலோ எடைகொண்ட 500 பொற்குடங்கள் ஆகியன கிடைத்திருக்கின்றது. இதைப் போல, "இன்னமும் 3000 பொற்குடங்கள் எங்கே?" எனக் கேட்கிறார் சுந்தரராஜன். ஒரு வேளை 6ஆவது நிலவறையில் இருக்குமோ" எனச் சந்தேகமும் தெரிவிக்கிறார் அவர்.

6ஆவது நிலவறையைத் திறப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தும் முடியாமற் போனதைப் பயன்படுத்தி, திருவாங்கூர் சமஸ்தான மன்னர் குடும்பத்தினர் உச்ச நீதிமன்றத்தில், "6ஆவது நிலவறையைத் திறப்பது தெய்வக்குற்றமாகும்" எனக்கூறி தடை உத்தரவைப் பெற்றனர். இதனால் இன்றுவரை 6ஆவது நிலவறை திறக்கப்படவில்லை. திரவியங்கள் ஆரம்ப மதிப்பிடும் பணி ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் அதன் மதிப்பீடு 700 கோடியாக இருந்து நாளர்க நாளாக அதன் மதிப்பீட்டுப்பெறுமதி கூடி, 1000கோடி, 5000 கோடி, 1லட்சம்கோடி, 5லட்சம்கோடி என்ற அளவைத் தாண்டியுள்ளது. இந்த இடத்தில் கேரள மாநில அரசாங்கத்தின் ஒரு வருட பட்ஜெட் 53,000கோடி மட்டுமே என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இதன் பின்னனியில், திருவனந்தபுரம் மக்கள் கூறும் சில கருத்துக்களை கீழே பார்க்கலாம்.

- நிலவறைகள் திறக்கப்பட்டதே தவறு.
- திறக்கப்பட்டாலும் அதைப் பகிரங்கப் படுத்தியதும் பெரும் தவறு.
- இது ஸ்ரீ பத்மநாத சுவாமியின் சொத்து. இதில் யாருக்கும் பங்கில்லை.
- நகைகள் அனைத்தும் பத்மநாதருக்கு அணிவித்து அழகு பார்க்க வேண்டும்.
- இதனைக் கேரளா அரசு சுவீகரிக்க வேண்டும்.
- ஒரு காலத்தில் தமிழ்நாட்டுடன் இணைந்த பகுதியாக - சேர மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காரணத்தால் இது தமிழ்நாட்டு அரசுக்கே சொந்தம்.
- மத்திய அரசு இதனைப் பொறுப்பேற்று, மக்களுக்காகப் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

இவ்வாறான முரண்பட்ட கருத்துக்கள் மக்கள் கருத்துக்கணிப்பில் வெளியாகின. சரியாக ஒருவாரத்தின் முன்பு 22.09.2011 B.B.C தமிழோசைச் செய்தியில் ஒலிபரப்பப்பட்ட உச்சநீதிமன்ற புதிய ஆணையின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- கேரள அரசே பாதுகாப்பிற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.
- ஓரிரு வாயில்கள் தவிர ஏனைய வாயில்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலவறைகளையும், கோயிலையும் சுற்றி பல அடுக்குப் பாதுகாப்புப் போடப்பட்டு, 24மணிநேரம் கண்காணிக்கக் கூடியதான கமராக்கள் பொருத்தப்படவேண்டும்.
- ஏற்கனவே திறக்கப்பட்ட 5 நிலவறையினுள் உள்ள பொக்கிஷங்களை முழுமையாகக் கணக்கெடுக்கும் பணி உடனேயே ஆரம்பிக்கப்பட வேண்டும்.
- இப்பணிக்காக தேசிய அருங்காட்சியக இயக்குநர் திரு ஆனந்தபோஸ் தலைமையிலான 5பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.
- ஒரு வருடத்திற்குள் கணக்கெடுக்கும் பணி நிறைவு செய்யப்பட வேண்டும்.
- கணக்கெடுக்கும் பணி நடைபெறும் இடத்தில் அதிநவீன நுட்ப கமராக்களில் முழுமையாகப் பதிவு செய்வதற்கு ஏற்ற ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
- நிலவறைப் பொக்கிஷங்களின் பாதுகாப்புச் செலவினங்களாக வருடம் 25 லட்சம் ரூபாவை கோயில் நிர்வாகமும், ஏனையவற்றை கேரள அரசும் பொறுப்பேற்க வேண்டும்.

**இறுதியாக.....**

இந்தப் பொக்கிஷத்தை ஆளப்போவது யார்?

- ஸ்ரீ பத்மநாதசுவாமியா?
- இந்தக் கோயிலைத் தலைமுறைகளாகப் பராமரித்துவரும் திருவாங்கூர் சமஸ்தானமா?
- இவ்வுடமைகள் தமிழ்நாடு மக்களைச் சென்றடையுமா?
- கேரள அரசு சொந்தம் கொண்டாடுமா?

காத்திருப்போம்! முடிவு வரும்வரை.

**பி.கு:-**

இத்தனையையும் வெளிக்கொணர்ந்த தனிநபர் சுந்தரராஜன் ஒரு மாதத்தின் முன்னர் காலமானார் என்பது அதிர்ச்சித் தகவல்.

(பல தடவைகளில் பல்வேறு தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் வெளியான செய்திகள், விபரணச் சித்திரங்கள், மறைந்த சுந்தரராஜனின் பேட்டி, மக்கள் தந்த தகவல்கள் எனப்பலவும் இணைந்த தொகுப்பு இது)

## விபூதி (திருநீறு)

**விபூதி என்பதற்கு ஐச்வர்யம் என்று பெயர். சிவனின் திருமேனியில் தோன்றியது விபூதி. வி- மேலான, பூதி- செல்வம். இதனை அணிபவருக்கு மேலான செல்வத்தைக் கொடுக்கும்.**

**தீவினைகளை நீறு படுத்துவதனால் திருநீறு எனவும், அழியாத செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனவும், ஆன்மாக்களிடம் உள்ள மலமாசைக் கழுவுவதால் சாரமென்றும், அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் பஸிதம் எனவும் பெயர்.**

–நன்றி : கோபுர தரிசனம்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அகவை எட்டில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபம்

**திருமதி ல. கவிதா அவர்கள்**

ஆவரங்கால் என்றதும் அனைவரது நினைவிலும் வருவது சிவசக்தி மணிமண்டபம்தான். இந்த மண்டபத்தின் எழுச்சி ஆவரங்கால் கிராமத்தின் உயர்ச்சியாக நோக்கத்தக்கது. பிரதான நெடுஞ்சாலையில் நெடிதுயர்ந்து காண்போரைக் கவரும் வனப்புடன் திகழ்கிறது மண்டபம். வாழைத் தோட்டமாக இருந்த நிலம் இன்று பலரை வாழ வைக்கும் நிலையமாகச் செயற்படுகின்றது.

லண்டனில் வாழும் தொழிலதிபர் வேலுப்பிள்ளை சிவசுந்தரத்தின் எண்ணத்தில் செயல்வடிவம் பெற்ற இம்மண்டபத்தை 12.07.2003 அன்று அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திறந்து வைத்தார். ஆவரங்காலையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களினதும் பொருளாதாரக் கட்டுமான உயர்வுக்கு இம்மண்டபம் ஒரு மூலதனமாக அமைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இதன் வருவாய் முழுவதும் அறப்பணி களுக்காகவே நல்கப்படுகிறது.

வறுமை ஒழிப்புக்கு இயன்ற உதவிகளை மண்டபத்தார் மேற்கொள்கின்றனர். இப்பிரதேசத்திலுள்ள 40 குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களில் ஒரு அங்கத்தவர் மாத்திரம் உள்ள குடும்பம் எனின் மாதமொன்றுக்கு 500 ரூபாவும் இரு அங்கத்தவர்களெனின் 750 ரூபாவும் அதற்கும் மேல் எனின் ஆயிரம் ரூபாவும் நிதியுதவியாக வழங்குகின்றனர்.

இதைவிட உயர் கல்விக்குத் தகுதி பெறும் பொருளாதார வளம் குன்றிய மாணவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கி ஊக்குவிக்கின்றனர். ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளில் திறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசுகளை வழங்குகின்றனர். பிரதேச மாணவரின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஆன்மீக வினாவிடைப் போட்டியையும் கோலம் போடுதல் பூமாலை கட்டுதல் முதலான போட்டிகளையும் நடத்துகின்றனர். சிவன் தேவஸ்தானத்தினரால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலைக்கான நிதியை வழங்குகின்றனர். நூல் நிலையங்களின் மேம்பாட்டிற்கென நூல்களைக் கொள்வனவு செய்து வழங்குகின்றனர். இதை விட கிராம மேம்பாட்டிற்காக நடத்தப்படும் நிகழ்வுகளுக்காக இலவசமாக மண்டபத்தையும் வழங்கி வருகின்றனர்.

'அறத்தால் வருவதே இன்பம்' என்ற வள்ளுவர் வாக்கை மனதில் நினைந்தவாறு இச்செயற்பாடுகளை முன்னெடுக்கும் மண்டப ஆலோசனைச் சபையின் தற்போதைய தலைவராக முன்னாள் அதிபர் வ.ஆறுமுகம் அவர்கள் செயற்படுகின்றார். வி அண்ட் ரி றஸ்ற் என்ற அமைப்பே மண்டப முகாமைக்குப் பொறுப்பானது. இதன் அங்கத்தவரான வேலுப்பிள்ளை கந்தசாமி மண்டபச் செயற்பாடுகளை வழிப்படுத்தி வருகின்றார். வேண்டிய சந்தர்ப்பங்களில் ஆன்மீகப் பெரியவர்களும் நல்வழிகாட்டி வருகின்றனர்.

அறப்பணிகள் புரிந்து அகவை எட்டைக் கண்ட ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபப் பணிகள் இன்னும் சிறப்படைய நாமும் வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 1. அமுத ரமணன்

சிறந்த புலவரும், பகவான் மீது ஆழ்ந்த பக்தியும் கொண்டவருமான முகவைக் கண்ண முருகனார், ஆன்ம சாதகர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் ஐயங்களை நீக்கி வழிகாட்டியவர். ரமணன் என்ற பெயரைக் கேட்டதுமே உள்ளம் உருகுவாரெனினும், பகவானின் உபதேச மொழிகளை, பகவான் அருளியபடியே பின்பற்ற வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறுவார். முருகனார் பகவான்மீது கொண்ட அபாரத பக்தியின் தீவிரத்தைக் கண்டு அவரை "பகவானின் நிழல்", என்று அன்பர்கள் குறிப்பிடுவர்.



ஒரு சமயம் நான் அவரிடம், எனக்குப் பகவான் அருளிய விசார மார்க்கம் பின்பற்றுவதற்கு மிகவும் அரிதாக இருக்கிறது; எனவே வேறுசில எளிய வழிமுறைகளைக் கையாண்டு மனமுதிர்ச்சி அடைந்தவுடன் விசார மார்க்கத்தைக் கடைப்பிடிப்பேன் என்று கூறினேன். உடனே முருகனார், "இவையெல்லாம் சுற்றிவரும் வழி; பகவானிடம் வந்து அவருடைய உபதேச மொழிகளை அறிந்தபிறகு உடனே ஆத்ம விசாரத்தில் மூழ்கிவிட வேண்டும். பகவானால் ஈர்க்கப்பட்ட ஒருவன், ஏற்கெனவே அவர் காட்டிய நேரான பாதையில் (ஆன்ம விசாரம்) ஈடுபட்டு விடுகின்றான். பகவான் மற்ற வழிகளைக் கூறியது அதைப்பற்றி குறிப்பாக வினவிய சாதகர்களுக்கே தவிர, உனக்கில்லை. அவரிடம் வந்தபிறகு ஏன் மற்ற வழிகளைத் தேடி வீணே அலைய வேண்டும்?" என விடையிறுத்தார்.

இங்ஙனம் விடையளித்த முருகனாரே சில நாட்கள் கழித்து என்னிடம் பேசும்போது, பகவான் திருவுருவைப் பற்றியும் அவரின் திருநாமத்தின் இனிமையைப் பற்றியும் கண்ணீர் வழியப் பின்வருமாறு கூறினார்: ஆமாம்; ஆமாம்; பகவானின் திருநாமம் ஒன்றே நமக்குப் போதும். அவரின் திருவுருவம் நம்மை அவர்பால் ஈர்த்து இறுதியில் அவரிடம் ஒன்றச் செய்துவிடும். அவர் திருநாமம் அனைத்தையும் அரித்தழிக்கக்கூடியது; அவர் உருவமோ எல்லாவற்றையும் உள்ளடக்கக் கூடியது.

அரச குலத்திற் பிறந்த பிரபாவதி ராஜே, தன் திருமணத்திற்கு முன் சிலகாலம் ஆச்ரமத்துக்கு அருகில் தங்கியிருந்தாள். அவள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவித உடையலங்காரத்தில் வருவாள். இன்று பக்த மீரா என்றால் நாளை சகுந்தலை; ஒருநாள் மலையாளப் பெண், மறுநாள் மார்வாரி அழகி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குத் திருமணம் நிச்சயமாகி ஆச்ரமத்தைவிட்டுப் போகும்போது மனமின்றி மிக்க வருத்தத்துடன் போனாள். திருமணம் முடிந்தவுடன், தம்பதி சமேதரராய், பகவான் தரிசனத்திற்காக திருவண்ணாமலை வந்திருந் தாள். தன்னுடன் கொண்டு வந்திருந்த இரு அழகிய ரோஜாப்பூ மாலைகளைத் தன் கைகளால் பகவானுக்கு அணிவிக்க வேண்டு மென்ற ஆசை அவளுக்கு. இந்தமாதிரி செய் கைகளுக்கெல்லாம் அப்பொழுது கடுமையான தடை இருந்தது. ஆனாலும், பிரபாவதிக்குத் தன் கோரிக்கையைக் கைவிட மனமில்லை. தன் இயற்கைப்படி பகவான் மாலையணிய மறுத்து விட்டாலும், அவற்றைத் தாயார் சந்நிதியில் சமர்ப்பிக்கலாமே என்றது* பரிவுடன். ஏமாற்றத்துடன் பிரபாவதி மாலை களை பகவானருகில் சோபாவில் வைத்து, நமஸ்கரித்துவிட்டு வருத்தத்துடன் அழுது கொண்டே ஹாலை விட்டு வெளியேறினாள். சற்றுப்பொறுத்து குஞ்சுஸ்வாமி அவளைக் கூப்பிட்டு, தூரத்திலிருந்தே ஒரு அபூர்வக் காட்சியை சுட்டிக் காட்டினார். அவளுடைய மாலைகளிலிருந்து சோபாவில் உதிர்ந்திருந்த ரோஜா இதழ்களை பகவான் தன் வாயில் போட்டுக் கொண்டிருந்தது! "பகவான் உன் மாலைகளை நிராகரித்தது என்றெண்ணி வருத்தப்பட்டாயே. நீ எவ்வளவு பாக்கியசாலி! பகவான் உன் ரோஜா இதழ்களை உண வாகவே ஏற்றுக்கொண்டு விட்டார்" என்றார் குஞ்சுஸ்வாமி ஆதரவாக. பிரபாவதியின் ஏமாற்றக் கண்ணீர் குதூகலமான இன்ப, ஆனந்தக் கண்ணீராக மாறியது.

தினசரி காலையில் ஆச்ரமத்தில் அருமையான இட்லிகள், சட்னி அல்லது மிளகாய்ப் பொடி- எண்ணெய் அல்லது சூடான சாம்பாருடன் பரிந்து பரிமாறப்படும் இதன் ருசி நம்து "இந்தியாவின் கவிக்குயில்" சரோஜினி நாயுடுவுக்கு, அவர் இங்கு சிலகாலம் தங்கி யிருந்தபொழுது மிகவும் பிடித்துவிட்டது. அவர் காந்திஜியிடம் ஆச்ரம "இட்லி- புராணம்" பாடினார் போலும்! (அந்த இட்லிக்கவிதை நமக்குக் கிடைக்காமல் போய்விட்டதே!) சபர்மதி ஆச்ரமத்தில் எப்பொழுதாவது இட்லி பரிமாறப்பட்டால் காந்தியடிகள் "ஆ! ஆ! ரமணாச்ரம இட்லி!" என்பாராம். இந்த இட்லி ஆச்ரமத்தில் எப்படி ஆரம்பித்தது என்பதைப் பார்ப்போம்.

பகவான் அதிகாலையில் எழுந்து சமையற்கட்டில் காய் நறுக்குவது, உப்புமா கிளறுவது, சமைப்பது என்று எல்லாவற்றிலும் பங்கு எடுத்துக்கொண்டிருந்த காலம் அது. சமையற்கட்டில் கைங்கரியம் செய்து வந்த பக்தை லோகம்மாள், ஒரு சமயம் தன் சொந்த ஊரான தென்காசியையடுத்த பட்டக்குறிச்சி யிலிருந்து நிறைய முதல்தரமான புழுங்கலரிசி அனுப்பியிருந்தார். ஆச்ரமத்தில் சாப்பாட்டிற்குப் பச்சரிசியைத்தான் உபயோகிப்பதால் இதை என்ன செய்வது என்று சாந்தம்மாள் என்ற மற்றொரு சமையலறை சேவார்த்தி பகவானிடம் கேட்டுக்கொண்டு, அப்புழுங்கலரிசியைக் கொண்டு இட்லி மாவு அரைத்து வைத்தார். மறுநாள் காலை பரிமாறப்பட்ட இட்லி எல்லோ ருக்கும் அமிர்தமாய் இருக்கவே, அன்றிலிருந்து ஆச்ரமத்து காலை உணவு இட்லியாயிற்று.

* 'அது நீ' (தத்'வமஸி) என்ற வேதவாக்கில் அது என்பது பரம்பொருளைக் குறிப்பது. பரம்பொருளே ஓர் மனித உருக்கொண்டு பகவான் ரமணராக வந்ததால், அவரைப்பற்றி அடியார்கள் பேசும்போது 'அது' (வந்தது, சென்றது) என்றே குறிப்பிடுவது வழக்கம்.

"அது நீ யென்று அம்மறைகள் ஆர்த்திட்வும்...."

-ஸ்ரீ பகவான் (உள்ளது நாற்பது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் ஆச்ரம இட்லி அதன் நேர்த்தியிலும், சுவையிலும் சிறந்து விளங்குகின்றது. இதற்கு அடிகோலிய பெருமை லோகம்மா பாட்டியையே சாரும்.

அக்னி ஷேத்திரமான அருணாசலத்தின் கோடைவெயிலும் அக்னியேதான்! ஆச்ரம வாசிகள் வேடிக்கையாக "திருவண்ணாமலையில் வேனிற்காலம் பத்துமாதம்" என்பார்கள். அதுவுமின்றி, சித்திரை- வைகாசி மாதங்களில் வெயிலின் கொடுமை இன்னும் கடுமையாக இருக்கும். சூரிய வெப்பத்தினால் பூமி கொதிக்கும். ஆயினும் பகவான் தம் வாழ்நாளில் ஒருபொழுதும் காலணி அணிந்ததில்லை. தினம் தவறாமல் பகல் உணவான பின்பு, பகவான் பலாக்கொத்துக்குப் போய் வருவது வழக்கம். பலாக்கொத்துக்குப் போகும் பாதை மணலை வறுத்துக்கொட்டியது போலிருக்கும். (பகவானின் பாதங்கள் என்றும் காலணி காணாதவை. ஆனாலும் அந்த அழகிய அசைந்தாடும் தளர்நடை சற்றும் மாறாது. வேகம் குறையவோ, கூடவோ செய்யாது. பாறை போன்ற நமது கடின மனங்களில் நடமாடி அந்தப் பாத மலர்கள் மரத்துப் போயினவோ!) சுடும் வெயிலிலோ, கொட்டும் மழையோ எதுவானாலும் பகவானின் நடை ஒரே சீர்தான். ஆனால் உடன் வருபவரை மாத்திரம் "அங்கிருக்கும் மரநிழலில் ஓடிப்போய் நின்றுகொள்", மேல் துண்டைக் கீழே போட்டு அதன்மேல் நின்றுகொள்" என்றெல்லாம் சொல்லிப் பாதுகாப்பார். தான் மட்டும் அந்த நிலையிலும் வேகத்தை மாற்றாமல் நடந்து கொண்டிருப்பார். (ஓயாமல் சுழன்று வழுக்கியோடும் நம் மனங்களில் ஊன்றி நிலை நின்று பழகிய பாதகமலங்களை, வறுக்கும் வெயிலில் சக்தி என்ன செய்ய முடியும்)

மனோநாசம்தான் சாதகனின் குறிக்கோளாக வேண்டுமேயன்றி மனோலயம் அல்ல. மனம் லயத்தில் விழுந்துவிடக்கூடாது என்று பகவான் அடிக்கடி எச்சரிப்பதுண்டு.

சென்னையில் தபால் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த சங்கரானந்தர் என்ற பக்தருக்கு நீண்டகால மந்திர ஜபங்களின் பலனாக லயசமாதி லபித்தது. அதனால் அவருக்கு லௌகீக விஷயங்களில் பற்று விட்டுப் போயிற்று. அடிக்கடி லயத்திற்குப் போய்விடுவதால், அலுவலகத்திலும், வீட்டிலும் அவரால் தன் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற இயலவில்லை. அதனால் அவர் ஆறுமாத விடுப்பு எடுத்துக்கொண்டு ஆச்ரமம் வந்தார். ஹாலில் பகவான் முன் உட்கார்ந்த சிறிது நேரத்தில் அவருக்குப் புற உணர்வு அற்றுப்போயிற்று. மதிய உணவுக்கான மணி அடித்து பகவான் எழுந்த பின்பும் அவர் அசையவில்லை. பகவான் அவரைத் தன் கைத்தடியால் மெல்ல அசைத்து எழுப்பி அவரைச் சாப்பிட அழைத்துச் சென்றது.

பகவான் சொற்படி குஞ்சுஸ்வாமியும், விஸ்வநாத ஸ்வாமியும் சங்கரானந்தரை லயத்தில் ஆழாமல் கருத்துடன் பார்த்துக் கொண்டனர். காலையில் கோயிலுக்குக் கூட்டிச் சென்றும், மாலையில் சமுத்திர ஏரிக்கோ அல்லது வேறெங்காவதோ அழைத்துச் சென்றும், அவர் களைப்பினால் தானாக உறங்கும் வரையிலும் அவரைக் கவனமாகப் பார்த்துக் கொண்டனர். சில நாட்களில் பகவானருளால் அவர் நிலை சரியாகி, வீடு திரும்பி இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பினார். அலுவலகத்தில் பதவி உயர்வும் பெற்றார். இந்தச் சங்கரானந்தர்தான் மாத்ருபூதேச்வரர் ஆலயத் திருப்பணிக்கு வேண்டிய தேக்கு மரப்பலகைகளை வாங்குவதற்காக நிரஞ்சனானந்த ஸ்வாமிகளை (சின்ன ஸ்வாமிகள்) பர்மாவுக்குக் கூட்டிச் சென்றவர்.

பகவான் எப்பொழுதாவது தூங்குவதுண்டா? யாருக்கும் தெரியாது. தூங்காமல் தூங்கி சுகம் பெறுபவருக்கு உறக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டா? அவருக்கே வெளிச்சம். நள்ளிரவு இரண்டு, மூன்று மணிக்கெல்லாம் பகவான் சோபாவில் எழுந்து உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். நம் தாயினும் மிகு தயாபரன் அந்தத் தாயினும் சால அடியாரைப் பரிந்து பேணுவார். "கனவு காண்பது சாதனைக்குத் தடை அதனால் அதற்கு இடங்கொடாமல் நேரே உறக்கத்தில் ஆழ்ந்துவிட வேண்டும்" என்று பகவான் சொல்வதுண்டு. இரவில் பகவானின் சோபாவைச் சுற்றித் தொண்டர்களும், மற்றவரும் ஏன் நாய்களும் கூடப் படுத்துத் தூங்குவது வழக்கம். சில சமயம் இரவில் சோமசுந்தர சுவாமி விசித்திரமாகச் சத்தம் போடுவார். பகலில் குரங்குகளை விரட்டுவதற்காக சத்தம் போடுவதையே கனவிலும் கண்டு, அதே விசித்திர சத்தத்தை எழுப்புவார் போலும்! அப்போதெல்லாம் "சரி, சரி, குரங்குகள் எல்லாம் ஓடிவிட்டன, நீ தூங்கு" என்று சொல்லி ராமகிருஷ்ண சுவாமி அவரைத் தூங்கச் செய்ய முயல்வார். ஆனால் பகவான் அவரைத் தடுத்து சோமசுந்தர ஸ்வாமியை கனவிலிருந்து எழுப்பிவிடச் சொல்வார்.

காலையில் விழிப்பு வந்தபின், மறுபடியும் தூங்கக்கூடாது என்பது பகவானின் அறிவுரை. அதனால் தொண்டர்கள் யாராவது அப்படிச் செய்ய முயற்சி செய்தால், தன் கைத்தடியால் மெல்லத் தட்டி எழுப்பிவிடுவார். மற்றப்படி பகவான் உறங்குபவரை எப்பொழுதும் எழுப்பமாட்டார்.

பேனாவில் மை நிரப்பினாலோ, அல்லது அது புதியதாக இருந்தாலோ, பென்சில் சீவினாலோ, பகவான் அது சரியாக எழுதுகிறதா என்று பரிசோதிப்பதற்காக ஒரு துண்டுத் தாளில் எழுதிப் பார்ப்பதுண்டு. அப்படி எழுதும் வார்த்தை "அருணாசலம்" என்றிருக்கும். இந்த விஷயம் அநேகருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தெரிந்த விஷயம், பகவானுக்கு அருணாசலேசரிடம் இருந்த ஆழ்ந்த ஐக்கிய பக்தி! தன்னிச்சையான பகவானுடைய இந்தச் செயல் அண்ணாமலை உச்சியில் கார்த்திகை தீபம்போல் அதை விளக்குகிறதல்லவா?

குஞ்சுஸ்வாமிகளின் நோட்டுப் புத்தகத்தில் பகவான் வரைந்த அண்ணாமலை படத்தை ஆச்ரம வெளியீடான "மௌண்டன் பாத்" பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். மற்றொரு தொண்டரான சிவானந்த சுவாமி என்னிடம் தந்த அவருடைய நோட்டுப் புத்தகத்திலும் பகவான் வரைந்திருந்த அண்ணாமலையின் படம் இங்கே தரப்பட்டுள்ளது



# சுந்தர மகாலிங்க மலை

இரா. செல்வவடிவேல் அவர்கள்

ஸ்ரீ வில்லிபுத்தூரில் வசித்தவர் விஷ்ணுசித்தர். அங்குள்ள நந்தவனத்தை பராமரித்து பெருமாளுக்கு மலர்மாலை தரும் தொண்டினைச் செய்து வந்தார்.

மதுரையை ஆண்ட வல்லபதேவன் என்ற மன்னனுக்கு பரம்பொருள் யார்? என்ற சந்தேகம் எழுந்தது. இச்சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார் விஷ்ணுசித்தர். இதனால் மனம் மகிழ்ந்த மன்னன் விஷ்ணு சித்தரை கவுரவப்படுத்த நினைத்தான். அவரைத் தனது பட்டத்து யானையில் ஏற்றிக்கொண்டு மதுரை நகரெங்கும் வலம் வந்தான். தன் பக்தனுக்கு அளிக்கப்படும் பெருமையைக் காண்பதற்கு 'பெருமாளும்' அங்கே வந்தார். அவர் கருட வாகனத்தில் காட்சி அளித்தார்.

இந்தக் காட்சியை அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கானோர் கண்டு தரிசனம் செய்தனர். விஷ்ணு சித்தருக்கும் திருமாலின் தரிசனம் கிடைத்தது மகிழ்ச்சியே என்றாலும், பேரழகு மிக்க பெருமாளுக்கு அவரைக் கண்டவர்களின் கண் திருஷ்டிபட்டிருக்குமோ என்ற கவலை ஏற்பட்டது. மனிதனுக்கு மனிதன் திருஷ்டி கழிப்பது வழக்கம். ஆனால் விஷ்ணு சித்தரோ திருமாலுக்கே திருஷ்டி கழித்து 'நீ பல்லாண்டு வாழ்க' என்று பாடினார். தனக்கே திருஷ்டி கழித்த விஷ்ணு சித்தரின் செயலைக் கண்டு மகிழ்ந்த திருமால், "விஷ்ணு சித்தரே நீரே பக்தியில் பெரியவர்" என வாழ்த்தினார். அதுவரையில் விஷ்ணு சித்தர் என அழைக்கப்பட்டவரை பெரியாழ்வார் என திருநாமம் சூட்டி மக்கள் வாழ்த்தினர். இத்தகைய பெருமை பெற்றவரின் அவதாரதலம் ஸ்ரீ வில்லிபுத்தூர்.

ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு சிறப்புச் சேர்க்கும் அடுத்த விடயம் "சூடிக் கொடுத்த அம்மை ஸ்ரீ ஆண்டாள் கோவிலும் அங்குள்ளது. ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு சென்று தரிசனம் செய்வதற்காக மதுரையிலிருந்து புறப்பட்டு விருதுநகர் எனும் ஊருக்கு வந்தேன். அங்கு எனது உறவுகள் "சுந்தர மகாலிங்க மலை" எனும் தலம் பற்றிச் சுவையான பல விடயங்களைக் கூறினார்கள். இதனைக் கேட்டதும் சுந்தர மகாலிங்க மலைக்கு செல்லவேண்டும் எனும் உவகை உந்த மோட்டார் வாகனத்தில் உறவுகளுடன் புறப்பட்டேன்.

விருது நகரிலிருந்து ஸ்ரீ வில்லிபுத்தூரிற்குச் செல்லும் இராஜபாளையம் நெடுஞ்சாலையில் பயணம் ஆரம்பித்தது. இந்தச் சாலையில் விருது நகரிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் சுந்தர மகாலிங்கமலையுள்ளது. இப்பகுதி தமிழ்நாடு வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ளது. பெரிய சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலையினுள் நுழைந்ததும் குளிரான காற்று சுகமாக வரவேற்கும். சாலையின் இருமருங்கிலும் தென்னந்தோப்பு. குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு உணவுப் பொருட்கள் உடையுடன் மலையின் அடிவாரத்தை அடைந்தோம்.

மகாலிங்க மலையின் உச்சியிலிருந்து ஆரம்பிக்கும் நீர் ஊற்று அடிவாரத்தில் வருபவர்களின் கர்லில் பட்டு, காலைச் சுத்தப்படுத்தி மேலே அழைத்துச் செல்வதாக உணர்ந்தேன். மலையில் சுமாரான பாதை கற்களை அடுக்கி அமைக்கப்பட்டுள்ளது. பாதையின் ஒரு பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஓடி வருகிறது. (நீர்வீழ்ச்சி) குறிப்பிட்ட இடங்களில் நீராடுவதற்கு ஏற்ற வகையில் நேர்த்தியாக மலைக்கற்கள் அடுக்கப்பட்டுள்ளன. நீராடுவதற்காக மக்கள் கூட்டம் குவிந்து காணப்பட்டது. மலையின் நடுப்பகுதிக்கு சென்றால் சிறப்பாக நீராடலாம் என முடிவு செய்து மலையில் ஏறத் தொடங்கினோம். சபரிமலைக்கு ஏறுவதுபோல உணர்ந்தேன். மூலிகை மரங்களின் வாசனை ஒருபுறம், மூலிகைச் செடிகளைப் பிடுங்காதீர்கள் எனக் குறிப்பிட்ட பலகைகள் ஒருபுறம். இடையிடையே தங்கிச் செல்வதற்கு அமைக்கப்பட்டுள்ள கல்லாலான மேடைகளில் இருந்து இருந்து ஏறிச் சென்றோம்.

மகாலிங்கமலை கடல் மட்டத்திலிருந்து பல கிலோமீற்றர் உயரத்திலுள்ளது. சுமார் 6 கிலோமீற்றர் தூரம் ஏறிய பின்னர் ரம்மியமான நீர் வீழ்ச்சியொன்று தென்பட்டது. அங்கு நீராடி உணவு உண்ட பின்னர் மலையுச்சிக் கோவிலுக்கு செல்வது என முடிவு செய்து கொண்டு நீர் வீழ்ச்சியில் மூழ்கினோம்.

முனிவர்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள் எனப்படிக்கும்போது எப்படி? இது முடிந்தது என வினா எழும். நீண்ட ஆயுளை அவர்கள் பெற்றிருந்தமைக்கு அவர்களின் நேர்த்தியான வாழ்க்கைமுறையே காரணமாகும். நீர்வீழ்ச்சிகள், (காலை சூரிய உதயத்திற்கு முன்) ஆறுகளில் குளித்தமை ஒரு பிரதானமான காரணமாகும். நீர்வீழ்ச்சியின் நீர், மூலிகை நீராகும். நீரின் நிறமும் நறுமணமும் நம்மைக் கவரும். இத்தகைய நீரில் நீராடி, இந்நீரைக் குடிக்கும்போது ஆயுள் அதிகரிக்கவே செய்யும் மகாலிங்கமலை நீர்வீழ்ச்சியும் புத்துணர்வைத் தந்தது.

நீராடி முடிந்த பின்னர் மலை உச்சிக்கான எமது பயணம் ஆரம்பித்தது. மேலேயிருந்து வழிபாடு முடிந்து கீழே வருபவர்களும், கீழேயிருந்து பொருட்களைத் தலையில் சுமந்துகொண்டு மேலே செல்பவர்களையும் பார்த்த வண்ணம் மலை ஏறினோம். ஒரு படியாக மாலை 4.00 மணியளவில் மலையின் உச்சிக்கு சென்றடைந்தோம்.

மலை உச்சியில் அழகிய சிவன் ஆலயம் அமைந்திருந்தது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஆலயச் சுற்றுப்புறத்தில் இருந்தார்கள். நாமும் உள்ளுணர்வு உந்த ஆலயத்தினுள் சென்றோம். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் அமைக்கப்பட்டிருந்தது. பரிவாரக் கோயில்களாக விநாயகர், முருகன், சக்தி ஆலயங்களும் வைரவர் ஆலயமும் அமைந்திருந்தன. பழங்காலத்து ஆலய அமைப்புமுறை காணப்பட்டது. கற்றூண்கள் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில்கட்டப்பட்ட ஆலயம் என்பதை உறுதிப்படுத்தியது. பாண்டிய மன்னன் ஒருவனால் இவ் ஆலயம் அமைக்கப்பெற்றது எனக் கூறுகிறார்கள்.

ஆலயத்தைச் சுற்றிய காட்டுப்பகுதி பழக்காடாக திகழ்கிறது. மாமரங்கள், கொய்யா மரங்கள், நாவல் மரங்கள், நெல்லிமரங்கள் முக்கியமாகக் காணப்படுகிறது. பக்தர்களுக்கு பசிபோக்கும் அருங்கனியாக அமைவதுடன் இங்குள்ள (நிரந்தரமாக வாழ்பவர்கள்) மக்கள் இப்பழங்களைப் பறித்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். இக்காட்டுப் பகுதியில் கொடிய விலங்குகள் இருப்பதாகவும் சொல்கிறார்கள்.

இந்த ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து கொள்ள முற்பட்டபோது ஆச்சரியமான செய்திகள் கிடைத்தன. ஆலயத்திலிருந்து வடக்கு நோக்கிய திசையில் சமாதிகள் அமைந்திருந்தன. இந்த ஆலயச் சூழலில் வாழ்ந்த 18 சித்தர்களின் சமாதி எனக் கூறப்படுகிறது. இவற்றுக்கு அப்பால் காட்டினுள் கௌபீனம் மட்டும் கட்டிய நிலையில் அடர்ந்த தாடியுடன் பலர் தியான நிலையில் இருப்பதைக் காணமுடிந்தது. இவர்கள் இவ் ஆலயச் சூழலில் நீண்ட காலமாக இருக்கிறார்கள். இவர்கள் பற்றிய எந்தச் செய்தியும் அறியமுடியவில்லை. ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகரின் தகவலின்படி நீண்டகாலமாக இங்கு வாழ்கிறார்கள் என்பதும், சக்தி மிக்கவர்களாக இருப்பதாகவும், ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கொடுப்பதை வாங்குவதில்லையென்றும், காட்டினுள் வாழ்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அமாவாசையன்று இரவு, ஆலயத்தில் விசேட பூசை நடைபெறுகிறது. இப்பூசையில் கலந்து கொள்வதற்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருகிறார்கள். அன்று மட்டும் தவசிகள் ஆலயத்திற்கு வருகிறார்கள். நள்ளிரவு பூசையில் கலந்து கொள்கிறார்கள். பக்தர்களுக்கு வீபூதி, பழங்களை பிரசாதமாக வழங்குகிறார்கள். ஆனால் யாரும் பேசுவதில்லை. மௌனமே மொழியாகும்.

அவர்களைக் காணவேண்டும் என்ற அவாவில் சமாதிகள் அமைந்துள்ள சூழலுக்கு சென்றேன். சிலர் நிஷ்டையில் இருந்தார்கள். வேறு சிலரின் செய்கைகள் வினோதமாக அமைந்திருந்தன. ரிஷிமூலம் நதிமூலமும் அறியமுடியுமா?

ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் இரவு அங்கு தங்கி அடுத்தநாளே கீழே செல்கிறார்கள். உணவு சமைத்து வழங்கும் தொண்டினைச் சில அன்பர்கள் செய்கிறார்கள். இரவு மலையின் உச்சியில் ஆலயச் சூழலில் தங்கியிருந்த அனுபவம் மெய்சிலிர்க்கச் செய்கிறது. சுந்தர மகாலிங்கமலை எனப் பெயருக்கு ஏற்ப அழகான ஆனந்தமான உணர்வுகளை அள்ளிவழங்கும் மலையில் பல விடயங்கள் புதைந்து கிடக்கின்றன என நினைக்கின்றேன்.




**98 வயதை நிறைவு செய்த முதுபெரும்புலவர் சிவத்திரு வை.க. சிற்றம்பலம் அவர்களும், 95 வயதை நிறைவுசெய்த செந்தமிழ் ஞாயிறு சிவத்திரு கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.**

**-சந்நிதியான் ஆச்சிரமம்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

## சந்நிதியான் ஆச்சிரமம் [illegible]

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன். அந்தளவிற்கு "சந்நிதி எனில் அன்னதானம், அன்னதானம் எனின் சந்நிதியே" என அனைவரும் உச்சரிப்பதற்கு ஏதுவாக செல்வச்சந்நிதிச் சுற்றாடலில் 40க்கும் மேற்பட்ட மடங்கள் ஒருகாலத்தில் இயங்கி வந்தன. திருவிழாக்காலங்களிலும் ஏனைய விசேட நாட்களிலும் எல்லா மடங்களிலும் பசியாற அன்னதானம் வழங்கப்பட்டு வந்தபோதும், ஆற்றங்கரை ஓரமாக சந்நிதிக்குத் தெற்கே அமைந்திருந்த "ஆனந்தா ஆச்சிரமம்" எப்பொழுதும் பசியாறச் செல்லும் வகையில் சமைத்து வந்தமையினால், ஆனந்தாச்சிரமம் அதன் அன்னதான சேவையினாலும் ஒழுங்கான நிர்வாகத்தினாலும் முதன்மைபெற்று விளங்கியது. 1940களில் அமரர் மயில்வாகனம் சுவாமிகளினால் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 40 ஆண்டுகள் பணிசெய்த பின்னர் மயில்வாகனம் சுவாமிகள் அமரத்துவம் அடைந்தார். அதன் பின்னரும் தனது சிறிய பணியினைத் தொடர்ந்த ஆனந்தா ஆச்சிரமம் உட்பட அநேகமாக அனைத்து மடங்களுமே போர்ச்சூழலின் காரணமாக சேதமுற்று இயங்கமுடியாநிலை வந்ததுடன் சந்நிதிச் சுற்றாடலில் வசித்துவந்த மக்கள் அனைவரும் வெளியேற முருகன் மட்டுமே தனித்திருக்க வேண்டிய ஒரு நிலையும் வந்தது. ஓரளவு நிலைமைகளில் மாற்றம் வர சந்நிதிச் சுற்றாடல் படிப்படியாக மீளவும் மக்கள் நடமாட்டம் காண ஆரம்பித்தது.


மயில்வாகனம் சுவாமிகள்

**சந்நிதியான் ஆச்சிரமம் தோற்றமும் வளர்ச்சியும்:**

ஆனந்தாச்சிரமத்தின் நிர்வாகியான மயில்வாகனம் சுவாமிகளுடன் வாழும் இடமாக இருந்த திரு மோகனதாஸ் அவர்கள், மயில்வாகனம் சுவாமிகளையே தமது குருவாகக் கொண்டும், அன்னாரது அறிவுரையின் பிரகாரமும் 1988 பங்குனி உத்தர நன்னாளில் சந்நிதியான் வாசலுக்கு நேராக உள்ள வீதியில் "அரசம்மா மடத்தில்". "சந்நிதியான் ஆச்சிரமம்" தோற்றம் பெற்றது. சந்நிதியான் ஆச்சிரமத்து ஆரம்பகாலம் மிகவும் சோதனையான காலமாக இருந்தபோதும், மயில்வாகனம் சுவாமிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிவும் அனுபவமும், மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் விடாமுயற்சியும் படிப்படியாக ஆச்சிரமம் தனது பணியில் முன்னேற்றம் கண்டது.




1990களில் சந்நிதியான் ஆச்சிரமம் தமது நித்திய அன்னப்பணியினை ஆரம்பித்த காலம்முதல், முருகனைத் தரிசிக்கவரும் அடியார்கள் எந்நேரமும், எத்தனை பேராயினும் பசியாறிச் செல்ல முடிந்தது. கோயில் சுற்றாடலில் "முருகனே கதி" என இருந்த வயதுமுதிர்ந்த பலரும் நித்தமும் உணவுபெற்று வந்தனர். ஆச்சிரமத்துக்கு வரும் அடியார்கள் பலரும் கொடுத்துதவ ஆதரவு பெருகிவர நித்திய அன்னப்பணி தொய்வின்றி சிறப்பாக நடந்தேறி வந்தது.

மறைந்த முருகேசு சுவாமிகளும், இன்றும் சிலரும் கொடுத்த தளராத ஊக்கத்தினாலும் பெருந்தகை ஒருவரின் காணி நன்கொடையினாலும், சந்நிதியான் ஆச்சிரமம் தற்போதிருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. முருகேசு சுவாமிகளதும் அவரது தொண்டர்களதும் பெரும் உடல் உழைப்பினால் வளவுக்குள் புதிய கட்டிடங்கள் உருவாகி 05.05.1995இல் தற்போதைய இடத்திற்குச் சந்நிதியான் ஆச்சிரமம் இடம்மாறி பணிகளைத் தொடர்ந்தது. தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அதற்கேற்றாற்போல் கட்டட விஸ்தரிப்பு பணிகளும் முனைப்புப் பெற்றன. புதிய இடமாற்றத்திற்கு மூலமும் காரணமுமாகவிருந்த முருகேசு சுவாமிகள் 17.03.1997இல் சிவபதமெய்தினார். அவரது மறைவுக்குப் பின்னர் ஆச்சிரமத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்கு "முருகேசு சுவாமிகள் நினைவு மண்டபம்" என மோகனதாஸ் சுவாமிகள் பெயர் சூட்டி, அன்னாருக்குத் தமது நன்றியினைக் காண்பித்தார். இந்த மண்டபத்திலேதான் இந்நாளில் பிரதி வெள்ளிதோறும் அறுபத்துமூவர் குருபூசையும் மகேஸ்வர பூசையும் நடைபெற்று வருகிறது.

**நித்திய அன்னப்பணி:**

நித்திய அன்னப்பணியே சந்நிதியான் ஆச்சிரமத்தின் மையம். இதுவே மூல பணி. முதற்பணி. "முருகன் காலடியே சரணம்" எனக் கோயிலிலும் கோயிற் சுற்றாடலிலும் நிரந்தரமாகத் தங்கியுள்ள 73 முதியவர்கள் இந்த நித்திய அன்னப்பணியினால் பயன்பெறுகிறார்கள். அரசமர மடத்தில் ஆரம்பமான இப்பணி சந்நிதியான் ஆச்சிரமத்திலும் தங்குதடையின்றித் தொடர்கிறது.


குடும்பங்களினால் கைவிடப்பட்டு, உயிர்வாழ வழிதேடி முருகனையே தஞ்சமென வந்து தங்கியுள்ள இவர்களுக்கு மூன்றுவேளை உணவு- இரண்டு நேர தேநீர்- வருடத்தில் இருமுறை உடுபுடவைகள் வேட்டிகள், மாரிகால ஆரம்பத்தின் முன்னர் போர்வைகள் என சந்நிதியான் ஆச்சிரமம் இவர்களைப் பராமரித்து வருகிறது. தினமும் மதியநேர உணவு முடிந்து வெளியே வரும்போது அவர்கள் முகங்களில் நிறைந்த மகிழ்ச்சியும் திருப்தியும்



காணப்படுவதை நாம் கண்ணாரக் காணலாம். கோயிலடியிலிருந்து ஆச்சிரமத்துக்கு நடந்துவர முடியாத நாலைந்து பேருக்காக, அவர்கள் உணவுக்காக அமர்ந்திருக்கும் வரிசையிலேயே அடுக்கப்பட்டிருக்கும் அவர்களது தட்டுகளில் உணவை இட்டு அவர்களது இருப்பிடங்களுக்கே அனுப்புவதையும் நாம் தினமும் காண்கிறோம்.

இந்த 73பேரைத் தவிரவும், சந்நிதியானைத் தினமும் தரிசிக்கவரும் அடியார்கள்- அது ஐந்து பேராயினும் சரி- ஐம்பது பேராயினும் சரி- ஐந்நூறு பேராயினும் சரி அன்னதானம் அளித்து பசிபோக்கும் அட்சய பாத்திரமாக சந்நிதியான் ஆச்சிரமம் சேவையாற்றி வருகிறது.

**சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தோற்றம்:**



அரசம்மா மடத்தில் ஆச்சிரமம் தோற்றம்பெற்ற காலம் முதல் வெள்ளிக்கிழமைகளில் வள்ளியம்மன் வாசலில் உள்ள பூவரச மரத்தடியிலும், பின்னர் பிள்ளையார் வாசலிலுமாக பஜனை நிகழ்வுகள் நடந்துள்ளன. அதிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, சந்நிதியான் ஆச்சிரமத்து வளாகத்திலுள்ள உள்ள "பேட்போர் கூடத்துக்கு" இந்தப் பஜனை நிகழ்வுகள் மாற்றப்பட்டன. பிரதி வெள்ளிதோறும் நடைபெறும் இந்நிகழ்வுகளை ஒருங்கமைத்து- திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்காக ஆச்சிரம சுவாமிகளால் மேற்காணும் "சைவ கலை பண்பாட்டுப் பேரவை" தோற்றம் பெற்றது. இந்தப் பேரவையின் தோற்றமானது வெள்ளி நிகழ்வுகளில் பல மாற்றங்களைச் செய்ததுடன் பஜனை, சொற்பொழிவு, வில்லுப்பாட்டு, கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் எனப் பலவிதமாகவும் வளர்ச்சி கண்டது. அனுபவம் வாய்ந்த பலருக்கும் இடமளிப்பதுடன், புதியவர்களையும் அழைப்பித்து ஊக்கப்படுத்தி நிகழ்வுகளைத் திறம்பட நடாத்தி வருகின்றனர் பேரவையினர்.

**ஞானச்சுடர்:**


சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பிந்திய பரிணாமமே "ஞானச்சுடர்" வெளியீடாகும். சந்நிதி முருகன் புகழ் மணக்க சைவமும் தமிழும் தழைத்தோங்க தனித்துவமான ஒரு ஆன்மீக சஞ்சிகையாக, 1998 தை மாதத்தில் "ஞானச்சுடர்" முதற்பிரதி தோற்றம்பெற்று



பிரகாசிக்கிறது. ஆரம்பத்தில் சாதாரண அச்சுமுறையில் 250 பிரதிகளுடன் வெளியாகிய மாதாந்த ஆன்மீக சஞ்சிகையான "ஞானச்சுடர்" இன்று 2750 பிரதிகளாக கணனி அச்சுப்பதிப்பில் அழகிய படங்களுடன் வெளியாகிறது. அச்சேறும் 2750 பிரதிகளில் 250 பிரதிகள் வெளிநாட்டு சைவ அபிமானிகளுக்கு தபால்மூலம் அனுப்பப்படுகிறது என்பது குறிப்பிடப்பட




வேண்டிய அம்சம். ஞானச்சுடரில் ஆரம்பம் முதலே விளம்பரம் எதுவும் வெளிவந்ததில்லை. இதன் பிரதிகளைக் கடைகளில் வாங்கமுடியாது. மலரின் ஆசிரியர் என்றொருவர் இல்லை. ஆனால் ஆக்கங்களைப் பரிசீலித்து முடிவு செய்ய ஆச்சிரம அன்பர்களின் தலைமையில்



ஒரு மலர்க்குழு இயங்கி வருகிறது. ஆச்சிரம சுவாமிகளின் மேற்பார்வையில் பேரவையினர், ஆக்கங்களை அறிப்பேர். அச்சுக்கூடத்தில் பணிபுரியும் ஆண், பெண் ஊழியர்கள் அனைவரதும் அயரா உழைப்பின் யதார்த்தப் பிரசவமே "ஞானச்சுடர்" வெளியீடாகும். 12 ஆண்டுகள் கடந்த நிலையில் இதுவரை 165முறை "ஞானச்சுடர்" சுடர்விட்டுப் பிரகாசித்துள்ளது.

இளமை ததும்பும் முருகன் திருத்தோற்றம். "ஞானச்சுடர்" அட்டையின் மையத்திலும், பேரவையின் இலச்சினையும்- மறைந்த மயில்வாகனம் சுவாமிகளின் உருவப் படமும் இரு மருங்குமாக அமைப்படம் ஜொலிக்கிறது. மயில்வாகனம் சுவாமிகளின் உருவத்தை அட்டையில் நிரந்தரமாகப் பொறித்திருப்பது, சந்நிதியான் ஆச்சிரமத்து சுவாமிகள் அவர்மீது கொண்டுள்ள பற்று- பாசம்- குருபக்தி ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.


**இலவச வைத்திய சேவை**

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஆற்றப்படுகின்ற நித்திய அன்னப்பணிக்கு இணையாக இலவச மருத்துவ சேவையும் முதன்மை பெறுகிறது. சந்நிதியான் ஆலயத்தில் நிரந்தரமாகத் தங்கியுள்ள அடியார்களிடமிருந்தும், ஆச்சிரமத்தை அடுத்துள்ள அயலூர்களிலிருந்தும் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளர்கள் வாராந்தம் 140பேர் வரை இந்த மருத்துவ சேவையினால் பயனடைகின்றனர். 2011 ஒக்டோபர் மாதத்துடன் ஆச்சிரம மருத்துவ சேவைக்கு அகவை பத்து நிறைவடைகிறது. வாரத்தில் இரண்டு நாட்கள் (புதன், ஞாயிறு) நடைபெறும் இந்த இலவச மருத்துவ சேவைப்பணி ஆச்சிரம வளாகத்திலேயே ஆரம்பத்தில் நடைபெற்று வந்தது. 01.01.2010 ஜனவரி 1ஆம் திகதி முதல் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு தெற்காக 500மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்ட புதிய மருத்துவசேவைக் கட்டடத்துக்கு இடம்மாறியது.



காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு மகேஸ்வரன் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு ஆற்றியுள்ள அளப்பரிய உதவிகளை நினைவு கூர்ந்து, அக்கட்டடத்துக்கு "மகேஸ்வரன் ஞாபகார்த்த இலவச மருத்துவசேவைக் கட்டடம்" எனப் பெயர் சூட்டியுள்ளார் ஆச்சிரம சுவாமிகள். ஆரம்ப காலத்தில் வைத்திய அதிகாரி திரு சி. கதிரவேற்பிள்ளை அவர்களும், அதைத் தொடர்ந்து வேறு சில வைத்தியர்களும் மருத்துவ சேவைப்பணி செய்தனர். தற்போது பல வருடங்களாக புதன்கிழமைகளில் டாக்டர் பொன். சின்னத்தம்பி அவர்களும், ஞாயிற்றுக்கிழமைகளில் டாக்டர் சி. சிவயோககுரு அவர்களும் உயர்ந்த அர்ப்பணிப்புடன் மருத்துவப் பணியாற்றி வருகின்றனர். நோயாளர்களுக்கான எந்தவொரு மருந்தும் வெளியே வாங்கும்படியான மருந்துச் சிட்டை எழுதி வழங்கும் வழக்கம் இங்கில்லை. பெறுமதிமிக்க மருந்துகள் உட்பட அனைத்து மருந்துகளும் இலவசமாகவே வழங்கப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.


வடமாகாண அரசின் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையினால், கடந்த சில மாதங்களாக ஒன்றுவிட்ட ஒரு செவ்வாய்க்கிழமைகளில் சித்த ஆயுர்வேத வைத்திய சிகிச்சை இதே மருத்துவ சேவைக் கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. மருந்துகள்- எண்ணெய் வகைகளுடன் வைத்தியர்கள், தாதியர்கள் என அனைவருமே அவர்களது அம்புலன்ஸ் வாகனத்திலேயே வருகை தந்து பணி செய்கின்றனர். இந்த சேவையினாலும் பலரும் பயன்பெற்று வருகின்றனர்.

**குருபூசைகளும் வழிபாடுகளும்:**

நால்வர் குருபூசை தினங்கள், மறைந்த மயில்வாகனம் சுவாமிகள் குருபூசைதினம், முருகேசு சுவாமிகள் குருபூசை தினம் ஆகியனவை சிறப்புறக் கொண்டாடப்படுகிறது. இவற்றைவிட பிரதி வெள்ளிதோறும், முருகேசு சுவாமிகள் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறுகின்ற அறுபத்துமூவர் மகேஸ்வர பூசை மகத்தானது. 63 நாயன்மார்களாக 63பேரும், அவர்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகனும் ஒருவராக 64பேர் மண்டபத்தில் அமர்த்தப்பட்டு, நெய் வேத்தியம் படைத்து, தீபம் காட்டி, தெட்சணை வைத்து, சிவபுராணம் ஓதி நடைபெறும் பூசை முறை பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்.

**விழாக்களும் பரிசில்களும்:**



ஆண்டுதோறும் வைகாசிப் பெருவிழா, திருவாசக விழா, அருணகிரிநாதர் விழா, சேக்கிழார் விழா போன்ற விழாக்கள் பலவும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. வெள்ளி வாரந்த நிகழ்வுகளின் போதுமசரி, இவைபோன்ற விழாக்களிலும் சரி கற்றறிந்த பலரதும் சொற்பொழிவுகள் விசேட அம்சமாக இடம்பெறுவது வழமை. இதைவிட இவ்விழாக்களை முன்னிட்டு கல்லூரி மாணவர்களிடையே நடாத்தப்படுகின்ற பண்ணிசைப் போட்டி, பேச்சுப்போட்டி, திருமுறைகள் போட்டி என்பவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குகொள்ளும் வாசகர் போட்டி ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் நடைபெறுகிறது. வருடம் முழுவதும் வெளியாகும் ஞானச்சுடர் புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் கேள்விகளுக்கு வாசகர்கள் பதிலளித்து, சிறந்த பரிசில்களைப் பெற்று மகிழ்கிறார்கள்.

**விருது வழங்கல்:**

வைகாசிப் பெருவிழாக் காலங்களில் பல்துறை சார்ந்த சமூகப் பிரமுகர்களும், கற்றறிந்த பெரியோர்களும் விசேடமாகக் கௌரவிக்கப்படுகின்றனர். 1993 முதல் 2006 வரை தொடர்ந்த இந்த சமுதாயப் பிரமுகர்களுக்கான கௌரவிப்பில் இதுவரை எட்டுப்பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர். "ஞானச்சுடர்" சஞ்சிகைக்கு ஆக்கங்களை அளித்துவரும் கட்டுரையாளர்களுக்கான கௌரவிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி மாதமும் ஞானச்சுடர் வெளியீட்டு வேளையில் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை நிகழ்த்துவோருக்கான கௌரவிப்பு, வாராந்த நிகழ்வுகளில் பங்குகொண்ட பல்துறைப் பிரமுகர்களுக்கான கௌரவிப்பு, வாசகர் கௌரவிப்பு என இவை ஆண்டுதோறும் தொடர்கின்றன. இந்த வேளைகளில், கௌரவிப்புக்கான பட்டங்களும் அளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்படுகின்றனர்.



**புத்தக வெளியீடுகள்:**

அறிஞர் பெருமக்களின் சமயம் சார்ந்த நூல்கள் பலவும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஆச்சிரம வேண்டுகோளின் நிதியில் இதுவரை பத்துக்கும் அதிகமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. "ஞானச்சுடர்" வெளியீட்டு நிகழ்வினைப் போன்று வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆகியன நிகழ்த்தப்பட்டு, நூலாசிரியர்கள் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்படுகின்றனர்.

**சமுதாயப்பணி:**

நித்திய அன்னப்பணி, இலவச மருத்துவசேவை போன்றே மக்கள் சமுதாயப் பணியும் வருடம்பூராவும் தொடர்கிறது. இந்தச் சமுதாயப் பணியானது இன்று பல்வேறு உட்பிரிவுகள் கொண்டதாகப் பரிமாணம் பெற்றுள்ளது. கண்களில் குறைபாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குதல், வசதிகுறைந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு துவிச் சக்கரவண்டி வழங்குதல், உயர் கல்வி (பல்கலைக்கழக) மாணவர்களுக்கான மாதாந்த நிதியுதவி, வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களுக்கு தனியார் கல்விப் போதனைக்கான மாதாந்த உதவி எனப் பலப்பல.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதைவிட, 60க்கும் அதிகமான குடும்பத்தினர் பிரதி மாதமும் கடைசி வெள்ளியன்று மாலை வேளையில் தங்களுக்கான மாதாந்த (அரிசி முதலான) உணவுப் பொருட்களுடன் பணமும் பெற்றுச் செல்கின்றனர். அந்தந்த குடும்ப வருமானம், வீட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கை, குழந்தைகளின் தொகை ஆகியவற்றைப் பொறுத்து இந்த உணவுப் பொருட் பங்கீடும் பணத்தொகையும் வித்தியாசப்படுகின்றன.

உதவிக்கான கோரிக்கை கிடைக்கப்பெறுமிடத்து அந்தந்த கோரிக்கை சம்பந்தமான நம்பகத்தன்மை பற்றி குடும்பத்தாரிடமும் அயலவர்களிடமும், பொது நிறுவனப் பிரதிநிதிகளிடமும் விசாரித்து அறிந்துகொண்ட பின்னரே விடயமாக அவை தீர்மானிக்கப்படுகிறது. மாணவர்களாயின் கல்லூரி அதிபர்கள்- வகுப்பாசிரியர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு தகவல்கள் பெற்றபின்னரே உதவிகள் முடிவுசெய்யப்படுகின்றன.

யுத்த சூழ்நிலை காரணமாக பல தடவைகள் வடமராட்சிக்கு உள்ளே இடப்பெயர்வுகள் நடைபெற்றபோதும், 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் அனர்த்த வேளையின்போதும் பல நாட்கள் தொடர்ந்து சமைத்த உணவுப் பொட்டலங்கள் வழங்கி சந்நிதியான் ஆச்சிரமம் பசி போக்கியமையை பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் நினைவு கூருகிறார்கள்.

**நிறைவாக....**

இவையும் இன்னும் பலவுமாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் சேவைகள் அனைத்துக்கும் மூலகாரணன் சந்நிதி முருகனே! அவனது திருவருட்கடாட்சம், ஆர்வமுள்ள அன்பர்கள் பலரையும் தூண்டி பணமும்- பொருளுமாகக் கிள்ளிக்கொடுக்க, ஆச்சிரமத்து சுவாமிகள் (அன்னதானமாகவும், அனைத்துவகை உதவிகளாகவும்) அள்ளிக் கொடுக்கிறார். தினமும் ஆச்சிரம வளாகத்திலுள்ள பூசையறையில் சுவாமிகள் பூசை செய்யும் போதும்சரி, ஒவ்வொரு வெள்ளியன்றும் நடைபெறும் மகேஸ்வரபூசை வேளையில் தனது வெண்கலக் குரலில்



சிவபுராணமும், தோத்திரங்களும் பாடும்போதும்சரி பார்த்திருப்போர் பரவசமடைகின்றனர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பீடாதிபதி ஸ்ரீ "அமுதகலாயோகி" திரு மோகனதாஸ் சுவாமிகள் எப்பொழுதுமே, "இன்னும் என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?" என்ற சிந்தனை வயப்பட்டவராகவே இருப்பார். "சுவாமி! இந்த விடயம் பற்றி என்ன செய்யலாம்?" என்று வினவினால், "எல்லாம் அவன் பார்த்துக் கொள்ளுவான்" என்பதே பதிலாக வரும். அவர் அடிக்கடி உச்சரிக்கும் இந்த நான்கு வார்த்தைகளும் வெறும் சொல்லடுக்கு அல்ல. எப்பொழுதுமே அதிர்வினை ஏற்படுத்துகின்ற "மந்திர ஒலி"யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத வாராந்த நிகழ்வுகள்

07.10.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- செல்வி விஜித்தா விஜயபாலா (இசை ஆசிரியர்)

(பக்கவாத்திய சகிதம்)

14.10.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மனிதப்பிறவியின் மாண்பு"

வழங்குபவர் :- சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

21.10.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

28.10.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஐப்பசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- சி. பத்மநாதன் J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :- சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்

[ஆசிரியர்]

ஐப்பசி 166ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org